புதுமை

544

544
1

FEB

JL
ЛУИ, NS7PI
NS7:1.7
197690

25 நயா பைசா

PUTHUMAI பிப்ரவரி 1 1958

மஹாசிவராத்திரி முதல்
ஸ்ரீலக்ஷ்மி பிக்சர்ஸ்
நல்ல இடத்து சம்மந்தம்
டைரக்ஷன்..... மூலக்கதை....... திரைக்கதை, வசனம்..... சங்கீதம்
K.சோமு.....V.K.ராமசாமி.....A.P.நாகராஜன்.....K.V.மஹாதேவன்
.....ஸ்டூடியோ.....
.... தயாரிப்பு....
பிலிம்சென்டர்...நியூடோன் - V.K.ராமசாமி..... A.P.நாகராஜன்
BEE BEES
BALU BROS

Telegrams : 'PIONEER' Coimbatore.

Telephones : 160, 361.

THE COIMBATORE PIONEER MILLS LTD.,

P. B. NO. 4.

PEELAMEDU :: COIMBATORE

FOUNDER PARTNERS:

Messrs. P. S. G. & SONS.

No. of Spindles 27,226

Manufacturing 60's, 80's and 100's Combed Yarn

Staff Employed 41.

Labourers Employed 934.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 4 - FEB 1958 MADRAS

'B' Mills, Perianaickenpalayam

No. of Ring Spindles ... 22,000

Manufacturing 20's to 40's Yarn.

Staff Employed: 6.

Labourers Employed: 320.

Practical Training Being Given to :

DIPLOMA STUDENTS IN:

L.T.M., L.M.E., L.E.E.,

தந்தி : 'ஜுவல்லர்ஸ்' போன் : 49



பவுன், தங்கம், வெள்ளி,

வைர நகைகளுக்கு

எல். கே. எஸ். ஜுவல்லர்ஸ்

திருச்சிராப்பள்ளி

கிளைகள் : சென்னை, காயல்பட்டணம்,

யாழ்ப்பாணம் & கொழும்பு.

வெற்றி !
வெற்றி !!
எழுதிக் குவித்த விடைத் தாள்களை
'பளபள' வென்று மின்னும்,
என்றுமே துருப்பிடிக்காத
உறுதியான
'பெல்' குண்டூசியால்
இணைத்ததுமே,
பரீட்சையில் என் வெற்றி
உறுதியாகி விட்டதே !
சுபாசிங்.
'பெல்' குண்டூசிகள்
THE BELL PRODUCTS,
PALAYAMKOTTAI
(S. INDIA)

உபயோகத்தில் சிறந்தது
K.S. சுப்பையா விலாஸ் பீடி
பண்டல் லேபில் ரிஜிஸ்டர் நீர் :-103718
K.S பீடி
ரிங் லேபில் ரிஜிஸ்டர் நீர் :-142023
PROP:- சுப்பையா விலாஸ் பீடி தொழிற்சாலை தூத்துக்குடி
திருநெல்வேலி ஜில்லா

ஜெயா டயர் ரீடிரேடிங்,

பெரியகுளம், மதுரை மாவட்டம்.

உங்கள் டயர்களை குறைந்த செலவில், நவீன முழு வட்ட இயந்திரங்களைக் கொண்டு அனுபவ மிக்க ஆட்களால் இயங்கும்

ஜெயா டயர் ரீடிரேடிங்கில் புதுப்பியுங்கள்.

புரொப்ரைட்டர்ஸ் :

S. G. ஜெயராஜ் நாடார் & சன்ஸ்,

பெரியகுளம், மதுரை மாவட்டம்.

எங்கள் கம்பெனியில் நயம் அரைத்த உப்பு
நயம் பருமணி உப்பு (97% C. H.)
கல்கத்தா, பீகார், ஒரிஸா, மத்திய
பிரதேஷ், கேரளா முதலிய
இடங்களுக்கு சப்ளை செய்து
கொண்டிருக்கிறோம்.

தேவைப்படுகிறவர்கள் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

மச்சாது சால்ட் கம்பெனி

18-A, பீச் ரோடு, தூத்துக்குடி.

Phone : 1 & 333 **Tel. Address: MACSALT**

பொருளடக்கம்

"மாற்றி வையம் புதுமை யுறச்செய்து
மனிதர் தம்மை அமரர்க ளாக்குவோம்"

மணி 1	பிப்ரவரி 1958	ஓசை 7

பக்கம்

அரசியல் :

காதலோ, காதல்!		...	4
முடிந்ததா மொழிப் பிரச்னை ?		...	5
டிடி.கே. செலாவணி யாத்திரை முதல் முந்த்ரா வரை		...	8
அன்றும் இன்றும்...		...	11

தொடர் கதைகள் :

காமனை வென்ற கண்	சுகி	...	47
வள்ளியின் உள்ளம்	கு. ப. சேது அம்மாள்	...	17

கதைகள் :

கருணை செய்த செயல்	புஷ்யன்	...	34
கடவுளின் கவலை	புதுப்பித்தன்	...	63
திலகமணியின் கதை	சண்முகசுந்திர பாண்டியன்	...	69
காதலிக்கத் தெரியாதவன்	பி. ராஜகோபாலன்	...	79
தோழிக்கு	திருச்சி வாசுதேவன்	...	87

நாடகம் :

இனமாம், இனம்!	ராஜன்	...	29

கலைப்பகுதி :

தை பிறந்தால் வழி பிறக்கும்		...	14
சிப்பிச் சிற்பங்கள்		...	13
நாட்டியம்	ரஞ்சன் பி.ஏ. எம்.லிட்.	...	93

மற்றவை :

கௌஹாத்தி காட்சிகள்		...	12
இயற்கை வைத்தியம்	என். எஸ். சுப்பையர்	...	75

'புதுமை'யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

காதலோ, காதல்!



197690

புதுமை

ஆசிரியர் :
கோசல்ராம்.

நிர்வாக ஆசிரியர் :
P. X. ரங்கசாமி, B.A.

சென்னை — தை—மாசி — பிப்ரவரி 1958

கௌஹாத்தி காங்கிரஸ் முடிந்து விட்டது. அத்துடன் ஆட்சி மொழிப் பிரச்னையும் முடிந்து விட்டது. பாரத நாட்டின் ஆட்சி மொழி பற்றி, பல வேறு தலைவர்களும் வெளியிட்டு வந்த முரண்பாடான கருத்து வேறுபாடுகளினால், பொது மக்கள் அனைவரும் கௌஹாத்தி காங்கிரஸ் முடிவுகளை ஆவலோடு எதிர்பார்த்தார்கள்.

தென்னக மக்கள், குறிப்பாகத் தமிழர்கள், இந்த முடிவுகளை சிரத்தையோடு கவனித்தார்கள்.

1965 கெடு வற்புறுத்தப்பட மாட்டாது. இந்தி வளம் பெற்று ஆட்சி அலுவல்களுக்குத் தகுதி பெறும் வரை ஆங்கிலம் நீடிக்கும். அரசியல் சட்டத்தின் 343 (3) பிரிவில் குறிப்பிட்ட முறைப்படி 1965க்குப் பிறகும் ஆங்கிலத்தை உபயோகிக்க வழி செய்ய வேண்டும். அரசியல் சட்டத்தின் எட்டாவது பிரிவில் குறிப்பிட்ட தேசிய மொழிகள் ஏக காலத்தில் வளம் பெற சம ஊக்கம் அளிக்கப்பட வேண்டும். அவை ஆட்சி, கல்வித் துறைகளில் மேன் மேலும் உப

முடிந்ததா, மொழிப்பிரச்னை ?

நேர்மையாளர் நேருவின் தலைமையிலே உள்ள காங்கிரஸும், நியாயபுத்தி படைத்த எவரும் ஒப்புக் கொள்ளக் கூடிய அளவிலே ஆட்சி மொழித் தீர்மானத்தை நிறைவேற்றி விட்டது.

'அகில இந்திய ஆட்சிமொழிப் பிரச்னையில், காரிய சாத்யமானதும், வளைந்து கொடுக்கக் கூடியதுமான வழி காங்கிரஸால் பின்பற்றப்படும். ஆங்கிலத்திலிருந்து, இந்திக்குப் படிப்படியாக மாற வேண்டும்; அதற்கு

யோகிக்கப்பட வேண்டும். ஆங்கிலம் முக்கியமான ஸ்தானம் வகித்து வரும். அகில இந்திய காரியங்களுக்கு, இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். அது படிப்படியாகக் கொண்டு வரப்பட வேண்டும். பெரும்பான்மை அபிப்பிராயத்தைக் கலந்து முடிவுகள் செய்யப்படும்.'

இது கௌஹாத்தி காங்கிரஸின் ஆட்சி மொழித் தீர்மானத்தின் சுருக்கம். இந்த முடிவு, தென்னக மக்களின் மாபெரும் வெற்றி. பிரதமர் நேருவின்

நடுநிலை மாருத பெருந்தன்மைக்கு மற்ருேர் எடுத்துக்காட்டு. மாநில ஆட்சிக்குத் தமிழ் ; மத்திய அரசியலாரின் தொடர்புக்கு இந்தி வளப்படும் வரை, கால வரம்பின்றி ஆங்கிலம் ; இந்தி திணிப்புக் கிடையாது ; படிப்படியாகவே ஆட்சி மொழியாக இந்தி அமுலாக்கப் படும்.

இந்த நியாயமான தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குத் தமிழகப் பிரதிநிதிகள் மிகவும் பாடுபட வேண்டி இருந்தது என்பது உண்மைதான்.

பிரதமர் நேருவின் செல்வாக்கால், இந்தி வெறியர்களின் கொட்டம் அடக்கப்பட்டுள்ளது என்பதும் நமக்குத் தெரிந்ததே.

எப்படியிருந்தாலும், தென்னக மக்களுக்குச் சாதகமாக, நியாயத்திற்கு விரோதமில்லாமல், நவ இந்தியாவின் ஜீவாதாரப் பிரச்னையான, ஆட்சி மொழிப் பிரச்னையை முடித்து விட்டார்கள். அதற்காக காங்கிரஸ் தலைவர்களை பாராட்டுகின்ருேம்.

இவ்வளவு சீராக மொழிப் பிரச்னை ஓர் முடிவுக்கு வந்துவிட்டாலும், தமிழ் நாட்டில் சில தலைவர்களின் முணு முணுப்பு என்னவோ முடியவில்லை என்பதுதான் வேடிக்கையாக இருக்கின்றது !

இந்தி எதிர்ப்பின் பேரால் கை கோர்த்துக் கூடிக் குலவுகின்ற காட்சிகள்... நேரெதிரான கருத்துக் கொண்டவர்கள் நேசம் பாராட்டும் விந்தைகள்... நிராசையால் நெஞ்சு புண்ணுகி, ஆற்ருமை தாங்காது, தேசிய விரோதிகளுடன் அளவளாவும் சதிகள்... ஆகியவற்றைத் தமிழகத்திலே இன்று பார்க்கின்ருேம். நாணயம் என்பது 'நயா பைசா' அளவுக்குக்கூட இல்லாமல், நேற்றுக் கூறியதை இன்று இல்லை என்று சொல்லும் இழிகேடான நிலையும் இங்கே இருக்கின்றது ! இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் மொழிப் பிரச்னையே தோன்ருத காலத்தில் கட்டாய இந்தியைக் கொண்டு வந்தவர் "இந்திய பாஷைகளில் அரசாங்க நடவடிக்கைகளுக்குத் தகுந்த பொது பாஷை எது ? இந்தியே என்பதில் சந்தேகமில்லை. தெரிந்தோர், தேசபக்தர்கள், அரசாங்க அனுபவங் கண்டவர்கள் அனைவரும் கண்ட முடிவு இதுவே" என்று 1937ல் அறுதியிட்டுச் சொன்ன, சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், "நாட்டின் முன்னேற்றத்திற்காக நாமனைவரும் இந்தியைக் கட்டாய முறையில் சேர்க்குமாறு பெரும் கிளர்ச்சி செய்ய வேண்டும்" என்று ஆணித்தரமாக 'ஹிந்து சுய போதினி' என்ற புத்தக முன்னுரையில் எழுதியவர் ; எழுதியதோடு மாத்திரமல்ல, மொழிப் பிரச்னையே இல்லாத காலத்தில், இந்தியைத் தமிழ் நாட்டில் திணிக்க முயற்சித்து, ஆயிரக் கணக்கானவர்களை சிறையில் தள்ளினுர். அதே மனிதர், நேற்று வரை தன்னுல் 'தேசிய விரோதிகள்' என்று விருது வழங்கப் பெற்றவர்களுடன், இன்று 'இந்தி—எதிர்ப்பு' என்ற சாக்கில் கூடிக் குலாவுகிருர் !

சட்டசபை அரசியல் தலைவர்

கள் எல்லோரையும் அழைத்து இந்திய ஆட்சிமொழி பற்றிச் சென்னை அரசாங்கம் செய்த தீர்மானத்தை, ராஜாஜி பார்வைக்கு அனுப்பிய பொழுது உண்மை அக்கறையுடனிருந்தால், இன்று தெருவிலே பேசுவதை அன்று ஆணித்தரமாகச் சொல்லியிருக்கலாமே?

சென்னை அரசாங்கம் எடுத்த அந்த முடிவுதானே இன்று காங்கிரஸால் நிறைவேற்றப்பட்டு உள்ளது?

'தனி நாடு' கோரும் திரு. அண்ணாத்துரை நிலை மாறிப் பேசினால் அதில் விந்தை கிடையாது. ஆனால், 'அரசியல் தீர்க்க தரிசி' என்று பாராட்டப்படும் பெரிய மனிதர் பேசும் பொழுது தான், 'இப்படி ஏன் பேசுகின்றார்?' என்று ஆராயத் தோன்றுகின்றது.

சரிந்துபோனசாம்ராஜ்யக்கனவுகளைச்செப்பனிட சரியான சந்தர்ப்பம் இந்த மொழிப் பிரச்னை என்று தப்புக் கணக்குப் போடுவதால் தான் அவருக்கு இந்தத் தடுமாற்றம் என்று எண்ணுகின்றோம்.

'தமிழர் நலன் காக்கும் தர்மகர்த்தாக்கள்' என்று கூடிய கூட்டத்தினர், அன்று தாய்த் திருநாட்டைக் காட்டிக் கொடுத்த திருப்பணி செய்த சீலர்கள். "இவர்கள் தமிழன்பர்கள், அதனால் இந்தியை எதிர்க்கிறார்கள்' என்று நாம் கருதி விடக் கூடாது.

இவர்கள் இந்தியை 'ஆங்கில தாசர்கள்' என்பதால் எதிர்க்கிறார்களே தவிர, தமிழ் மீது கொண்ட பாசத்தால் அல்ல!

'தமிழுக்குப் பதிலாக பிராந்திய மொழியாக ஆங்கிலம்' என்று கூட இவர்கள் மனதிற்குள்ளே நினைப்பவர்கள்; வெளியே சொல்ல முடியாதே என்று சொல்லாமல் இருப்பவர்கள்! 'இந்தி தமிழ் நாட்டிற்கு அந்நிய மொழி என்பது போல, ஆங்கிலம் பாரதத்திற்கு அந்நிய மொழி' என்பதை இவர்கள் ஏன் கூற மறுக்கிறார்கள்?

இதே ரக சந்தர்ப்பவாதிகள், சந்தடி சாக்கில் தங்கள் தங்கள் அழுகல் சரக்குகளை விலையாக்கிப் பிழைக்க எண்ணும் செப்பிடு வித்தைக்காரர்கள் என்பதும், அவர்கள் கமிட்டியிலேயே கன்வீனராக இருந்த திரு. செல்லச்சாமியின் இராஜினாமா அறிக்கைகளால் நிதர்சனமாகி விட்டதே! கன்வீனரே, கௌஹாத்தி தீர்மானத்தில் மனம் மாறிய பிறகு, இனி கமிட்டி எதற்கு? திரு. செல்லச்சாமியின் இராஜினாமாவால் ஏற்பட்டுள்ள அதிர்ச்சியைப் போக்கிக் கொள்ள, மனைவியை இழந்த இராமனும், தாரத்தைப் பறிகொடுத்த சுக்ரீவனும் கூட்டு சேர்ந்தது போல, இன்று ராஜாஜியும், அண்ணாத்துரையாரும் ஒன்று சேர்ந்து கொண்டுள்ளார்கள்.

ஆகவே, கௌஹாத்தி காங்கிரஸ, பாரத நாட்டின் எந்தப் பகுதி மக்களுக்கும் தீங்கு விளைவிக்காத, நேர்மையான காரிய சாத்தியமான, 'ஆட்சி மொழித் தீர்மானத்தை' நிறைவேற்றி விட்டது.

மொழிப் பிரச்னை ஓர் முடிவுக்கு வந்து விட்டது. மொழியைச் சாக்காக வைத்துக் கொண்டு, நாட்டு நலனுக்குக் குழி பறித்துச் சொந்த நலனைச் சீராக்கிக் கொள்ள விரும்புபவர்களின் கூச்சலுக்கு, பொது மக்களே! நீங்களே முடிவு கட்டி முற்றுப் புள்ளி இடுவீர்களாக!

டி. டி. கே. செலாவணி யாத்திரை முதல் 'முந்த்ரா' வரை !

தள்ளாத வயது ; நரை, திரை மூப்பு எல்லாம் கொண்ட கிழப் பருவம் ; நடுங்கும் கரங்களுடன், நெற்றியிலே வியர்வை அரும்பாகக் கட்டி நிற்க மாங்கன்று ஒன்றை பாடு பட்டு நட்டுக் கொண்டிருந்தான் ஓர் கிழவன்.

மாறு வேடத்திலே வந்த மன்னன், கிழவனின் முயற்சியைக் கண்டு நகைத்தான். "கிழவா, மீசை நரைத்தாலும், உனக்கு ஆசை நரைக்க வில்லையே ? இந்த மாங்கன்று வளர்ந்து மரமாகி, பூத்துக் காய்த்து கனி தந்து நீ உண்ணும் வரை உயிர் வாழ ஆசையா?" என்று கேட்டான், வேந்தன்.

வேந்தன் வினவுக்கு, "உண்மை தான். தங்களைப் போலவே, நமது முன்னோர்கள் எல்லாம் எண்ணியிருந்தால், உலகத்தில் இன்று மரமே இருக்காதே" என்று விருத்தன் பதில் விடுத்தான்.

கதை பழைய கதைதான்! ஆனால், தோட்டக்காரன் கூறிய பதில் இன்றும் நமக்குப் பல சந்தர்ப்பங்களில், உழைப்பின் பெருமையை அறியாதவர்களுக்கு அறிவுரை சொல்லப் பயன்படுகிறது.

நிதி அமைச்சர் திரு. டி. டி. கே. அயல் நாடுகளின் உதவி தேடிச் சென்று திரும்பியவுடனே, நாட்டிலே பெரும் பான்மையான ஏடுகள் அவரைக் குறை கூறின ; கேலிச் சித்திரங்கள் தீட்டிக் கிண்டல் செய்தன ; தலையங்கங்கள் எழுதிக் கண்டனம் தெரிவித்தன; வறியராய், வெறுங் கையினராய் மீண்டும் வந்தார் என்று இகழ்ந்தன.

அத்துடன் நின்றால் கூட பரவாயில்லையே ! 'வியாபாரி கிருஷ்ணமாச்சாரியார், இந்தியாவை விற்றுவிடுவார்' என்று கூட ஓர் அரசியல் அறிஞர் எழுதினர்.

'புதுமை' மாத்திரம் 'கிருஷ்ணமாச்சரியார் தூது' வெற்றி பெற

மே. ஜெர்மன் பெடரல் குடியரசின் ஜனதிபதி டாக்டர் ஹெஸும், டி. டி. கே.யும்.

வேண்டும் என்று எழுதியது; நிதி அமைச்சர் முயற்சிகள் ஒரு வேளை தோல்வி அடைந்து விட்டாலும் கூட, நாட்டு நலன்கள் எதுவும் பாதிக்கப் படாது என்று நாம் கூறினோம்.

இன்று வரும் செய்திகள், ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் தூது வெற்றி பெற்று விட்டதை, நூற்றுக்கு நூறு வெற்றி பெற்று விட்டதைப் பறை சாற்றுகின்றன.

'ஆண்டு ஒன்றுக்கு ரூ 112 கோடி வீதம், 3 ஆண்டுகளுக்கு, அமெரிக்க உதவி!'

'மேற்கு ஜெர்மன் அரசாங்கத்தின் ரூ 160 கோடி உதவி!'

'உலக பாங்கும் இந்தியாவுக்கு உதவி அளிக்க முடிவு செய்து விட்டது!'

'பிரான்ஸ் அரசாங்கம் சுமார் 28 கோடி பாரதத்திற்கு உதவும்!'

'பிரிட்டன் பாரதத்திற்கு உதவத் தீர்மானித்து விட்டது!'

'ஜப்பானிய அரசாங்கம் ரூ 25 கோடி நிதி இந்தியாவிற்கு உதவும்!'

பத்திரிகைகள், இன்று ஒவ்வொரு நாளும் இச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன! இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பற்றுக் குறைப் பகுதியான சுமார் ரூ 800 கோடிக்கும் மேலாகவே உதவி வந்து விடும்! அந்நிய நாணயச் செலாவணிப் பஞ்சமும் நீங்கி விடும்!

அன்று திரு. கிருஷ்ணமாச்சாரியார் தூதைக் கேலி செய்தவர்கள், இன்று, தோட்டக்காரனின் பதிலைக் கேட்டு மன்னன் தலை தாழ்த்தியதைப் போல விழித்து நிற்கிறார்கள்!

x x x

சுதந்திரத்திற்குப் பிறகு, காங்கிரஸ் மத்திய அரசாங்கத்தில் நிதி மந்திரியாகப் பதவி ஏற்றவர்களில் முதல் காங்கிரஸ்காரர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்.

வெளி நாட்டு விவகாரங்களுக்கு ஒரு கிருஷ்ணமேனனைப் போல நிதித் துறைக்குப் பிரதமர் நேரு கண்டுள்ள பொருத்தமான மனிதர், திரு. டி. டி. கே.

காங்கிரஸ் இலட்சியமான, நேருஜியின் இருதயத் துடிப்பான 'சோஷலிஸ சமுதாயம்' காணப் பாடு படுவதே, திரு. டி. டி. கே செய்து வரும் மா பெரும் குற்றம்.

அத்தகைய குற்றம் இழைப்பதால் தான் அவருக்கு இத்தனை எதிர்ப்புகள்! வெளிநாட்டு யாத்திரை விமர்சனம் முதல் 'முந்த்ரா' விவகாரம் வரை அந்தக் குற்றத்தின் எதிரொலிகளே.

திரு. டி. டி. கே., சோஷலிஸ சமுதாயக் கண்ணோட்டத்துடன் தீட்டும் பட்ஜெட்டுகள், பணக்காரர்களை, குறிப்பாக, 'பம்பாய், குஜராத்தி' வட்டாரத்தைப் பாதிக்கின்றன. ஆகவே தான் அவருடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் குறை கூறும் கும்பல் ஒன்றும், அவருடைய செயல் திட்டங்களை உடைக்கச் சதி செய்யும் கூட்டு ஒன்றும் நாட்டிலே காணப்படுகின்றது.

தேர்தலிலே திரு. டி. டி. கே. நின்றால், பம்பாயிலிருந்து லட்சக் கணக்கான ரூபாய்கள், அவருக்கு எதிராகத் திருப்பி விடப் படுகின்றன. அந்நியச் செலாவணி யாத்திரை அவர் சென்றால், செல்லும் பொழுதே, 'செல்லாக் காசும் இந்த யாத்திரையில் வராது' என்று கண்டிக்கவும் செய்கிறார்கள். பொறுப்பு மிகுந்த அதிகாரிகள் பொறுப்பை அலட்சியம் செய்து, செய்யும் காரியங்களுக்கு, அவரைப் பொறுப்பாக்க முயல்கிறார்கள்! காங்கிரஸ் ஸ்தாபனத்திலே, முதலாளிகள் கையாட்களாக இருந்து வருபவர்கள் சிலரும் இந்தத் திருப்பணியில் ஈடுபட்டுள்ளார்களாம்!

பிரதம மந்திரியின் நெருங்கிய நண்பர்களில் ஒருவரும் மத்திய அமைச்சரவையில் உள்ள ஓர் சிலரும் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி

யாரை 'முநத்ரா' விவகாரச் சிக்க லில் 'கவிழ்த்து' விட முயற்சி செய்வ தாகக் கேள்விப் படுகிறோம். அந்தப் பெரிய மனிதரும் கூட, முன்பு இதே மாதிரி ஒரு வழக்கிலே சம்மந் தப்பட்டிருந்தவர் என்பது தான் இதில் வேடிக்கை!

அதுமாத்திரமல்ல; "அந்நிய நாணயச் செலாவணி தட்டுப்பாடு நிதி மந்திரியால் வந்தது தான். மரணவரி போன்ற வரிகள் கொடு மையானவை" என்று முதலாளி களிடம் கூறும் அளவுக்கு, மத்திய அரசியலில் மிக்க பொறுப்பான வர்கள் சிலர் பேசிவருகிறார்கள் என்று கேள்விப் படுவது மிக்க அவ மானத்துக்குரியதாகும்.

நேர்மையாக நிர்வாகம் நடை பெறவேண்டும் என்று பிரதமர் நேருவிடம் பாரதமக்கள் அதிகா ரத்தை ஒப்படைத்துள்ளார்கள். பிரதமர், பொறுப்புகளைப் பிரித்துக் கொடுத்துள்ளார். அவரவர் பொறுப் புக்களை ஆற்றுவதை விட்டு விட்டு, 'கண்ணாடி வீட்டில் இருப்பவன் வெளியே இருப்பவன் மீது கல்லை எறிவது' போன்ற செயல்களில் ஈடுபடுவது புத்திசாலித்தனமல்ல.

ஆனால், இத்தகைய எல்லா எதிர்ப்புக்கள் இடையிலும், சுடச் சுடப் பொன் ஒளிர்வதைப் போல, நமது நிதி அமைச்சர் சோர்வடை யாது பணியாற்றுவார் என்றே நம்பு கின்றோம்!

60வது ஆண்டு நிறைவு விழா!

நெல்லைச் சீமையில் செப்பரைப் பதிக்கருகில் சிறந்து நிற்கும் இராச வல்லி புரத்தினைச் சேர்ந்த திரு. கே. சங்கரய்யர் அவர்களின் அறுப தாண்டு நிறைவு விழா, அவருடைய மைந்தர்களான திரு. ஆர். எஸ். இராமகிருஷ்ணன், (உதவி போக்கு வரத்து மானேஜர், தென் இந்திய புத்தகத் தொழில் டிரஸ்ட்) திரு. ஆர். எஸ். சுப்பிரமணியன், பி. ஏ. பி.டி. (ஆசிரியர் இலாகா, 'புதுமை') ஆகியோரால் 24-1-48ல் சென்னை யில் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. அருகு போல் வேரூன்றி ஆல் போல் தழைத்து அப்பெரியார் நீடு வாழ்வாராக!

அட்டைப்பட விளக்கம்

வெம்மையாகக் காய்ந்த கதிரவன் வானத்தைச் செம்மை யாக்கி மறைந்து விட்டான். கூடும் காதலர் களுக்கு சுவைக்கும், பிரிவால் வாடும் காதலர்களுக்குச் சுடுகின்ற இரவு கவிந்து வருகின்றது. அமைதி ஆழ்ந்து வரும் நேரத்திலே, உலகத் தில் 'தண்' என்ற ஒளி பரப்பி, குளிர்ந்த மோனம் மண்டிக் கிடக்கும் வான வீதியில் பவனி வருகின்றான் வெண்மதி. அவன் ஒளிக் கற்றை பாய்ச்சும் இன்ப வேதனையால், அகம் குளிர்ந்து, அல்லிப் பெண் ணாள் நகை முகம் காட்டுகிறாள்.

இயற்கையில் நிகழும் இந்தக் காட்சியை, கற்பனைக் கண்களோடு கண்டு, களித்து, வண்ண ஓவிய மாகப் படைத்திருக்கிறார், நமது ஓவியர் ராமு.

நீல வானில் நின்றுலவும் நிலவுத் தேவனும், பொய்கைக் கரையில் பூரித்து நிற்கும் அல்லிப்பெண்ணும், நமது நெஞ்சை அள்ளுகின்றனர் அன்றோ?

விண்ணில் மலர்ந்த வெண்மதி யும், மண்ணில் மலர்ந்த அல்லியும் நிகழ்த்தும் இந்த இன்பக் கூத்தை, 'வந்து விட்டாளே இந்த அல்லி போட்டிக்கு?' என்று எண்ணித் துயருற்றுக் கண் சிமிட்டும் தாரை களுக்கு நமது அநுதாபம்!

அன்றும் இன்றும்!

[அரசியல் தலைவர்கள், குறிப்பாக நமது நாட்டுத் தலைவர்கள், முன்னுக்குப் பின் முரணாகப் பேசி வருகிறார்கள். அன்று சொன்னது வேறு; இன்று சொல்வது மற்றொன்று. கருத்து மாறுவது சாதாரணம் தான்; என்றாலும், காற்றடித்த பக்கம் பட்டம் விடுவது, பொது மக்களை முட்டாள்களாக்குவதாகும். அந்த சந்தர்ப்ப வாதிகளின் செயல்கள் இந்தப் பகுதியில் இனி அம்பலமாக்கப்படும்.— ஆசிரியர்.]

அன்று

ஆங்கிலம் எழுதப் படிக்கக் கற்றவர்கள், இந்தியாவில் மொத்தம் 20 லட்சம் ஜனங்கள் தான். ஆங்கிலமே அரசியல் பாஷையானால், எல்லா அதிகாரமும், மேற்பார்வையும் முதலிலும், முடிவிலும் இச் சிறு பாலருக்கே கொடுப்பதாகும். மாகாண விஷயங்களை மாகாண பாஷையைக் கொண்டு நடத்தினாலும், மத்திய ஆட்சி ஆங்கிலத்தில் நடந்தால் அது பொறுப்புள்ள ஆட்சியாகாது.

"இந்தியாவிலுள்ள 35 கோடி ஜனங்களில் 17 கோடியோரின் தாய் பாஷை ஹிந்தி. ஒரு வித படிப்புமின்றி 15 கோடி இந்திய மக்கள் அறியும் பாஷை ஹிந்தியாகும். வங்க பாஷையும், அதைச் சேர்ந்த வேறு பாஷைகளும் பேசுவோர் 6 கோடி. மராட்டியும், குஜராத்தியும் 3 கோடி ஜனங்களுடைய தாய் பாஷைகள். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவு இவைகளைப் பேசும் ஜனத் தொகை 6 கோடி. ஆகவே மற்ற எந்த பாஷையையும் விட, ஹிந்தியே பொது பாஷையாகக் கொள்ள மிகவும் தகுதி உடையதாகும். மேலும் மராட்டி, வங்காளி, குஜராத்தி முதலிய பாஷைகளைப் பேசும் 9 கோடி ஜனங்கள் ஹிந்தியை வெகு எளிதிற் கற்கக் கூடும். பெரும்பாலோர் தாய் பாஷையாகக் கொண்ட ஹிந்தியே ராஜ பாஷையாகத் தக்கது!"

(1937ல் 'ஹிந்தி சுய போதினி' புத்தகத்தில் சக்கரவர்த்தி திரு. ராஜகோபாலாச்சாரியார் எழுதிய முன்னுரை.)

இன்று

"மெக்காலே, ரொம்பவும் அவகாசத்தைக் கொடுத்து, ரொம்ப நாள் முன்னதாகவே ஆரம்பித்து விட்டார். அவர் தேதிகளை நிர்ணயிக்க வில்லை. ஆங்கிலம் நிலையான ஸ்தானத்தைப் பெற்று விட்டது. கால வரம்பை 1990 என்று நிர்ணயம் செய்வதாக இருந்தாலும், இப்பொழுதிருந்தே முன்னேற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டும்! யாருக்கும் அநீதி ஏற்படாத வகையில் திறமையாக நிர்வாகம் நடத்துவதற்கு மிகவும் சௌகர்யமாக இருந்து வருகிற ஒரு சாதனத்தை, ஆங்கிலத்தை நாம் எப்படி உதறித் தள்ள முடியும்?" (12-1-58ல் ரசிக ரஞ்சனி சபையில் நடந்த யூனியன் ஆட்சி மொழி மகாநாட்டுக் கூட்டத்தில் அதே தலைவரின் பேச்சு!)

ஆங்கிலமொழியை அறிந்த மக்கள் பாரத நாட்டின் ஒரு பகுதியில் மட்டுமில்லை. காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை பரவியிருக்கிறார்கள். பல்வேறு மொழிகள் பேசும் 35 கோடி ஜனங்கள் உள்ள பாரத நாட்டு மக்களை இந்த ஆங்கிலம் அறிந்த மக்கள் முத்து மாலையின் நடுவே இழைந்து செல்லும் நூலைப் போல் கட்டிப் பிணைத்து நிற்கிறார்கள். இந்த நூலை அறுத்து விட்டால் முத்துக்கள் சிதறிப் போகும். அதனால்தான் ஆங்கிலமே ஆட்சி மொழியாக வேண்டும் என்பது!"

(26—1—58 'கல்கி')

★

தலைவர்கள் கொடி வணக்க அணிவகுப்பு

கௌஹாத்தி



தலைவர் ஸ்ரீ. தேபர்ஜி

காட்சிகள்

[illegible]ங்கிரஸுக்கு வந்திருந்த நாகர் பெருங்குடிகள்

சிப்பிச் சிற்பங்கள்!

'ரஸிகன்'

கல்லைப் பார்க்கிறோம்; நாமும், கலைஞனும் பார்க்கிறோம். நாம், கல் தானே என்று நில்லாது செல்லக் கலைஞனோ நின்று, எண்ணி, உழைத்துக் கல்லைக் கவி பேசச் செய்கிறான்; சிற்பம் பிறக்கிறது.

கலைஞன் சிந்தனை வன்மையால், சாதாரணக் கல்லும் திரைச் சீலையும், செல்லரித்த ஓலைச் சுவடியும், அற்புதச் சிற்பமாக, அபூர்வ ஓவியமாக, அமர காவியமாக மாறிவிடுகின்றன.

"சென்னையின் அழகிய கடற்கரையிலே, சிதறிப் பரந்து கிடக்கும் சிப்பிகளைவைத்து, உலக ஜீவராசிகளை எல்லாவற்றையுமே படைக்கலாம்" என்று நான் சொன்னால், நீங்கள் சிரிக்கிறீர்கள். 'பைத்தியம்' என்று பட்டம் சூட்டுவீர்கள். நானும் இதே பட்டத்தைத் தான், நண்பர் மார்த்தாண்டனுக்குச் சூட்டினேன், சிப்பிச் சிற்பங்கள், காங்கிரஸ் பொருட் காட்சியில், எங்கள் 'மாணவர் காங்கிரஸ் ஸ்டாலில் உள்ளன' என்று அவர் சொன்ன பொழுது!

பிறகு ...அவருடன் சென்று பார்த்த பிறகு என் கருத்து தானாகவே மாறிவிட்டது!

சாதாரணச் சிற்பிகள் அங்கே சிங்காரக் கலைப் பொருள்களாக உயர்ந்திருந்தன.

"கண்ணாடிப் பேழையில் வைக்கப்பட்டிருந்த மயில்கள் ஆடி அழைப்பது போன்ற பிரமை ஏற்பட்டது. ஆடும் மயிலுக்கு அருகமர்ந்து "நல்லாரே, வருவீரே!" என்று நாரை ஒன்று வரவேற்றது; நற்றமிழ்ப் புலவர் பலர் 'நாரை விடு தூது' என்று இலக்கியங்களில் குறிப்பிடுவது போல ஆங்குள்ள நாரைகளும் நயன மொழி பேசின.

கலைச்செல்வி குமாரி இராஜேஸ்வரி

வியப்பால் கண்கள் விரிய வியந்து நோக்கிக் கொண்டே இருந்தேன், அழகுக்காட்சிகளுடன், 'ஆத்மீக அழகினை' நினைவூட்டுவதற்கு அருகிலேயே ஆலய மொன்றும் இருந்தது.

"கேட்பாரற்றுக் கிடக்கும் கிளிஞ்சல்களைக் கொண்டு, கவின்மிகு இக்காட்சிகளைப் படைத்த கலைஞர் யார்?" என்று கேட்டேன்.

"இராமநாதபுரம் அரசரின் அருந்தமிழ்புதல்வி இராஜேஸ்வரி" என்று சொன்னார்கள்.

"செந்தமிழ் வளர்த்த சேதுபதி வம்சச் செல்வியா? சரிதான். கலை வளர்த்த பரம்பரையில் மீண்டும் ஓர் கலைஞர். வாழ்க அவர் கலைத்திறன்!" என்று வாழ்த்தியது என் ரசிக உள்ளம்.

கலைப் பகுதி

இப்படம் அருணுசலம் பிக்சர் ஸாரின் முதல் தயாரிப்பு; கதை சாதாரண கதைதான்.

ஒரு உழவனுக்கு அழகான ஒரு தங்கை. அவளைக் கட்டிக் கொடுக்கப் போகிற நேரத்தில் அந்த ஊர் பண்ணையாருக்குக் கொடுக்க வேண்டிய கடனுக்காக அவன் வீடு 'ஜப்தி' செய்யப் படுகிறது. தங்கையைச் சந்திக்கிருன். அவர்கள் பேசுவதைப் பார்த்தவர்கள் சந்தேகப்படுகிருர்கள். அங்குமிங்கும் அலைகிருர்கள். தங்கையின் கணவன் வக்கீல் வேலை பார்க்கும் தன் முறைப் பெண்ணின் வலையில் சிக்காமல் முடிவில் தன் மனைவியையும், குழந்தையையும் அடைருன்.

தை பிறந்தால் வழி பிறக்கும்

ஆவேசத்தில் உழவன் பண்ணையாரின் ஆளை அறைகிருன். கல்யாணம் தடைபடுகிறது. உழவன் சிறை செல்கிருன். காலச் சக்கரம் வேகமாகச் சுழல்கின்றது. தங்கை பண்ணையாரின்மகனைக் கல்யாணம் செய்கிருள். சிறையிலிருந்து வெளியே வந்த உழவன் தன்

நடிப்பில் முதலிடத்தை எஸ். எஸ். ராஜேந்திரனும், வி. கே. ராமசாமியும் பங்கிட்டுக் கொள்கிருர்கள். கல்யாணப் பந்தலில் பண்ணையார் ஆளை எஸ். எஸ். ராஜேந்திரன் அறையும் கட்டம், அவருடைய உயர்ந்த நடிப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டு. ஆனல் அவர் நடிப்

யிருக்கின்றன. அவைகளில் "மரத்துக்கு கிளே பாரமா" என்ற பாட்டு அர்த்தத்துடன் இனிமையாக யிருக்கின்றது. அது டி. கே. முத்துசாமியின் முதல் முயற்சி என்று கேள்விப்படும் போது அவருக்கு 'சபாஷ்' கூறுகிருேம்.

கண்டிக்கத் தக்க சில குறைகளேயும் எடுத்துக் காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. பட ஆரம்பத்தில் ராஜேந்திரனும் ராஜ சுலோசனுவும் ஆடும் ஆட்டமும், வண்டியில் போகும் போது அண்ணன் தங்கையைஅணேத்துக் கொள்ளும் காட்சியும், எம்.என். ராஜத்திடம் ராஜேந்திரன் ஆடிக் கொண்டே சரசம் பண்ணும் காட்சியும் தமிழர் பண்புக்கே புறம்பானது.

முடிவாக, தையும் பிறந்தது. கதை, வசனம் எழுதி டைரக்ஷன் செய்திருக்கும் ஏ. கே. வேலன் அவர்களுக்கு வழியும் பிறந்தது!

பில் இன்னும் சற்றுக் கவனம் செலுத்தியிருந்தால் சில இடங்களில் காணப்படும் சிறு குறைகளே நிவர்த்தி செய்திருக்கலாம். வி. கே. ராமசாமி ரசிகர்களுக்கு ஹாஸ்ய விருந்தளிக்கிருர். நடிப்பில் அவருக்கு அவரே தான் நிகர்!

கதாநாயகனை நடிக்கும் பிரேம் நஸீர் மீது டைரக்டரின் திருக் கண்கள் ஏனே படவில்லே? நடிப்பில்லாமையால் அவருடைய நல்ல தோற்றம் பார்ப்பவர்களின் மனதைக் கவரவில்லே. அவர் தமிழ்ப் படங்களில் நடிக்கக் கொஞ்சம் கற்றுக் கொண்டால் அவருக்கு நல்ல எதிர் காலமுண்டு.

ராஜ சுலோசனுவும், எம். என். ராஜமும் அவர்கள் பாகத்லதத் திறம்பட நடித்துள்ளார்கள்.

இப்படத்தின் சிறந்த அம்சம் அதன் சங்கீத அமைப்புத்தான். சங்கீத டைரக்டர் கே. வி. மகாதேவன் அவர்களுக்குப் புகழ்மாலே சூட்டவேண்டும்.

எல்லா பாட்டுகளுமே நன்ருக

ஸ்ரீ லக்ஷிமி பிக்சர்ஸ்

நல்ல இடத்து சம்மந்தத்தில்

எம். ஆர். ராதா

இன்னும் ஆளப்பிறந்தவன், பால நாகம்மா, அதிர்ஷ்டசாலி, வீர மருது சகோதரர்கள், இன்ப வாழ்வு வசந்தசேன படங்களில் நடிக்கிருர்.

போன் : 317

தனலெக்ஷ்மி பேக்கிரி

பேக்கர்ஸ் & கன்பெக்ஷனர்ஸ்

192, கிரேட் காட்டன் ரோடு,

தூத்துக்குடி.

குழந்தைகள் முதல்
பெரியவர்கள் வரை விரும்பும்
எமது ரொட்டி, கேக், பிஸ்கட்
தினுசுகள்
எக்காலத்திலும்
பக்குவமாக கிடைக்கும்.

மா. அருணாசலம் பிள்ளை,
உரிமையாளர்.

FOR
FINE ART
LITHO PRINTING,

Please Contract with:

THE CHANDRA PRINTERS,
P. B. No. 81.
SIVAKASI.

Telephone: MADRAS **4890**. MADURAI : **581**

இன்பம் தரும்

31
301
3001

ஜவ்வாது பத்திகள்

சுகந்த மண்டலம்

உரிமையாளர்கள்:
S.V. பழனிமலை
S.V. ரெங்கசாமி

மதுரை . மதருஸ் . பெங்களூர் . விஜயவாடா



அத்தியாயம் 9

எதிர்பாராதது!

கு.ப.சேது அம்மாள்

கூடத்தில் நின்று கொண்டு அவர்களுக்குச் சரியாகத் தர்க்கம் செய்து கொண்டிருக்கப் பிடிக்காமல், மாடியேறிச் சென்று விட்டாலும் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்க வேண்டும் என்று இருந்த ஆவல் மட்டும் குறையவில்லை, சோமுவுக்கு!

முற்றத்து ஓரமாக இருந்த கைப்பிடிச் சுவற்றருகில் நின்று மேற்கொண்டு அவர்கள் பேசுவதைக் கேட்கத் துடித்துக் கொண்டு நின்றான்.

அதுவும், 'இன்னொரு விபரீதம் கூட நடந்திருக்கிறது' என்று நாகுவின் வாயினின்றும் பிறந்த சொற்கள் சோமுவின் காதில் 'சுரீர்' என்று தைத்து அவனை வேதனைக்குள்ளாக்கி இருந்தது! துரையின் மீது குற்றச் சாட்டுக்கள் மேன்மேலும் அதிகரித்து வருவதைக் கண்ட சோமு, நாகு குறிப்பிடும் விபரீதம் யாது? என்பதை அறியும் அக்கறையுடன் நின்ற விடத்திலிருந்து மாடிப்படியின் பாதி வழியிலேயே வந்து, நின்று கொண்டான்!

கொல்லைப்புறம் சென்ற நாகு கன்றுக் குட்டியைப் பிடித்து கட்டி, மாட்டுக்கு வைக்கோல் உதறிப் போட்டுவிட்டு கதவுகளைத் தாளிட்டுக் கொண்டு வந்தான்.

கூடத்திலிருந்த ஊஞ்சலில் ராமசுவாமிக்கு படுக்கை உதறிப் போட்டுக் கொண்டிருந்தாள், பாலம்மாள்.

ராமசுவாமி, நாகுவைக்கண்டதும், "ஏன் நாகு, அக்கிரகாரத்திற்குள் தான் இவ்வளவு நாளும் சண்டை பூசலாக இருந்தது. இப்போது குடியானவத் தெருவுக்குக் கூட சனி பிடித்து விட்டது போலிருக்கிறதே!"

என்று பேச்சைத் தொடங்கினார்.

"குடியானவத் தெருவுக்கு ஒன்றும் சனி பிடிக்க வில்லை. தென்பாதி எஜமானர் மகனுக்குத்தான் பலமாகச் சனி பிடித்திருக்கிறது! தென்பாதி பண்ணையாள் கந்தப்பன் இருக்கிருரே, அவர் தம்பியை நினைப்பு இருக்கிறதோ உங்களுக்கு?"

"ஏன் இல்லாமல்! ஆறுமுகம் தானே?" என்று கேட்டார் ராமசுவாமி.

"அவர் ஊரிலிருந்து வந்து விட்டார் நேற்று. வந்ததும் வராததுமாக, இந்தச் செய்தியை யாரோ அவர்களுக்கு எட்ட விட்டு விட்டார்கள் போலிருக்கிறது. நேற்று நான் அந்தப் பக்கம் போன பொழுது மகனை என்ன, ஏது? என்று தூண்டித் துருவி கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார். சரி, இந்த விவகாரம் இதோடு அடங்கப் போகிறதில்லை என்று தெரிந்து கொண்டு விட்டேன்..."

"ஆமாமாம்! ஆறுமுகம் அசாத்திய முன் கோபியாச்சே!" என்று ராமசுவாமி விமரிசனம் செய்யப் புகுந்ததை இடைமறித்து பாலம்மாள்,

"இருந்தாலும் நாணயஸ்தன். யோக்கியன்! நடத்தையிலோ, மரியாதையிலோ அப்பழுக்குக் கிடையாதே அவனிடம்! அதனல் அயோக்கியனைக் கண்டால் சீறிக் கொண்டு புறப்பட்டு விடுகிருன்!" என்று ஆறுமுகத்திற்கு நற்சாட்சிப் பத்திரம் வழங்கினாள்.

"ஆமாம், சங்கதி காதில் கேட்டதும் 'அப்படியா சேதி!' என்று ஐயர் வீட்டைப் பார்க்கப் புறப்பட்டிருப்பானே; எப்படி சும்மாயிருக்கிருன்?" என்று அதிசயித்தார் ராமசுவாமி.

"காரியார்த்தமாக அவனை அடக்கி வைத்திருப்பான் நாகு!' என்று ஆரூடம் சொன்னாள், பாலம்மாள் நொடிப்புடன்.

"ஏது அம்மாவுக்கு சோசியம்கூடத் தெரியுமோ?" என்று மெல்ல நகைத்தான் நாகு, ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு.

"அப்போ நான் ஊகித்தது சரிதான்!" என்ருள் பாலம்மாள்.

"ரொம்பச் சரி. அதற்குச் சரியான சமயம் வரவேண்டாமா?" என்று கேட்டான் நாகு.

"தவறு செய்து விட்டாய் நாகு! போய், வாசலில் நின்று கத்தி, சந்தி சிரிக்க அடித்தாலல்லவா அவனுக்குப் புத்தி வரும்?" என்று யுக்தி சொன்னார் ராமசுவாமி.

"வராது! இன்னும் கொஞ்சம் இடம் விட்டு நடமாட சொல்லி, சமயத்தில் கையும் மெய்யுமாகப் பிடித்தால்தான் நமக்கு நன்மை!..."

"சரிதான், சினிமாவும், நாவலும் சொல்லிக் கொடுத்த வழிகளைக் கையாளப் பார்க்கிருயாக்கும்! முன்னைய நாகு அல்ல, நீ இப்பொழுது!" என்று சொல்லி நகைத்தாள் பாலம்மாள்.

"சை! காது கொண்டு கேட்கச் சகிக்கவில்லையடி; விடு அத்துடன்; தென்பாதியான் நமக்கு ஜன்ம விரோதிதான்! இருந்தாலும் அந்தக் குடும்பம் இந்தப் பிள்ளையால் அநியாயமாக அழிந்தே போய்விடப்

போகிறது. ஆண்டவன் நிரம்பவும் சோதித்து விட்டான் அவர்களை!'' என்று கண்கலங்க, உணர்ச்சித் துடிப்புடன் சொன்னார் ராமசுவாமி.

அவருடைய மனதை அறிந்தவனாக "படுக்கப் போகட்டுமா சாமி?'' என்றான் நாகு.

"எங்கே திண்ணையில்தானே படுக்கப் போகிறாய்?''

"ஆமாம்'' என்றான் நாகு.

"சரி போ'', என்றார் ஐயர்.

தென்பாதி ஐயர் மீது தீராப் பகையும், ஜன்மத் துவேஷமும் கொண்டு அவருடைய குலம் பூண்டற்றுப் போக வேண்டும் என்று சபிக்கும் ராமசுவாமி, இன்று உண்மையாகவே அவருடைய குடும்பத்திற்கு அபகீர்த்தியும், அவமானமும் வரவிருப்பது தெரிந்தது. அவருடைய மனது க்ஷணப்போதில் மாறிவிட்ட விந்தையைக் கண்டு அதிசய உணர்ச்சியால் தாக்குண்டு அடடா! என்னதான் தனக்கு ஆகாத சத்துருவானாலும், அவனுக்கு ஒரு கஷ்டம் வந்துவிட்டது என்னும்போது இனம் இனத்திற்காகக் கலங்கித்தவிக்கும் போலும்! என்ற வியப்புணர்ச்சியும், ஒரு பெண்ணின் கற்பு பங்கமாவது பெரிதாகத் தெரியாமல் ஐயர் குடும்ப கௌரவத்திற்காகப் பரிதவிக்கும் விசித்திர சித்திர விருத்தி கண்டு சற்றே ஆத்திரமும் அடைந்தவனாகப் படுக்கச் சென்றான்.

ராமசுவாமி வீட்டு கடிகாரம் மணி பத்து அடித்தது. அதே நேரத்தில், தங்கை பெண்ணின் திருமணத்திற்காக ஜவுளி வகைகள் வாங்கப் போயிருந்த ஐயர் ஜவுளி மூட்டையுடன் அன்னம்மாளும் பின்தொடர உள்ளே வந்தார்.

ஜவுளி, வெள்ளிப் பாத்திரம் எல்லாம் கமலம் திட்டம் போட்டபடியே எல்லாம் வாங்கி வந்திருந்தார் ஐயர்.

"எல்லாவற்றுக்குமாக என்ன கொடுத்தாய் சிவா?'', என்று கேட்டாள் கமலம்.

"நானூற்று எழுபது ரூபாய் சில்லறை! எதற்கு எதற்கு என்றாயே வட்டிக் கடையில் பணம் வாங்கும்போது; இந்த மாதிரி செலவுகள் வரும். பணம் கையில் இருக்க வேண்டும் என்றுதான் வாங்கினேன் அக்கா! இன்னும் ரயில் சார்ஜ். மேல் செலவு எல்லாவற்றுக்குமாகஒருஐம்பதுரூபாயாவது ஆகிவிடும்! அடுத்த மாசம் ரங்காவின் பெண் கலியாணமிருக்கிறது! வாங்கிய ஆயிரத்தைந்நூறு சரியாகப் போகப் போகிறது!...'', என்றார் ஐயர்.

"துரைக்கு ஒரு ஜதை மயில் கண் ஜரிகை வேஷ்டி வாங்க வேண்டும் என்று பார்த்தேன். இரண்டு விரற்கிடை சரிகை கூட இல்லை; ஐம்பது ஐம்பத்தைந்து என்கிறான்...'', என்று ஆரம்பித்தாள் அன்னம்மாள்.

"நல்லதாகப் போச்சு. அவன்



கலியாணத்திற்கு வரவில்லை யாம்'', என்ருள் கமலம்.

ஐயர் திடுக்கிட்டு நிமிர்ந்தார்.

அன்னம்மாளும் பதட்ட மடைந்தவளாக, "வரவில்லையா, ஏனும்?'', என்று விசாரித்தாள்.

"என்ன டவுன்களில் நடக் கிற கல்யாணமா? மணிக் கணக் குப்படி டிபனும், சாப்பாடும் ஜரூராக நடக்க, பட்டிக்காட்டு கலியாணம். காபிக்கு லாட்டரி அடிக்க வேணடும்! இரண்டு மணிக்கு சோறு கிடைத்து விடும் சட்டென்று! போடி போ. நான் போக மாட்டேன். என்று சொல்லி விட்டான். ஆன வரை யில் சொல்லிப் பார்த்தேன்...''

"பிடிவாதந்தான் அவனுடைய பிறவிக்குணமாச்சே! சரி, தள்ளு! வராததும் ஒருவிதத்தில் அனு கூலம்தான். வீட்டில் நீ ஒண்டி யாக இருக்க வேண்டுமே என் கிற கவலை விட்டது எனக்கு!'' என்ருர் ஐயர் தன்னையும், பிறரையும் சமாதானம் செய்து கொள்ளும் பொருட்டு.

"ஆமாம்! இவ்வளவு கால மாக, நீங்கள் நாள் கிழமை களில் வெளியூர் போனுல் இவன்தான் எனக்கு துணை யிருந்தானுக்கும்? ஒரு கலியா ணம், காட்சியென்ருல் வயசுப் பிள்ளைகள் ஆசையோடு கிளம்பு வார்கள் கண்டதுண்டு...''

"உலக விசித்திரமாகப் பிறந் திருக்கிருன் நமக்கு என்று! சரி, வேலையைப் பார். திண்ணையில் பாயைப் போடு. ஜவுளி மூட்டையைப் பத்திரமாக எடுத்து வை'', என்று கொட் டாவி விட்டபடி உத்தரவு செய் தார் ஐயர்.

"கருப்பையாவை சட்டென்று வரச் சொன்னீர்களோ?'' என்று அன்னம்மாள் மறுநாள் அலுவலை நினைத்துக் கேட்டாள்.

"சொல்லியாச்சு. நாலு மணிக்கே வந்து விடுகிறேன் என்று சொல்லி இருக்கிருன். சிவாவுக்குப் படுக்கையைப் போட்டுவிட்டு நீயும் காலத் தோடு ஒரு தூக்கம்தூங்கி எழுந் திரு. மணி பதினென்றரை,'' என்ருள் கமலம்.

நிம்மதியற்ற மனதுடன் அவ ரவர்கள் தங்கள் வேலைகளைப் பார்த்தார்களே யொழிய துரை வருவதற்கு முன் வீட்டிலிருந்த சந்தோஷமும், அமைதியும் பறந் தோடி விட்டது.

எதற்கெடுத்தாலும் ஏட்டிக் குப் போட்டியாகப் பேசுவதும், செய்வதுமே வழக்கமாகி விட் டதோ பிள்ளைக்கு என்ற வேதனை ஐயர் மனதை வெகு வாகப் பாதித்தது!

இப்படித் தான் தோன்றியாக வும், தறிதலையாகவுமிருந்தால் இவனை எவன் மதிப்பான்? பண்ணை, பயிர்ச் செலவு செய்து இவன் என்னத்தை வாழப் போகிருன் என்ற சிந்தனை மனதை அரிக்க தன்னையறியா மல் சிரமமேலீட்டால் நித்திரையி லாழ்ந்தார் ஐயர்.

மறுநாள் விடியற் காலையில் ஐயரும், அன்னம்மாளும் கலி யாணத்திற்குப் புறப்பட இருந்த தால், அதிகாலையில் எழுந்து, அவர்களுக்கு வேண்டியதைச் செய்து, வண்டியேற்றி ஊருக்கு அனுப்பினுள்.

அத்தியாயம் 10

சிலிர்ப்பு

கமலத்தின் மனம் வேதனையில் விரிந்து விண்டு விடும் போல ஒரு உபாதி.

சரி. வீட்டில் உட்கார்ந்து கொண்டு என்ன செய்யப் போகிறோம்? வேதிகுடி கும்பாபிஷேகத்திற்காவது போய் வரலாம் என்று உத்தேசித்து பரபரவென்று எழுந்து சென்று அடுப்பு மூட்டி சமையல் செய்து, தனக்குத் தேவையானதை

தனிப்பட எடுத்து வைத்து விட்டு, துரைக்கு வேண்டியதை அடுப்பின்மீது வைத்து மூடினாள். கோயிலுக்காக அருச்சனைப் பொருள்களுடன் புறப்படத் தயார் செய்து கொண்டு, துரையினிடம் வந்து "துரை, வேதிகுடியில் இன்று கோயில் கட்டி கும்பாபிஷேகம். போய் வரலாம் என்று..."

"போய்விட்டு வாயேன். அதற்கு என்னைக் கேட்க வேண்டுமா?", என்று நகைத்தான் துரை.

"கேட்கத்தான் வேண்டும்! அடுப்பின் மீது எல்லாம் வைத்து மூடியிருக்கிறேன். பசித்ததும் போட்டுக் கொண்டு சாப்பிடு. இரண்டு மணிக்கெல்லாம் வந்து விடுவேன்—காபி போட வீட்டைத் திறந்து போட்டு விட்டுப் போய்விடாதே எங்காவது", என்றாள் உஷார் கொடுக்கும் தோரணையில்.

"இல்லை, யில்லை! எங்கும் போகமாட்டேன். நிர்விசாரமாகப் போய், சுவாமி தரிசனம் பண்ணிக் கொண்டு வா," என்றான் துரை.

கையில் தூக்குக் கூடையை எடுத்த கமலம், ஒரு விநாடி நின்று தயங்கினாள்!

ஒரு வேளை அந்தக் குட்டி வந்து நிற்குமோ நாமில்லா சமயம்? என்று யோசித்தாள். தினசரியாக நாலு மணிக்குத் தானே வரும்? அதிலும் அவர்களும் ஊருக்குப் போய்விட்டார்கள். மெதுவாகத்தான் வரும். அதற்குள் நாம் வந்துவிடலாம்," என்றுமனதில் திட்டம் வகுத்துக் கொண்டு சென்றாள் கமலம்.

வாசல் வரை சென்ற துரை திரும்பி வந்து சாய்மானத்தில் சாய்ந்து விக்ரமோர் வசீயத்தை எடுத்துப் பிரித்தான்.

ஏகாந்தமான சூழ்நிலை அவனைக் குழப்பத் தொடங்கியது! அமைதியிழந்து படிப்பில் கவனம் செலுத்த இயலாமல், எழுந்து குறுக்கும் நெடுக்குமாக நடந்தான்!

எண்ணங்கள் அலை மோதத் தொடங்கின அவன் நெஞ்சில்! ஆகா! பொன்னான தருணம்! வரக்கூடாதா அவள் என்று தவித்தான்!

மீண்டுமொரு குரல்.

"சந்தேகமில்லை அவள் தான்!" என்று உறுதி தெரிந்ததும், உடம்பில் ஒரு சிலிர்ப்பு! புலன்களின் தறிகெட்ட போக்கு அவனை ஆட்கொண்டது. மனதில் திட்டம் உருவாக்கியபடி,



"அம்மா கொல்லைப்புறமிருக்கிருள்", என்ருன் உரத்த குரலில் துணிவாக!

வள்ளி உள்ளே வந்து நேராக கொல்லைப் பக்கம் சென்ருள். கதவு தாளிடப் பட்டிருப்பதைக் கண்டு

அவன் காட்டில் மழை பெய்தது!

"அம்மா!"

"ஆ! வள்ளியின் குரல் போலும்!"

கமுக்கமாக சேரில் அமர்ந்து கொண்டான்.

திரும்பும் சமயம், துரை வாசல் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வருவதைக் கண்டதும் வள்ளியின் வயிற்றில் தீ பாய்ந்தது!

அகப்பட்டுக் கொண்டு விட்டோம் என்று உணர்ந்து

கொண்டாள் ! பீதியால் உடல் நடுங்க அங்கேயே நின்ருள்.

துரையின் வெறி மிதிக்கும் கண்கள் தன்னை சிமிட்டி அழைப்பதைக் கண்டதும், பீதி பறந்து போய் துணிச்சலே உருவாக நிமிர்ந்து நின்று, "சாமி, இதற்கெல்லாம் நான் ஆளில்லை. மரியாதையாகக் கதவைத் திறந்து விட்டு விடுங்கள்", என்ருள் கண்களை உருட்டி விழித்து.

துரை அருகில் வந்து கொண்டே, "வள்ளி, ஐயர் மகனுச்சே என்ற பயமா? பயப்படாதே! உன்னைப் பார்த்த நாள் முதல்..."

"இப்ப கதவைத் திறக்கிறீர்களா இல்லையா?"

"அடடா! இந்தக் காலத்தில் இப்படிக்கூட இருப்பார்களா உன் போல? வள்ளி, நீ தான் என்..."

"சை, நீ ஒரு மனிதனு! கதவை அடைத்துக் கொண்டு ஒரு பறத்திப் பெண் பிள்ளையை..."

"நீ பறத்தியல்ல! என் மன மோகினி, என் நினைவிலே தித்திக்கும்...."

வள்ளி தன்னை மறந்தாள்! காட்டுக் கத்தலாக, "கிட்ட வராதே! அநியாயமாக அழிந்து போவாய்..." என்று காளியாகக் கத்தினுள்! அவனுடைய உணர்ச்சி வேகத்தில் அவனுக்குக் கண்ணேது, செவியேது?

கோபாவேசத்துடன் பாய்ந்து சென்று அவளுடைய கையை எட்டிப் பிடிக்கவும், விலுக்கென்று ஒரு உதறு உதறினுள்.

ரணசாண்டியின் தோற்றத்துடன் ஒரு தாவு தாவி கொல்லைக் கதவைத் திறந்துகொண்டு ஓடி 'ஓ ஏழுமலையானே' என்ற

ஓலத்துடன் கிணற்றின் மீதே றித் தடாலென்று குதித்துவிட்டாள் !



எல்லாம் ஒரே விநாடி !

துரை அப்படியே சிலையாக நின்றான் ! மூச்சே நின்று விடும் போன்ற உயிர் ஒடுக்கத்தில் கால்கள் பெயர மறுத்தன ! பிரம்மாண்டமான கிணற்றிலிருந்து கிளம்பி வரும் ' புடு புடு ' வென்ற சத்தம் துரையின் உணர்வைப் பற்றி உலுப்பியது!

ஓடிவந்து கிணற்றை எட்டிப் பார்த்தான் ! கொப்புளங்கள் மிதந்தனவே யொழிய வள்ளியில்லை ! ஓடிச் சென்று வாசல் கதவைத்திறந்து, குய்யோ, முறையோ என்று அலறியதும், கோயிலுக்குப் போய் வரும் கூட்டத்திலிருந்து திமு திமுவென்று பத்துப் பேர் வந்து கிணற்றிலிறங்கி வள்ளியை மேலே கொணர்ந்து விட்டார்கள் !

வள்ளி நன்றாக நீச்சல் கற்றவளாகையால், சாக நினைத்து கிணற்றில் குதித்தாலும், உயிரை இழக்காமல், பாதுகாக்க முடிந்ததே யொழிய இல்லா விட்டால் அவளை சவமாகத்தான் பார்த்திருப்பார்கள் !

அப்படிப்பட்ட தொலை கிணறு அது !

கிணற்றங்கரையில் நின்ற வள்ளி யாருடனும் பேசாமல், எதற்கும் பதில் சொல்லாமல் கொல்லை வழியாகவே, விசையாக நடக்கத் தொடங்கினாள் !

துக்கமும், அவமானமும், ஆத்திரமும், பீதியும் அவளைச் சித்திரவதை செய்தன !

நேர்ப்பாதையை விட்டு குறுக்கு வழியாக வீட்டைச் சேரும் சமயம் ஆறுமுகம் எங்கோ போய்விட்டு அப்பொழுது தான் வந்து கொண்டிருந்தான் !

உடுத்த ஆடை உடுத்திய வண்ணம், ஆடையிலிருந்தும். கூந்தலிலிருந்தும் நீர் சொட்டச் சொட்ட வரும் வள்ளியைக் கண்டு, " இதென்ன இது ? ஏன் இப்படித் தொப்பலாக நனைந்து போய் சொட்டச் சொட்டவருகிறாய் ? உடுத்த துணி உடுத்தாப் போல என்றைக்கு முங்குகிறது என்று தெரியு மில்லையா உனக்கு?'' என்று வினவினான் ஆறுமுகம்.

பதில் சொல்லாமல் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு விம்மினாள் வள்ளி.

ஆறுமுகம் பதட்டத்துடன், ''ஏன் வள்ளி அழுகிறாய்? என்ன சங்கதி ? '' என்றான். முகத்திலிருந்த கைகளை எடுத்துக் கொண்டு, குளிக்கப் போகவில்லை சித்தப்பா. சாகப்போனேன் ; பிழைத்து வந்து விட்டேன் இன்னமும் துன்பப்பட''

என்று விக்கல்களிடையே கூறினாள் வள்ளி.

கந்தப்பன் திகிலடைந்தவனாக ஒரு கையை ஊன்றி உடலை எழுப்பிக் கொண்டு, "என்ன, என்ன சங்கதி ?" என்று திணறியபடி கேட்டான்.

ஆறுமுகத்திற்கு ஒன்றுமே விளங்காததால், உரத்த குரலில் "வள்ளி, சங்கதியை விபரமாகச் சொல்லிவிட்டு அப்புறம் அழு", என்று அதட்டிக் கேட்டதும், நடந்ததை அவள் சொல்லி முடித்ததும், உச்சந் தலையில் சம்மட்டி யடி வாங்கி விட்டது போன்ற மிரட்சியில் பிரமை தட்டிப் போய் கந்தப்பனும் ஆறுமுகமும் சற்றுநேரம் பேசவே யில்லை.

அவர்கள் நாக்குகள் புரண்டு கொடுக்க மறுத்தன கொஞ்ச நேரம் !

பிறகு பிரமை நீங்கியவனாக "சாகவேண்டும் எனறு விழுந்தாயே ; செத்திருந்தாயானால் —அந்த..…" என்று பல்லைக் கடித்துக் கொண்டான் ஆறுமுகம்.

ரத்தமாகச் சிவந்த கண்களை உருட்டி விழித்தான். கோப மிகுதியால் பேச நா வெழும்பாமல் தத்தளித்தான்.

"சாகவில்லையே சித்தப்பா," என்று குரல் விட்டு அலறி அழுதாள் வள்ளி.

கந்தப்பன் குரல் நடுங்க, "ஐயோ, அந்தப் புண்ணியவான் களுடைய வமிசத்திலே இந்த 'சோதா' எங்கிருந்து வந்து பிறந்ததோ தெரியவில்லையே…." என்று புலம்பத் தொடங்கியதை ஆறுமுகம் இடைமறித்து, "ஏன் அண்ணே, பெற்ற மகளுக்கு நேர்ந்த அவமானத்தை விட்டுவிட்டு, ஐயரு வீட்டுப் பிள்ளையைப் பற்றி கவலைப்படுகிறாயா ? நியாயம் !", என்றான், உள்ளம் குமுற.

வெந்த புண்ணில் வேலைச் சொருகுவது போல தம்பி பேசியதைக் கேட்டு ஆவி துடித்தது கந்தப்பனுக்கு !

மார்பில் ஓங்கி ஒரு அறை அறைந்து கொண்டு ஆவேசத்துடன், "இதோ பார், ஆறுமுகம் நம்ம முப்பாட்டன் காலத்திலிருந்து தென்பாதி பண்ணை ஐயர் நிலத்தை உழுது, பயிரிட்டு அந்த சொத்தைப் பெருக்கினேன்! அவர்கள் வீட்டு, உப்பும் சோறும், தின்று உடலை வளர்த்தேன். இந்த உடம்பிலே ஓடுகிறது பார் இந்த ரத்தம்



பாண்டியன் லாட்ஜ்

பெஸ்ட் பிரியாணி சாப்பாடு
ஹோட்டல்

8, வெங்கலக்கடை தெரு,
மதுரை.

N. B: கோழிப் பிரியாணி,
கோழிச் சாப்ஸ்

புருச் சாப்ஸ்

தினசரி கிடைக்கும்.

திங்கள், சனிக்கிழமைகளில்;
வான்கோழிப் பிரியாணி,
வான் கோழிச் சாப்ஸ்
கிடைக்கும்

Prop- P. K. S. S.

உன்னத தயாரிப்பு !
உயர்ந்த ரகம் !!

காரம், மணம், குணம்
இவற்றில் நிகரற்றது

C. V. ராமு சுருட்டு

வாசனைப் புகையிலை
தயாரிப்பாளர்கள்.

A. வெங்கட்ராம
கவுடர் & சன்ஸ்

: கோயமுத்தூர் :

—அந்த நன்றி விசுவாசமாகப் பட்டது இப்படி பெற்ற மகளுக்கு மேல் அந்தப் பிள்ளையை நினைத்து கவலைப் படுகிறேன் ! ஏனென்று கேட்கிருயா ? அவனுடைய நிழல் கூட நம் குழந்தையின் மேல் படவில்லை. இனியும் படப்போகிறதில்லை. ஆனால் இந்த சங்கதி வெளியே வராமல் எனனவோ போகாது. நாலுபேரும் பேசி கேலிசெய்கிற போது ஐயருடைய மனசு என்ன பாடுபடும் ? ....''

கந்தப்பனுடைய இந்தத் தர்ம வாதம் வள்ளியின் அகங்காரத்திற்குத் தூண்டு கோலாக அமைந்தது! கடுகடுப்புடன், '' இப்படிப் பட்ட அப்பன் வயிற்றில் தான் எத்தனை பிறவி யெடுத்தாலும் பிறக்க வேண்டும். ''

'' நீ சும்மா இரு அம்மா. இதோ நான் வருகிறேன். வெளியே போய் அந்ததப்பயலை ஒருகை பார்த்து விட்டு வருகிறேன்'', என்று சீறிக் கொண்டு எழுந்தான் ஆறுமுகம்.

'' தம்பி, பொறு. கோவம் பொல்லாதது. அதனுல் தீமைதான் விளையும், '' என்ருன்.

''மாட்டேன், தீமை தான் வித்து நடவு ஆகியிருக்கிறதே!'' என்று கூறியபடி எழுந்து நின்று, ''வள்ளி, நீ தைரியமாக இரு. அந்தப் பயலை ஒரு கை பார்த்தே விடுகிறேன் '', என்று வீரா வேசத்துடன் வெளியே பாய்ந்தான் ஆறுமுகம்.

(தொடரும்)



இந்தியா ஸிமெண்ட்ஸ் லிமிடெட் மதராஸ்-1.

தொழிற்சாலை : சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா

IC: 424

Phone Nos. Madurai 356 Periakulam 22
Kodaikanal 56 Ammayanaickanoor,
(Kodairoad) P.C.O. Extension 1

Avail your immediate opportunity to visit

KODAIKANAL

FAMOUS HEALTH RESORT IN SOUTH INDIA
AT 7000 FEET.

OUR BUSES & LORRIES PLY TO KODAIKANAL

FROM:

MADURAI — PERIAKULAM — DINDIGUL & KODAIKANAL ROAD.

Our buses provide comfortable journey over the distance of fifty miles (20 miles on plains & 30 miles on picturesque ghat section full of Natural Sceneries). The buses are plying at convenient timings, start at the correct time and reach the destination in time.

Note. Tickets are issued direct to the hill station Kodaikanal from all stations in India and Ceylon. Return tickets are issued by the railway during season period at a concession rate for visiting Kodaikanal.

We are plying regular lorry service to other important stations besides our many bus-routes connecting important places in Madurai and Ramnad Districts.

Kodaikanal,
1st Feb. 1958.

S. G. JAYARAJ NADAR,
Managing Director,
Kodaikanal Motor Union (Private) Ltd.

'இனமாம் இனம்!'

ராஜன்

[பாங்கு குமாஸ்தா பங்காரு அவருடைய வீட்டில் மாடியில் பழைய கணக்குகளைப் பார்வையிட்டுக் கொண்டிருக்கிறார். மாடிப் படியில் அவருடைய பையன் பரந்தாமன் ஏறி வந்து கொண்டே...]

பரந்தாமன் : (இரைந்து) அப்பா, வெள்ளை வந்துவிட்டது.

பங்காரு : அதற்கு என்னடா, இந்த இரைச்சல்? வெள்ளை வந்தால் வெளிச் சுவரில் முதலில் அடிக்கச் சொல்லு. பொங்கலுக்கு அடிக்காத வெள்ளை இப்போ எதற்கு வருகிறதாம்?

பர : அந்த வெள்ளை யில்லேப்பா... இது சலவை வெள்ளை. குருசாமி வந்திருக்கிறான்...

பங் : (பரபரப்புடன்) குருசாமியா! இதோ வந்து விட்டேன். நல்ல வேளை; சலவைத் துணி யில்லை யென்று இன்றைக்கு லீவு போட வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

[பங்காரு கீழே தட தடவென்று இறங்கி ஓடி வருகிறார்.]

குருசாமி : ஐயா, இன்ணைக்கு லீவா?

பங் : உன்னைப் போல தொழிலாளிகள் இருந்தால் இன்றைக்கு ஒரு நாள் மட்டுந்தானா லீவு போடணும்; வருஷம் முழுவதும் லீவிலேயே கழிக்க வேண்டியது தான்.

குரு : நான்தான் மாசம் ரெண்டு வெள்ளை கொண்டு வந்து விடுகிறேனே, ஐயா...

பங் : ஆமாம்; கணக்குச் சரிதான். ஆனால் கொண்டு வரும் நாட்களில்தான் வித்தியாசம்.

பர : அப்பா, இதோ சலவைக் கணக்கு.

பங் : கணக்கை நீதான் சரி பாரேன்... உனக்கு வயது காணாதா? ஊரில் அகப்பட்ட கார் நம்பரை யெல்லாம் கணக்காக எழுதி வைத்திருக்கிறாயே!

பர : சரி, அப்பா; நானே சரி பார்க்கிறேன். ஆனால் குருசாமி ஷர்ட்டுக்குப் பதிலாகத் தலையணை உறையை மடித்து வைத்துக் கணக்குச் சொன்னால் அதற்கு நான் ஜவாப்தாரி யல்ல...

பங் : இங்கே கொடுடா கணக்கை. கணக்குப் புலி வயிற்றில் இப்படிக் கடுவன் பூனை வந்து பிறந்திருக்கிறது...

[பங்காருவின் மனைவி காளியம்மாள் வருகிறாள்.]

காளி : பிள்ளையைப் பூனை, பூனை யென்று சொல்லித்தான் தெருவிலுள்ள பயல்களெல்லாம் அவனைப் "பூனை ராமன்" என்று கூப்பிடுகிறார்கள்.

பங் : இவன் அவர்களைப் பிராண்ட வேண்டியதுதானே! போடா பூனை ராமா! குருசாமி, எடுத்து வை... கால் சட்டை ஐந்து, புஷ்கோட்டு நான்கு...

[கணக்கை முடித்து விட்டு சலவைத் தொழிலாளி குருசாமி சென்று விடுகிறான்.]

காளி : வெள்ளையை எடுத்துப் போய் பெட்டியில் வையுங்களேன். ஏன் அழகு பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள் ?

பங் : அழகையா பார்க்கிறேன் ; அலங்கோலத்தைத்தான் பார்த்துக்கொண்டு நிற்கிறேன். இதோ பார், இந்தப் புஷ்கோட்டின் கையை! இப்படியா பெட்டி போடுகிறது ? மேலே அழகாக மடித்திருக்கிறது ; உள்ளே பார், ஒரே கசங்கல். சவைத்துப் போட்ட மாதிரி, எந்த மாட்டு வாயில் கொடுத்தானோ ?

காளி : இதென்ன என்னிடம் வருகிறீர்கள் ? பெட்டி போட்டது நானா? குருசாமியைக் கேளுங்கள்.

பங் : அதற்குள்ளேதான் பணத்தைக் கொடுத்து அவனை அனுப்பி விட்டாயே ! இரண்டு கையும் போச்சு !

[பரந்தாமன் ஓடி வருகிறான்.]

பர : என்னப்பா, கையிலே? டாக்டரைக் கூட்டிக் கொண்டு வரட்டுமா ?

பங் : போடா மடையா! எப்போது வெளியே போகலாமென்று காத்துக் கொண்டிருக்கிறாயோ? இதோ பாரடா, புஷ்கோட் கையை!

பர : (சிரிக்கிறான்) நீங்கள் துணிக்கு இரண்டணா கொடுத்தால் இப்படித்தான் பெட்டி போடுவான். நாலணா கொடுத்துப் பாருங்கள் ; புஷ்கோட் கையை என்ன, உங்கள் கையைக் கூட அழகாகப் பெட்டி போட்டு விடுவான் !

பங் : நில்லுடா பயலே !

பர : (தூரத்தில் நின்று கொண்டு) அப்பா, நான் சிங்காரம் சிகை அலங்கார மன்றத்திற்குப் போய் விட்டு வரேன்...

பங் : (எங்கோ ஞாபகமாக) அங்கே என்னடா விசேஷம்? ஏதாவது பாட்டுக் கச்சேரி ஏற்பாடு ஆகியிருக்கிறதா ?

பர : (சிரித்து) இல்லேப்பா.. இது முடி திருத்தும் நிலையம்...

பங் : மருத்துவ நிலையமா? கருமம், கருமம் ! அங்கே உனக்கென்னடா வேலை? வேண்டுமென்றால் அம்மாவைப் போகச் சொல்...

பர : (ஒரு பெருஞ் சிரிப்புச் சிரித்து விட்டு) ஹேர் கட்டிங் சலூன், அப்பா !

பங் : அதற்கா இப்படித் தடபுடலான பெயர் !

காளி : (கோபமாக) என்னை எங்கே போகச் சொல்லுகிறீர்கள் ? நீங்கள் எண்ணெயும் சீப்பும் வாங்கிக் கொடுக்கிற லட்சணத்திற்கு தலை முடியை வெள்ளைக்காரி மாதிரி கவாதது செய்து கொள்ள வேண்டியது தான் !

பங் : (சாந்தமாக) காளியம்மா, ஏன் கோபப்படுகிறாய்? ஏதோ புதுப் பெயர் ; புரிந்து கொள்ளாமல் சொல்லி விட்டேன். (சமாளித்துக் கொண்டு) குருசாமி நம் துணிகளில் செய்திருக்கிற உழவு வேலையைச் சொல்லிக் கொண்டிருந்தேன்...



" இப்ப எல்லாரும் புது புது தினுசா மாடி வீடு கட்டுகிறார்கள் ! நீங்க மட்டும் இன்னும் பழைய காலத்து வீடு மாதிரியே கட்டுகிறீர்களே ! இந்த வீடு எனக்கு பிடிக்கவே யில்லை !

காளி: உங்கள் கை கருணைக் கிழங்காக யிருக்கிறதை அவன் புஷ்கோட்டில் உழுது காண்பித்திருக்கிறான்.

பங்: ஓஹோ, அப்படியானால் கால் சட்டையின் காலையும் ஒடித்து மடக்கியிருப்பானோ?

காளி: ஒரு வேளை அப்படியும் இருக்கலாம். எதற்கும் அதையும் எடுத்துப் பார்த்து விடுங்கள்.

பிடரியைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு வா...

[பரந்தாமன் இதுதான் சமயம் என்று வெளியே ஓடி தன் சகாக்களுடன் விளையாடப் போகிறான்.]

காளி: என்ன, அப்படியே அசந்து போய் நின்று விட்டீர்களே?

பங்: இல்லை; கல்வெட்டு, புதைபொருள், பழங்காலச் சுவடிகள், இப்படி ஆராய்ச்சிகளில் ஈடுபடு

பங்: (கால் சட்டையை எடுத்துப் பார்த்து விட்டு, உரத்த குரலில்) குருசாமி, குருசாமி; அட பாவிப் பயலே... இரண்டு காலும் போச்சு...

பர: (அடுத்த அறையிலிருந்து ஓடி வந்து) என்னப்பா? டாக்டரைக் கூப்பிடட்டுமா?

பங்: (கோபத்தோடு) ஓடுடா, ஓடு, ஓடு... குருசாமியை அப்படியே

கிறார்களே, அவர்களை நினைத்துக் கவலைப்படுகிறேன்...

காளி: கவலைப்படுவதற்கு வேறே விஷயம் இல்லை யென்று அதை நினைத்தீர்களாக்கும். துணிகளைக் கொண்டு பெட்டியில் வையுங்கள்.

பங்: அந்த ஆராய்ச்சியாளர்கள் அப்படிப் போய்க் கஷ்டப் படாமல், குருசாமி பெட்டி போட்டுக் கொண்டு வந்த துணிகளை

ஆராய்ச்சி பண்ணலாமே யென்று நினைத்தேன். கஷ்டமில்லாமல் அரிய பெரிய உண்மைகளைக் கண்டு பிடிக்கலாமே! ஒரு சாண் துணியில் எத்தனை சுருக்கங்கள்! எத்தனை மேடுகள், எத்தனை பள்ளங்கள்!

[பரந்தாமன் வருகிறான்.]

பர: அப்பா, என் துணிகளைக் கொடுங்கள்...

பங்: (கோபத்தில்) நீ குருசாமியைக் கூப்பிடப் போகவில்லையா?

பர: மறந்து போச்சு, அப்பா... இரண்டணா கொடுங்கள்; ஒரு வாடகை சைக்கிள் எடுத்துக் கொண்டு போய் ஒரு நொடியில் கூட்டிக் கொண்டு வருகிறேன்.

பங்: ஓஹோ, உனக்கு இனாம் வேறே வைக்கணுமா? சரி, சரி; இது இனாம் காலம்! உன்னைச் சொல்லிக் குற்ற மில்லை. உன் அம்மாவிடம் வாங்கிக் கொண்டு போ...

பர: இதோ குருசாமியே வந்து விட்டான், அப்பா. (மனதுக்குள்) கைக்கெட்டியது வாய்க்கெட்ட வில்லை... ரெண்டணா போச்சு...

பங்: வந்து விட்டானா? குருசாமியா? (குரலை உயர்த்திக் கொண்டு) குருசாமி...

குரு: என்ன ஐயா? ஏன் மறுபடியும் வந்தேன்னு கேட்கிறீங்களா? பொங்கல் இனாம் வாங்க மறந்து போச்சு... திரும்பி வந்தேன்...

பங்: பொங்கல் இனாமா? அடே பரந்தாமா, வாடா இங்கே... குருசாமியிடம் கையைக் காட்டு...

குரு: (ஆச்சரியத்துடன்) என்னங்க, இது? எனக்கென்ன வைத்தியமா தெரியும்?

பங்: (கோபத்துடன்) அந்தக் காலையும் காட்டு... பரந்தாமா காட்டுடா!

குரு: (நிதானமாக) துணிங்களா? எங்க சின்னையா மகன் ஊரிலேருந்து வந்திருந்தான்... நான் வெளியே போயிருந்தப்போ, அவன் பெட்டி போட்டான்... அடுத்த தடவை நானே போட்டுட்டு வரேனுங்க...

பங்: அப்போ இனாமும் அடுத்த தடவை வாங்கிக் கொள்ளலாம்...

காளி: அவனுக்குக் கொடுக்கிறதைக் கொடுத்துடுங்கோ... அதுலே பாக்கியிருப்பானேன்...

பங்: நீயா புஷ்கோட்டைப் போட்டுக் கொண்டு பாங்குக்குப் போகிறாய்? அங்கே என் கோட்டைப் பார்த்து எல்லோரும் சிரிக்கிறார்கள். சிரிப்பதற்கு இனாமா?

குரு: இதுலே சிரிப்பதற்கு என்ன இருக்குதுங்க?

பங்: ஆமாம், அழத்தான் செய்யணும். மற்றவர்கள் சிரிக்கும் போது நான் அழத்தான் செய்கிறேன்... சரி அழுவதற்கு இனாமா?

குரு: இப்படிக் கேட்டா நான் என்ன ஐயா, செய்யறது?

பங்: ஒன்றும் செய்ய வேண்டாம். நான் அழறேன்; அதற்கு நீ இனாம் கொடு... இதோ வந்து விடுகிறேன், நில்...

[துணிகளை எடுத்துக்கொண்டு மாடி ஏறுகிறார். பெட்டியில் வைத்து விட்டு கீழே வருமுன் குருசாமி போய் விடுகிறான்.]

பங்: எங்கே அவன்?

காளி: அவன் போய் விட்டான்... முடி வெட்டும் சிங்காரம் வந்து கூட்டிக் கொண்டு போகிறான்...

பர: நான் கூட்டிக் கொண்டு வரட்டுமா, அப்பா.. இரண்டணாக் கொடுங்கள்...

பங்: போடா, இனாம் பயலே...

காளி: ஆமாம்.. அந்த ஒரு பெயர் தான் அவனுக்குப் பாக்கியிருந்தது, அதையும் கொடுத்து விட்டீர்கள்! குருசாமியும் சிங்காரமும் நாளைக்கு வந்து நிற்பார்கள், அவர்களுக்குக் கொடுங்கள் இந்தப் பெயரை!

பங்: (சிரித்து) கொடுத்தால் போச்சு! இனாமாவது மிச்சமாகுமே! இனாமாம், இனாம்!

✱

For Complete Range of Cotton Spinning Plant

TEXTOOL

CARDING ENGINES — RING SPINNING FRAMES

DRAWING FRAMES — REELING MACHINES

FLY FRAMES — BUNDLING PRESS

TEXTOOL DIESEL ENGINES

For Agricultural purposes.

ENQUIRIES SOLICITED

TEXTOOL COMPANY LIMITED

Post Box No. 221, COIMBATORE (South India)

Telephone: 409 & 1409 — Telegrams: "TEXTOOLCO"

கருணை செய்த செயல்



டாக்டர் சுந்தரம் பிரிஸ்கிருப்ஷனை எழுதி என் கையில் கொடுத்தார்.

"இந்த இஞ்செக்ஷன் மருந்தை உடனே வாங்கி வாருங்கள். பதினைந்து இஞ்செக்ஷன்கள் போட்டுக் கொள்ள வேண்டும். அப்போது தான் உம்முடைய மனைவி உயிர் பிழைப்பாள். உடம்பில் ரத்தமே இல்லை," என்றார் மேலும்.

"ஐயோ!" என்று அலறிவிட்டேன். "மருந்தின் விலை எவ்வளவு டாக்டர்?" என்று கேட்டேன்.

"ஐம்பது ரூபாயாகும்........"

அந்தத் தொகையைக் கேட்டதும் என் தலை

சுழன்றது. ஐம்பது ரூபாய்! அவ்வளவு தொகைக்கு நான் எங்கே போவது? தேதி இருபது!

நானும் அடுத்த மாதம் தந்துவிடுகிறேன் என்று மூன்று மாதங்களாகக் கூறி வருகிறேன். சம்பளப் பணம் வாங்கிய அன்றே கலைந்து விடுகிறது. அப்புறம் தினப்படித் தேவைக்கு நண்பர்களிடமிருந்து கால், அரை என்று கடன் வாங்கி எப்படியோ பூமிக்குப் பாரமாய்க் காலம் கழிந்து வருகிறது. இப்படி எத்தனை குடும்பங்கள் கஷ்டப்படுகின்றன!

இந்த ரீதியில் குடும்பம் இருக்கும் போது குடும்பத்தில் வியாதியும் வந்துவிட்டால் என்ன செய்வது?

என் மனைவி ரங்கநாயகியும் என்னைப்போல் ஏழ்மையான குடும்பத்திலிருந்து வந்தவள்தான். ஆனாலும் அவளைக் கண்டபோது நான் அவளுடைய அழகில் மயங்கி அவளை மணந்துகொண்டேன். அவள் என்னை மணந்தபோது எத்தனை அழகாய் அன்றலர்ந்த புஷ்பம் போல் விளங்கினாள்! அவளை மனைவியாக பெற்ற நான் மிகுந்த பாக்கியவானாக விருந்தேன். என் ஏழ்மை நிலையை உணர்ந்து அவளும் என் வருவாய்க் கேற்ப பாங்காய்க் குடித்தனம் நடத்தி வருகிருள். ஒரு நாளும் அவள் தனக்குத் தினப்படி உடுத்திக் கொள்ள சாதாரணப் புடவை வேண்டுமென்று கூட வாய் திறந்து கேட்டதில்லை. கிழிந்து போன புடவைகளையே திரும்பத் திரும்ப அவள் தைத்து, ஒட்டுப் போட்டு உடுத்திக் கொள்வதைக் கண்டு நெஞ்சுருகி, ரத்தக் கண்ணீர் வடித்திருக்கிறேன். பிறகு எப்படியோ யாரிடமோ கடன் வாங்கி அவளுக்குச் சாதாரணமான நூல் புடவையை—பத்து ரூபாய் முரட்டுப் புடவையை-வாங்கிக் கொடுத்தபோது அவள் எவ்வளவு சந்தோஷமடைந்தாள்! அவள் ஆயிரத்தில் ஒரு பெண்!

ரங்கநாயகியுடன், எவ்வளவு

பணக் கஷ்டமிருந்தபோதிலும் வாழ்க்கை ஆனந்தமயமாகக் கழிந்து கொண்டுதான் வருகிறது. காரியாலயத்திலிருந்து வீட்டுக்கு வரும்போது அவள் அன்புடன் வரவேற்கும் காட்சியே என் மனச் சோர்வு யாவற்றையும் போக்கி விடும். என்னுல் அவள் படும் கஷ்டங்களை எண்ணி, எண்ணி என் மனதில் நான் கொண்ட கவலைகளை யெல்லாம் அவளிடம் கூறும் போது அவள் எப்படி என்னைச் சமாதானப் படுத்துவாள்!

"எனக்கு எவ்விதக் கஷ்டமுமில்லை. இங்கே உங்களுக்கு இன்பமாய்ச் சேவை செய்வதே எனக்குப் பெரும் இன்பத்தைக் கொடுக்கிறது. நான் மிகவும் சந்தோஷமாகவே இருக்கிறேன். என்னைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளவேண்டாம்," என்பாள்.

ஏழு வருடங்களாய் இருவரும் எளிமையான இன்ப வாழ்வு வாழ்ந்து வருகிறோம். ஆனால் இந்த ஏழு வருட வாழ்க்கையில் ரங்கநாயகி துரும்பாய்ப் போய்விட்டாள்.

அதோ, சுவற்றில் மாட்டப்பட்டிருக்கும் அந்தப் போட்டோ! கல்யாணமானதும் இருவரும் போட்டோ ஸ்டுடியோவுக்குச் சென்று எடுத்துக் கொண்டது. அதில் தான் ரங்கநாயகியின் எழிலுருவம் எப்படிப் பிரகாசிக்கிறது! கொழுவிய கன்னங்களும், உடல் கட்டும், முகக் காந்தியும் காண்போரை மயங்கச் செய்கின்றனவே! ஆனால் இந்த ஏழு வருட ஏழ்மை வாழ்வில் அவள் எப்படித் துரும்பாகிவிட்டாள்! காய்ந்து போன மரம்போலாகிவிட்டாள்! அவளுடைய உடலே மெருகு தேய்ந்து வருவதை நாளுக்கு நாள் உணர்ந்து வந்தேன். அவ்வப்போது அவள் சோர்ந்து போய்ப் படுத்துவிடுவாள்; உடம்பெல்லாம் வலிக்கிறது என்பாள்; கை கால்களெல்லாம் மரத்துப் போய்விடும். அவளுக்கு அவ்வப்போது ஏதோ தற்காலிகமாகச் சிகிச்சைகள் செய்தேன்.

எங்களூரில் ஒரே டாக்டர் கனகசுந்தரம். அவர் தம்முடைய கொடியை அந்த வட்டாரத்தில் நிலைநாட்டிப் பதினைந்து வருடங்களாய்த் தொழில் செய்கிறார். ஆதலால் அவர் இட்டதுதான் சட்டம்; அவர் தந்ததுதான் மருந்து; அவர் போட்டதுதான் 'பில்'! பண விஷயத்தில் மிகவும் கண்டிப்பு. ஒன்றுக்கு மூன்றாய் வசூல் செய்வதில் தயங்காதவர். அன்றைய மருந்துப் பணத்தை அன்றே கொடுத்து விட வேண்டும். மிகவும் பெரிய மனிதர்களுக்கு, நெருங்கிய நண்பர்களுக்கு மட்டும் மாதா மாதம் பில், அனுப்பி வசூலித்துக் கொள்வார். ஆனால்ஏழைக்குமாஸ்தாவான நான் அந்தப் பாக்கியத்திற்குக் கொடுத்து வைக்கவில்லை.

அதனால் ரங்கநாயகிக்கு நோய் கண்டபோதெல்லாம் ஒரு நாள், இரண்டு நாட்கள் மருந்து வாங்கிக் கொடுத்ததும், சிறிது குணமானது போல் தெரிந்தால் ரங்கநாயகி பிடிவாதமாக, "போதும் மருந்து,,குணமாகிவிட்டது...சும்மா டாக்டருக்குக் கொண்டுபோய்க் கொட்ட பணம் எங்கே யிருக்கிறது? நீங்கள் சும்மா இருங்கள்," என்று என்னை வலுக்கட்டாயமாய் மேலும் மருந்துவாங்கி வரவிடாமல் தடுத்து விடுவாள். பணம் இல்லாத தோஷத்தால் நானும் வேறு வழியின்றி அவளுடைய பேச்சுகளுக்குக் கட்டுபட வேண்டியதாய் வந்துவிடும், மனதில் பெரும் பாரம் இருந்தபோதிலும்.

இப்படியே—அறைகுறை வைத்தியத்தினுல்—அவளுடைய உடல் நிலை நாளுக்குநாள் க்ஷீணமடைந்து கொண்டு வந்தது. அவளுடைய உடல் தேய்ந்து எலும்பாய், வெறும் தோல் போர்த்த கூடாய் மாறிக் கொண்டு வருவதைக் கண்டு உள்ளம் உருகி வந்தேன். அவளுக்குப்

உழவுக்கும் தொழிலுக்கும்



வந்தனை செய்வோம்

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ்
பிரைவேட் லிட்.
மதுரை - திருச்சி - திருநெல்வேலி
புதுக்கோட்டை - சேலம் - கோயம்புத்தூர்

மதராஸ் ஆட்டோ ஸர்வீஸ் பிரைவேட் லிட்.
மதராஸ் - பெங்களூர்

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிட்.
மதுரை

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிட்.
மதராஸ்-6

டி.வி.எஸ்.
ஸ்தாபனங்கள்

TVS

தி மதராஸ் மோட்டார் இன்ஷ்யூரன்ஸ்
கம்பெனி லிட்.
மதராஸ்

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிட்.
புதுக்கோட்டை - மதராஸ்

இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & ஆக்ஸஸரீஸ்
பிரைவேட் லிட்.
மதராஸ்-2

சுந்தரம்ஸ் பிரைவேட் லிட்.
மதுரை

சுந்தரம் பைனான்ஸ் பிரைவேட் லிட்.
மதராஸ்-2

த. பெ. நெ. 297

S. சந்தோச நாடார் லிமிடெட்

இறக்குமதியாளர்களும் மொத்த வியாபாரஸ்தர்களும்

83-85, குமாரவீதி :: கொழும்பு-11.

அலுமினிய பாத்திரங்கள், சமையல் பாத்திரங்கள், எனமல் பாத்திரங்கள், பீங்கான் வகைகள், போத்தல்கள், கடிகார வகைகள், விளையாட்டுச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், பவுண்டன் பேனா, சிலேட் பென்சில் வகைகள், ஷாப்பு சாமான்கள், மற்றும் உணவு சாமான்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விலை சகாயமாக எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

பிராஞ்சு:

போன்: 333

19, கொட்மலே ரோடு

நாவலப்பிட்டிய.

ஏஜன்ட்ஸ்:

போன்: 3262 த. பெ. நெ. **2345**

S. சந்தோஷ நாடார் & சன்

1/4. ஈவனிங் பஜார் :: :: P. T. மதருஸ்.

&

37, ஹைரோடு

திருநெல்வேலி ஜங்ஷன்.

போஷாக்குத் தரும் உணவையோ வைத்தியமோ செய்ய இயலாத வனாய் இருந்தேன்.

கடைசியில் ரங்கநாயகி படுத்த படுக்கையாக விழுந்து விட்டாள். ரத்தமே உடலில் இன்றிக் கரும்பைப் பிழிந்து போட்டாற் போன்று சக்கையாக விழுந்து விட்டாள்.

அவளை டாக்டர் கனகசுந்தரத்திடம் காட்டிய போதுதான் அவர் அவளுடைய உயிரின் நிலையைப் பற்றித் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அதைக் கேட்டதும் என் உடலும் உள்ளமும் பதறிவிட்டது. என் ரங்கநாயகியின் உயிர் ஊசலாடும் நிலைக்கு வந்துவிட்டது!

அவளுடைய உயிரை மீட்க, டாக்டர் கூறிய இஞ்செக்ஷன் மருந்து வாங்கி வந்து விட்டால்? ரங்கநாயகி என்னைப் பிரியமாட்டாள். என்னைத் தனியே தவிக்கவிட்டு விட மாட்டாள் அல்லவா?

ஆனால் ஐம்பது ரூபாய்க்கு எங்கே போவது? ஐம்பது ரூபாய்! ஐம்பது நயாபைசாகூட இல்லையே...

டாக்டரையே கேட்டுப் பார்த்தால்? அவர் தருவாரா? தினப்படி மருந்துப் பணத்தையே அன்றன்றைக்கே கேட்டவர், ஐம்பது ரூபாய் தருவாரா?

"ஸார், கையில் ஒரு ரூபாய்கூட இல்லை...மருந்துக்கு வேண்டிய பணத்தைக் கொடுத்தால்...நான் முதல் தேதி கொடுத்து விடுகிறேன்..." என்றேன் தயங்கிய படியே.

"என்ன? மருந்துக்கு வேண்டிய பணம் நான் தரவேண்டுமா? பேஷ்! பணம் கிணம் தர நான் என்ன மார்வாடியா? பாங்கு வைத்திருக்கிறேனா? அதெல்லாம் பணம் கிடைக்காது...எப்படியாவது மருந்து வாங்கி வாருங்கள். அப்போதுதான் உங்கள் மனைவி உயிர்பிழைப்பாள்... இப்போதே சொல்லிவிட்டேன்.. தாமதம் செய்யாதீர்கள்.," என்றார் டாக்டர்.

அவரை நொந்து என்ன பயன்? தயாளமே உருவாக இருந்து மேற்கொள்ள வேண்டிய இந்தத் தொழிலில் உள்ளவர்கள் அனேகமாக அதைத்தவிர மற்ற யோக்யதாம்சங்களை உடையவர்களாகத் தானே இருக்கிறார்கள்!

தள்ளாடித் தள்ளாடி வெளியே வந்தேன். கொண்ட மனைவிக்கு வைத்தியம் செய்யச் சக்தியற்றவனாக இருக்கிறேன். அவள் சாகப் போவதைப் பார்த்துக் கொண்டே இருக்கிறேன்.

என் நண்பர்கள் கோபாலன், ராமு, சந்திரன் மூவரையும் கேட்டுப் பார்த்து விட்டேன். அவர்களுக்கு என்னை விடப் பணமுடை. அவர்கள் என்பால் மிகவும் அனுதாபம் கொண்டார்கள். என் போன்ற நிலையிலே இருக்கும் அவர்களால் அதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

கடைசியாக சேஷாத்ரியிடம் சென்றேன். என் நண்பர்களில் அவன்தான் சிறிது பசையுள்ளவன்.

"நவீன சினிமா டைரி!"

வெற்றிகரமான தயாரிப்பாளர் : 'ப்ளாக்கில்' பணம் கேட்கும் நட்சத்திரங்களுக்கு, கள்ள நோட்டுகளையும், கடத்தப்பட்ட கரன்ஸிகளையும் தருபவர்!

'ஸ்டுடியோ' சொந்தக்காரர் : ஒரு தகரக் கொட்டகை இவருக்குச் சொந்தம்; எப்பொழுதும் முன்பணம் கேட்பார்; ஆனால் செட்கள் அமைப்பதைப் பற்றிக் கவலையே படாதவர்!

விஞ்ஞானக்கூட நிர்வாகி : இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மிகுந்த இந்த நேரத்தில், கச்சா பிலிமைக் கடத்தி, தேவையானவர்களுக்கு இரட்டிப்பு அல்லது மூன்று மடங்கு விலையில் விற்பவர்!

புரடக்ஷன் எக்ஸிக்யூடிவ் : காக்காய் பிடிக்கும் கலை, இவருக்கு தயாரிப்பாளரைத் தன் வலையில் விழச் செய்து, தவறான ரசீதுகளை எப்பொழுதும் கொடுத்து, அவரைச் சுரண்ட உதவுகின்றது.

பிரதிநிதி : தியேட்டர் சொந்தக்காரருடன் முழுவதும் ஒத்துழைப்பவர். கொள்ளையில் பங்கு பெற்று இறுதியில் ஒரு வினியோகஸ்தராகவோ ஒரு தயாரிப்பாளராகவோ மாறுபவர்!

பாக்ஸ்ஆபிஸ்ஹிட்ஸ் : தியேட்டர் வசூலால் நிரம்பிய பெட்டி வினியோகஸ்தர் ஆபிஸுக்குப் போகும்; தயாரிப்பாளருக்கு அடிகள் ('ஹிட்ஸ்') மிச்சம்!

(மூலம் : 'பிளாஷ்'—ஆங்கில சினிமா இதழ்)

சாப்பாட்டுக்குப் போதுமான நெல் வருகிறது. அதனால் அவனிடம் பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் போனேன். அதிர்ஷ்டவசமாய் இருபத்தைந்து ரூபாய் கிடைத்தது.

என் மனம் மிகவும் சந்தோஷமடைந்தது. பஸ்ஸில் டவுனுக்குப் போய் மருந்தை வாங்கி வந்து விடலாம் சாயந்திரத்துக்குள் என்றெண்ணி வீட்டுக்குப் போய் ரங்கநாயகியிடம் கூறிவிட்டுப் புறப்பட ஆயத்தமானேன்.

"ராஜு", என்ற குரல் கேட்டது. வெளியே வந்து பார்த்தேன். விஸ்வநாத ஐயர்! அவர் என்னுடைய பால்யத்தில் உபாத்தியாயர். ஐந்தாம் ஆறும் வகுப்புகளுக்கு வருவார். என் மண்டையில் ஏற மறுத்த கணக்கைக் கஷ்டப்பட்டுப் புகுத்தி அதில் முதல் மார்க்கை வாங்கச் செய்தவர். அவர் தாம் மட்டும் ஏணியாய் விளங்கி எத்தனையோ மாணக்கர்களை வருடாவருடம் உயர்த்திக் கொண்டு வருகிறவர். உபாத்தியாயர்களின் விதயே அதுதானே!

விஸ்வநாத ஐயர் வேலையிலிருந்து விலகி ஓய்வு பெற்று ஐந்து வருடங்கள் எப்படியோ கஷ்டப்பட்டு குடும்பக் காலட்சேபத்தை ஓட்டிவிட்டார். அதற்குப் பின் இந்த இரண்டு வருடங்களாக எப்படித்தான் காலட்சேபம் நடத்துகிறாரோ அவருக்கும் அவரைப் படைத்த ஆண்டவனுக்கும்தான் வெளிச்சம்.

"என்ன ஸார்?" என்று கேட்டேன் அவரைப் பார்த்ததும்.

"உன்னிடம் தான் கடைசியாக வந்திருக்கிறேன், ஜகந்நாதன்! உன்னிடம் இருக்குமோ இருக்காதோ, எனக்கே சந்தேகந்தான். எல்லோரையும் கேட்டுப் பார்த்தாகிவிட்டது; கிடைக்க வில்லை. சுந்தரேசனுக்குத் திருச்சிராப்பள்ளியில் கலெக்டராபீஸில் உத்தியோகத்திற்கு உத்தரவு வந்திருக்கிறது. அவன் வேலை

யில் போய்ச் சேர முதலில் முப்பது ரூபாயாவது வேண்டும். உன்னிடல் இருந்தால், கொடுத்தாயானால் உன் உதவியை என்றைக்குமே மறக்க மாட்டேன். எவ்வளவோ உதவிகளை நீ இதுவரை செய்திருக்கிறாய். ஆனால் இப்போது செய்யும் உதவிதான் மிகவும் பெரிது....'' என்றார்.

என் உள்ளம் அதைக் கேட்டு மிகவும் சங்கடப் பட்டது. அவருக்கு எப்போதோ ஒரு ரூபாய். அரை ரூபாய் என்று என்னிடமிருந்த போது கொடுத்ததுண்டு. அவர் அதையெல்லாம் ஒரு உதவியாகக் கூறுகிறார்.

ஆனால் இப்போது முப்பது ரூபாய் கேட்கிறாரே! நான் எங்கே போவேன்? எனக்கும் பணத் தேவை எப்படிக் கடுமையாக இருக்கிறது! என் அன்பு மனைவியின் உயிருக்கே ஆபத்து வந்திருக்கிறது. அவளுக்கு வேண்டிய இஞ்செக்ஷன் மருந்தை வாங்குவதற்குத் தேவையான ஐம்பது ரூபாய்க்காக எங்கெங்கெல்லாமோ அலைந்து கடைசியில் இருபத்தைந்து ரூபாய் தான் கிடைத்திருக்கிறது.

ஆனால் இந்த இக்கட்டான சமயத்தில் என்னை இவர் முப்பது ரூபாய் கேட்டாரானால் நான் எங்கே போவேன்? ஆகவே என் நிலையை விளக்கினேன், அவருக்கு உதவ முடியாமலிருப்பதற்கு என் மனம் மிகுந்த வருத்தத்தை தெரிவித்தேன்.

மனத்தில் பெரும் பாரத்துடன் வீட்டுக்குள் நுழைந்தேன்.

"யார் வந்திருந்தது? விஸ்வநாதய்யரா?'' என்று கேட்டாள் ரங்கநாயகி,

"ஆமாம்......''

"எதற்கு வந்தார்?''

"சுந்தரேசனுக்குத் திருச்சிராப்பள்ளியில் உத்தியோகத்துக்கு உத்தரவு வந்திருக்கிறதாம். வேலையில் போய்ச் சேருவதற்கு முப்பது

காயகல்பம் காண்பார்களோ?

சாவை வென்று, சிரஞ்சீவியாகிவிட மனிதன் முயல்கிறான்...கற்பகோடி காலமாக அவன் கண்டு வந்த இந்தக் காயகல்ப கனவு, நினைவாகிவிடும் போல்தான் தோன்றுகிறது! இதோ.... சோவியத் இரண சிகிச்சைக் கருவிகள் ஆராய்ச்சி நிலயத்தின் டைரக்டர் டாக்டர் என். ஜி. அனன்யெவ் கூறுவதைப் படியுங்கள்!

"எங்கள் ஆராய்ச்சி நிலயத்தில் நீங்கள் ஆரோக்கியமான நாய்கள் சிலவற்றைக் காணலாம்; இவற்றின் பாதங்கள் துண்டிக்கப்பட்டு ஒரு வாரம் வரை குளிர்ப் பெட்டியில் வைத்து, பாதுகாக்கப் பட்ட பிறகு திரும்பவும் தைத்து ஒட்டப்பட்டன என்பதை நீங்கள் நம்ப மாட்டீர்கள்...

"ஒரு முறை நாங்கள் ஒரு நாயின் தலையைத் தனியே எடுத்து, மற்றொரு நாயின் உடலுடன் சேர்த்து ஒட்டினோம். அதன் உயிரை ஒரு வாரம் வரை நீடிக்கச் செய்ய முடிந்தது. இறந்தவர்களின் உறுப்புகளை உபயோகித்து உயிரோடுள்ளவர்களின் வாழ்வை நீடிக்கச் செய்வது சாத்தியமே!! இன்னும் நாற்பது ஆண்டுகளில் மனிதனது உயிரும், உடல்நலமும் நம் கற்பனைக்கும் எட்டாத பல அதிசய வழிகளில் பாதுகாக்கப்படும்.

விந்தைகள் பல விளைக்கும் இவ்விஞ்ஞானிகள், காயகல்பமும் கண்டு விடுவார்களோ?

ரூபாய் வேண்டுமென்று கேட்டார். நான் எங்கே போவது அவ்வளவு தொகைக்கு? அவரைப் பார்த்தால் பரிதாபமாகத்தான் இருந்தது. என்ன செய்யலாம்? எல்லோருக்கும் தாராளமாக வாரி வழங்க நம்மைப் பாரி வள்ளலாய்ப் படைக்கவில்லையே பகவான்!'' என்றேன்.

"பாரி வள்ளலாய் இருந்தால் தான் வழங்க வேண்டுமா என்ன? இருப்பதைக்கொடுக்கலாமல்லவா?'' என்றாள் ரங்கநாயகி.

"இருந்தால் கொடுப்பதற்கென்ன கஷ்டம்? உனக்கு மருந்து வாங்கி வருவதற்காக சேஷாத்ரியிடமிருந்து இருபத்தைந்து ரூபாய் வாங்கி வந்தேன். நல்ல வேளையாய் நான் முந்திக் கொண்டேன். இல்லாவிட்டால் இதுகூடக் கிடைத்திருக்காது. விஸ்வநாத ஐயர் வாங்கிக் கொண்டு போய்விட்டிருப்பார், அவனிடமிருந்து,'' என்றேன்.

பிறகு, "ரங்கம், கஞ்சி இதோ பக்கத்தில் வைத்திருக்கிறேன். நான் டவுனுக்குப் போய் இரண்டு மணி சாவகாசத்தில் மருந்தை வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன். சாயந்திரமே ஒரு இஞ்செக்ஷன் செய்வதாக டாக்டர் கூறியிருக்கிறார்,'' என்று கூறிப் புறப்பட்டேன்.

"இந்தாருங்கள்......,'' என்ற ரங்கநாயகியின் மெல்லிய குரல் தடுத்தது.

"என்ன ரங்கம்?''

"எனக்கு இப்போது மருந்து வாங்கி வர வேண்டாம்...''

"என்ன சொல்கிறாய், ரங்கம் நீ?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"அந்தப் பணத்தை விஸ்வநாதய்யரிடம் கொடுத்து விடுங்கள்... பாவம், அவர்களுடைய குடும்பம் கஷ்டப்படுகிறது! சுந்தரேசனுக்கு வேலை கிடைத்து விட்டால் அவர்களுடைய துயரமெல்லாம் தீர்ந்து விடும்...'' என்றாள்.

"உன் நிலையை அறியவில்லையா, ரங்கம்? டாக்டர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா?'' என்றேன்.

"என் உடம்பு கிடக்கட்டும்... நான் எப்போதுமே இப்படித்தான் கிடக்கிறேன். நான் போனாலும் ...உங்களுக்கு ஒரு பாரம் குறையும்... இந்த இஞ்செக்ஷன் மருந்தில் மட்டும் என்ன பயன் விளையப் போகிறது? என் விதி எப்படியோ அப்படியாகிறது. அதைக் கொண்டு போய் அவரிடம் உடனே கொடுங்கள்... ஒரு பெரிய குடும்பமே உய்யும்,'' என்றாள் ரங்கநாயகி.

"ரங்கம்..எனக்குச் சகலமும் உனக்குப் பின்னால்தான்...உன்னை இழந்து நான் எப்படி வாழமுடியும்? நான் பிறருடைய துயரைக் கண்டு கலங்கி நம் நிலைமையை மறந்தால் நம்மை யார் காப்பாற்றுவார்கள்? நமக்குமிஞ்சித்தானே தானம் செய்ய வேண்டும்? உன் உயிர் ஊசலாடும் போது...அதெல்லாம் நீ அலட்டிக் கொள்ளாதே ரங்கம்...அவர் வேறெங்காவது பார்த்து பணம் புரட்டிக் கொள்வார்...இந்தப் பணம் கிடைக்க நான் எவ்வளவு கஷ்டப் பட்டேன் தெரியுமா?'' என்றேன்.

"நான் உண்மையாகத்தான் சொல்கிறேன். நாம் ஒருவரைக் காப்பாற்றினால் பிறர் யாராவது நம்மைக் காப்பாற்றுவார்கள். மேலும் கைம்மாறு எதிர்பார்த்தா உதவி செய்வது? பயப்படாதீர்கள்... டாக்டர் பயப்படும்படி நான் அவ்வளவு சீக்கிரம் சாகமாட்டேன்... பணத்தை விஸ்வநாதய்யரிடம் கொடுத்து விட்டு வாருங்கள்...'' என்று மேலும் வற்புறுத்தினாள்.

நான் என்ன செய்வேன்? இந்த மாதிரி விஷயங்களில் ரங்கநாயகியின் பிடிவாதம் எனக்குத் தெரியும். அவளை மீறி நான் மருந்தை வாங்கி வந்தால் அவள் அதை ஏற்றுக் கொள்ள மாட்டாள். ஆகவே வேறு வழியின்றி பணத்தை எடுத்துக் கொண்டு விஸ்வநாதய்யருடைய வீட்டையடைந்தேன். விஸ்வநாதய்

ரிடம் இருபது ரூபாயைக் கொடுத்தேன். ஐந்து ரூபாயை ரங்கநாயகிக்கு இஞ்செக்ஷன் மருந்து வாங்கி வரும் வரை சாதாரண மருந்தாவது டாக்டரிடம் வாங்கி கொடுக்கலாம் என்றெண்ணி வைத்துக் கொண்டேன்.

நான் பணத்தை விஸ்வநாத ஐயரிடம் கொடுத்ததும் அவர் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விட்டார். "என்ன ஜகந்நாதா, உன் மனைவி இருக்கும் நிலையில்...எனக்கு இந்தப் பணம் வேண்டாம். இந்த வேலை இல்லாவிட்டால் வேறு வேலை கிடைக்காமலா போகும்? நீ முதலில் அவளுக்கு வேண்டிய வைத்தியத்தைக் கவனி," என்றார்.

"இல்லை ஸார்...ரங்கநாயகி தான் இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னாள். டாக்டர் சொன்னது போல் அவ்வளவு அபாயம் ஒன்றுமில்லை...அவர் பணம் சம்பாதிக்க அப்படிப் பயமுறுத்தியிருக்கிறார்," என்று லேசாக அவருக்காக கூறினேன்.

"ஜகந்நாதா...உன் மனைவியைத் தெய்வம் காப்பாற்றும்...இல்லை... இல்லை...இந்தக் கருணையுள்ளமே காப்பாற்றிவிடும்." என்று உள்ளம் உருகக் கூறினார் விஸ்வநாதய்யர்.

ரங்கநாயகியின் கருணை உள்ளம் அவளை எப்படிக் காப்பாற்றியது என்பதை அடுத்த கால் மணி நேரத்திலேயே கண்டுகொண்டேன்.

டாக்டர் கனகசுந்தரத்திடம் சென்று, "ஸார்...இஞ்செக்ஷன் மருந்தை முதல் தேதியன்று வாங்கி வருகிறேன்...பணம் கிடைக்கவில்லை...அதுவரை சாதாரண மருந்து ஏதாவது கொடுங்கள்...," என்று வேண்டிக் கொண்டேன்.

டாக்டர் என்னை விசித்திரமாய்ப் பார்த்தார். "என்ன ஐயா...உம் மனைவி பிழைக்க வேண்டுமென்ற ஆசையில்லையா உமக்கு? முதல் தேதி வரை இருக்க வேண்டாமா ஐயா? ரொம்பவும் 'சீரியஸ் கேஸ்' என்று சொன்னால் மெதுவாக இப்படிச் சொல்கிறீர்களே?" என்று கேட்டார்.

"என்ன செய்வது சார்? பணம் படைத்தவர்களுக்குத்தான் எல்லா வைத்தியங்களும். எங்களைப் போன்ற ஏழைகள் வியாதிக்குப் பலியாக வேண்டியதுதான்," என்றேன் விரக்தியுடன்.

"என்ன ஐயா? ஒரு ஐம்பது ரூபாய் கிடைக்காமல் போய் விட்டதா?" என்று அலட்சியமாக கேட்டார் டாக்டர்.

"ஐம்பது ரூபாய் உங்களுக்கு அற்பமாய்த் தோன்றுகிறது...ஐம்பது நயா பைசாக்களே ஐம்பதினாயிரமாய்த் தோன்றுகிறது எனக்கு... மேலும், பணம் ஏதோ கொஞ்சம் கிடைக்கத்தான் செய்தது...உங்களைக் கேட்டேன்...நீங்கள் தர மறுத்து விட்டீர்கள்...ஆனாலும் ஓரிரு நண்பர்கள் உதவுபவர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள்... அவர்கள் என்னைப் போன்ற ஏழைகள் தான்! அப்படி ஒருவர் உதவிய பணம் கிடைத்ததும்—அது உடனே வேறொருவருக்குப் போய்விட்டது... கடவுளின் சித்தம் அப்படி...," என்றேன்.

"என்ன? கைக்கு கிடைத்த பணம் வேறொருவருக்குப் போய் விட்டதா? எப்படி? 'பிக் பாக்கெட்' நடந்து விட்டதா இந்தச் சின்ன ஊரில் அதுகூட இருக்கிறதா?" என்று கேட்டார்.

நான் நடந்த விவரத்தைக் கூறினேன்.

"என்ன? உம்முடைய மனைவி தனக்கு மருந்து வாங்க வேண்டாம் என்று அந்தப் பணத்தை விஸ்வநாதய்யருக்குக் கொடுக்கச் சொன்னார்களா?" என்று ஆச்சரியம் தாங்காமல் கேட்டார் டாக்டர்.

"ஆமாம்..."

"விஸ்வநாதய்யர் என்னிடம் கூட வந்து பணம் கேட்டார்...நான் கொடுக்கவில்லை..."என்றார். அவருடைய குரல் சிறிது மாறியிருந்தது.

"உங்களுக்குக் கொடுக்க மனம் இல்லாமலிருப்பது சகஜம்...ஆனால், சாகுந்தருவாயில் இருக்கும் அவளால் கொடுக்க முடிந்தது," என்றேன் நான் அவரை இடித்துக் காட்டும் தோரணையுடன். இனி அவரிடம் நான் ஏன் பயப்பட வேண்டும் என்று தோன்றியது எனக்கு.

டாக்டர் கனகசுந்தரம் எழுந்து உள்ளே போனார். கையில் பத்துப் பத்து ரூபாய் நோட்டுகளுடன் வந்து, "இந்தாருங்கள் ஜகந்நாதன், முதலில் மருந்தை வாங்கி வாருங்கள்...மிகுதிப் பணத்தில் உங்கள் மனைவிக்கு வேண்டிய பழம், பால் முதலிய புஷ்டியான ஆகாரம் வாங்கித் தாருங்கள். அவ்வளவு கருணையுள்ளம் படைத்த அந்த அம்மாளுக்கு நான் இலவசமாக வைத்தியம் செய்யாவிட்டால் நான் மனிதனே அல்ல. நோயாளிகளிடம் கருணை காட்டி அவர்களை அன்புடன் நடத்த வேண்டியவன் நான். என் கடமையில் இதுவரை தவறி நடந்து வந்தேன். நோயாளியான உங்கள் மனைவி நோயாளியல்லாத ஒருவருக்குத் தம் அபாய நிலையையும் பொருட்படுத்தாது உதவியதன் மூலம் என் கண்களைத் திறந்து விட்டார்! இனி நான் வைத்தியம் செய்யும் நோயாளிகளிடம் பணம் கேட்கவே மாட்டேன். அவர்களே மனமுவந்து கொடுப்பதைச் சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வேன்" என்றார்.

ரங்கநாயகியின் கருணையினால் அவளுக்கு மட்டுமின்றி எல்லோருக்குமே நன்மை உண்டாகி விட்டதைக் கண்டு வியந்தேன். யார் நமக்குக் கருணை காட்டுவார்கள் என்று நான் கேட்டதற்கு உடனே பதில் கிடைத்து விட்டது. எனக்கு அப்போது வள்ளுவப் பெருமானின் வாக்குத்தான் நினைவுக்கு வந்தது.

'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை'.

போன்: 151 தந்தி: VESSELS

குறைந்த விலையில் சிறந்த பாத்திரங்கள்

எவர் சில்வர் பாத்திரம், எவர் சில்வர் தகடு, பித்தளை, செம்புப் பாத்திரம், பித்தளை, செம்புத் தகடுகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.

பெ. சீ. சீ. சுந்தரம்மாள் அன் கோ.,

பாத்திர வியாபாரம்

28, வெங்கலக் கடைத் தெரு,

மதுரை.

உலகப் பிரசித்திப்பெற்ற

டாடா - மெர்ஸிடிஸ் - பென்ஸ்

டீஸல் டிரக் - பஸ் சேஸிஸ்

உலகத்தின் முதலாவது டீஸல்

இன்ஜின்

ஜெர்மனி தேசத்தின் டெய்ம்லர்

பென்ஸ் தயாரிப்பு

மாடல் LP 312/48—5 டன்

"புல் பார்வார்ட்" கண்ட்ரோல் சேஸிஸ் 190" W. B.

பஸ் சொந்தக்காரர்களுக்கும் ஸ்டேட் டிரான்ஸ்போர்ட்டுக்கும் உகந்தது.

எல்லா மேக்குகளுக்கும் மாற்றி அமைக்க

தனி டீஸல் இன்ஜின்களும் கிடைக்கும்.

மதுரை, ராமனுதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்கு

அதிகாரம்பெற்ற டீலர்ஸ்:

பாண்டியன்

ஆட்டோமோபைல்ஸ் பிரைவேட் லிமிடெட்,

5, ஸ்காட் ரோடு : : மதுரை.

Telegrams: 'RANGAVILAS' Telephone: 17 & 817

SRI RANGA VILAS

GINNING, SPINNING & WEAVING MILLS LIMITED

(*Incorporated in 1922*)

PEELAMEDU P.O. COIMBATORE

SPINDLES : : 36,368

LOOMS : : 88

SPINNERS OF:

Superior kinds of yarn from 2^{s} to 80^{s} counts

&

WEAVERS OF:

Grey Gada and Dhoties.

Managing Partner:—

G. N. VENKATAPATHY.

காமனை வென்றவன்

"அசக்காதே, ஏற்கனவே உள்ள பெரிய கண் இன்னும் பெரிதாகப் போய் விடும்..."

முத்தையன் சுட்டுவிரலால் கண்மை என்னும் அஞ்சனத்தை எடுத்து இடக்கையால் செண்பகத்தின் மலர்முகத்துத் தாடையைப் பிடித்தபடியேதிட்டிக் கொண்டிருந்தான். ஆயிரமாயிரம் சம்மட்டிகளும் பாறைகளும் ஓங்கி அடித்தும் உருண்டோடுவதுமாக உணர்ந்தான், ராமையா.

"அடடா! எத்தனை அழகாயிருக்கிறது தெரியுமா, செண்பகம்?"

"போங்கள்... மை தீட்டிவிட்ட என் புலியே.."

"நான் மனிதன்! வாக்கைக் காப்பாற்றுவேன். இதோ பார் புறப்படுகிறேன்."

"ஐயோ! வேண்டாம். கையிலே ஆயுதங்கள்—கட்டாரி, குத்துவாள் இரண்டும்எடுத்துக் கொண்டு போங்கள்; புலியைக் கொன்று என்னிடம் இழுத்து வாருங்கள். என்னருமை மான் குட்டியைக்கொன்றதே! அதன் தோலைச்செருப்பாகத் தைத்து நான் போட்டுக் கொள்வேன்."

முத்தையன் சிரித்தான். இருவரும் எழுந்தார்கள். செண்பகம் "இப்போது இவ்வளவு வீரமாகவும் துடிப்பாகவும் பேசுகிறவர்கள், அரைமணிக்கு முன்னுல் பொங்குமாங் கடலில் என்னைக் கொல்ல இருந்தீர்களே?" என்று கேட்டாள்.

"இப்போது மை தீட்டிய இரு பொங்குமாங் கடல்களில் நான் செத்துக்கொண்டிருக்கிறேன்."

அவள் சிரித்தாள். அவனும் சிரித்தான. சிரிப்போடு சிரிப்பு கை தட்டியது போல் இணைந்தன, இருவர் சிரிப்பொலியும். அவர்கள் பாதைக்கு இறங்கிஞர்கள். ராமையா, தன் நெஞ்சு மீது அவர்கள் நடப்பதாக உணர்ந்தான்.

"உடனடியாக ஊருக்குள் போவேன். ஆயுதத்தோடு நான் மலைக்குள் வந்துவிடுவேன்."

"உங்கள் அம்மாவிடம் சொல்ல மாட்டீர்கள்?"

"சொல்லப் போனுல் அம்மா தடுப்பாள். என் மனம் தடைப்படும். நீ சற்றுமுன் திட்டினுயே கோழை, வீரம் இல்லாதவன், உயிர் வெல்லமா! மானம்பெருமை"

சுகி

"மன்னியுங்கள். எதைத் திரும்பத் திரும்பப் பார்க்கிறீர்கள்."

"மை தீட்டிய உன் கண்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன தெரியுமா ?"

"உங்கள் கருவிழியில் பார்க்கலாமா அந்த அழகை ?"

"உன் கண்ணை விட என் கண் பெரிதில்லை. அதில் தெரியாது. வீட்டிற்குப்போய் கண்ணாடியைப்பார். நான் பாண்டித்துரை பங்களாவுக்குப் போய் கட்டாரியும், குத்துவாளும் எடுத்துப்போகிறேன்."

"ஜாக்கிரதையாய் போய், பத்திரமாக வாருங்கள்"

"உன் கண்களைவிட புலியின் கண்கள் ஆபத்தில்லாதவை" என்றவன் வெறியனைப் போல அவளது கை விரல்களை இழுத்துப் 'டீ'ரென்று சுடக்கு போட்டு விட்டு ஓடினான்.

அவள் மெதுவாக வந்தாள்... சிற்றருவியில் குளித்த பலர் போய்க் கொண்டிருந்தார்கள். நிழலைப்போல செடி புதர் மறைவில் பின்வந்த ராமையா, முன்னால் ஓடும் முத்தையனைப் பார்த்



தான். இறங்கும் மலைப்பாதை ஐந்தருவி வீதியோடு இணையும் இடத்தில்செண்பகம் வந்து நின்ற போது, ராமையா இருமியபடியே பின்தங்கினான்.

"யாரது ?"

'நான்தான், செண்பகம். ஒரு வழியாக முத்தையனை அனுப்பி வைத்து விட்டாய்."

"நீ எங்கே வந்தே.? எவ்வளவு நேரமாக..."

"கண்ணிலே மை ரொம்ப ஜோர். அடடா...எங்க பண்ணையார் வீட்டு சக்கடா வண்டியிலே கூட இவ்வளவு மை போடறதில்லே..."

"போ! வாயை மூடிக் கொண்டு."

"நான் எதற்காகப் பயப்பட வேண்டும். அப்பாவி முத்தையனைப் போல நான் கோழையா ?"

"யார் கோழை. புலியைக் கொன்று இங்கே கொண்டு வருவார், பார்."

"வருவார் வருவார். நீயும் புலித்தோல் மிதியடி போட்டுக் கொள்வாய்..."

"ஐயோ! நாங்கள் பேசினது அத்தனையும்ஒளிந்துகேட்டாயா? நான் பொங்குமாங் கடலுக்கு விழப்போய் கால் வழுக்கியது, அவர் என்னைக் காப்பாற்றியது, நாங்கள் பூமர நிழலில் பேசியது, அவர் புலி வேட்டைக்குப் போகச் சம்மதம் கொடுத்தது."

"கத்தாதே, இது ஐந்தருவி ரோடு. ஊர் சிரிக்கப் போகிறது" என்றுசொல்லி நகர்ந்தான். காஷ்மீஸ்வரத்திற்கு போய் பார்வதி அம்மாள் முன் வந்து நின்றான். நின்றவன் "பெரியம்மா.,.." என்று ஆரம்பித்து கைச்சரக்கு முழுதும் சேர்த்துக் கதை கதையாகச் சொன்னான். கேட்கக் கேட்க அந்தத் தாயுள்ளத்தில் துயரம் பொங்குமாங்கடலைப்போல பொங்கி வந்தது.

'நிஜமாகவா, முத்தையன் கட்டாரியும், குத்துவாளும் கொண்டு மலையேறி விட்டான்? புலிவேட்டைக்கா?" என்று கேட்டாள் பார்வதி அம்மாள்!



"ஆமாம் பெரியம்மா! நீசெண்பகம் வீட்டுக்குப் போய் அவளைக் கேட்டால் போகிறது. பெரியம்மா, உன் அருமை மகன் தன்னந் தனியாகப் புலி வாயில் சிக்கி, மடியப் போகிறான். எலும்பு கூட கருமாதிக்குக் கிடையாது."

"என் மகன் என்னிடம் சபதம் செய்திருக்கிறான்."

"ஆமாம்; புலியைக் கொண்டு வந்தால் நான் முத்தையன்; வராவிட்டால் நான் 'சொத்தய்யன்' என்றான். யாரிடம்? செண்பகத்திடம்"

"போகிறவனை நீ தடுக்கக் கூடாதா? ஏண்டா! பாவி! தடுக்கக் கூடாதா?"

ராமையா கற்பனை உள்ளவன். கற்பனை நல்லவர்கள் சொத்து; அது போக்கிரிகளுக்கும் பொது உடமை.

"தடுத்தேன். 'டேய் குடிகாரப்பயலே! ராமையா! போய் தொலை, என்று திட்டினான்" ராமையா மேலே சொல்ல முடியாமல் அழுது காட்டத் தொடங்கினான். முத்தையன் மீது தன்னைவிட ராமையா கொண்டுள்ள அன்பை அளந்து பார்த்தாள் பார்வதி.

"உன்னைத் திட்டினானா அந்தப் பயல். அவனை அப்படி ஆக்கி விட்டாள் செண்பகம். படுபாவி — முத்தையன் — செய்து விட்டான். வா, கேட்கிறேன். பெற்று வளர்த்துப் பேணிப் பாதுகாத்த ஒருவனை எப்படி மயக்கினாள்? மடையன் ஆக்கினாள்? மதியுள்ள என் மகன் ஏன் போனான்?"

"மை — பெரியம்மா, மை!"

"என்னடா மை? யார் மை

பாட்டார்கள்?''

''கண்ணுக்குப் போடும் மை...''

ராமையாவின் கையை இழுத்துக் கொண்டு பார்வதி அம்மாள் விடு விடென அடுத்த தெருவிலுள்ள செண்பகத்தின் வீட்டிற்குள் வந்தாள். பல காலமாகச் சண்டை ஏற்பட்டு வராத பார்வதி வரவே தமையன் திடுக்கிட்டான்! செண்பகத்தின் தாய் கசப்பாகப் பார்த்தாள். புயல் சீறிப் பாய்வதுபோல உள்ளே வந்தாள், பார்வதி அம்மாள்.

உள்ளே, வீட்டுக்கு உள்ளே!

உள்ளமும், உடலும் கிளுகிளுக்க பெரிய கண்ணுடியிலே தன் முகத்தையும், அம்முகத்தில் பாதியாக இருந்த அகலக் கண்களுக்கு அழகொழுக மை தீட்டிய முத்தையன் கலையையும் எண்ணி எண்ணி ரஸித்துக் கொண்டிருந்தாள் செண்பகம்.

''ஏய் செண்பகம்''

பார்வதி அம்மாள் குரல் கேட்டு செண்பகம் நடுங்கினுள். கையிலிருந்த கண்ணுடி நழுவி விழுந்தது; சில்லுகள் சிதறின.

''என்ன அத்தை?''

''முத்தையன் எங்கே?''

மௌனம். தலை கவிழ்ந்தாள் செண்பகம்.

''முத்தையன் எங்கே? எங்கே முத்தையன்?'' என்ற குரல்கள் பயங்கரமாகக் கேட்டன. ஸ்தாயி ஏறியது.

''அவர்...அவர்... '' தயங்கினுள், தத்தளித்தாள்.

''புலியைக் கொன்று வர அவனை அனுப்பினுயா?''

''ஆமாம்...''

''என்னிடம் அவன் சொல்லவில்லை யென்றுனே உன்னிடம் சொன்னுனு? அதைச்சொன்னுனு?''

அவள் பேசவில்லை.

''அடி பாவி சண்டாளி! கொன்றுவிட்டாயே, குருத்துப் போன்ற என் பிள்ளையைத் திருகிவிட்டாயே! அட அண்ணு ...படுபாவி! வேட்டைக்காரருக்கு என்னைக் கட்டிக் கொடுக்காதே, கொடுக்காதே என்றேன். நீ கொடுத்தாய். நான் மஞ்சளையும் குங்குமத்தையும் இழந்து உலர்ந்த கட்டையாகப் போனேன். செண்பகம், உன் அப்பா எனக்குச் செய்த தீமை போதாதென்று, அடி சண்டாளி! என்ன தைரியமாக என் பிள்ளையை அனுப்பினுய். பதில் சொல்...''

சொல்லுக்குச் சொல் அடைமழையின் வேகம் போன்று கத்தினுள், பிள்ளையைப் பிரிந்த தாய்.

செண்பகம் ''நான் சொன்னேன்'' என்றுள்.

197690

"அவனை முட்டாள் ஆக்கிப் போட்டாய். அவனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டு இங்கே வந்து கண்ணுக்கு மையிட்டு அழகு பார்க்கிறாய். அழகாடி இது?" அவசரத்தில் "நான் இட்டுக் கொள்ளவில்லை· அவர் தான் இட்டார்." என்றுசொல்லி விட்டாள்.

சட்டென ராமையா சொன்ன மை பார்வதி உள்ளத்தில் பரவிப் படர்ந்தது. மறு கணம் பித்துப் பிடித்தவளாக செண்பகத்தின் முகத்திலும் முதுகிலும் பளீர் பளீரென அறைந்துவிட்டாள். ஆத்திரமும் ஆங்காரமும் அதிகமாக வலுப் பெற அடி வேகமாக விழ விழ, தாயும் தந்தையும் "எதற்காக எங்கள் செண்பகத்தைத்தொட வேண்டும்!" என்று சீறினார்கள்.

"என் பிள்ளையைக் காட்டுக்கு அனுப்பி விட்டாளே, இந்தப் படுபாவி"

"பச்சைக் குழந்தையா உன் பிள்ளை? தடியாக வயதாக வில்லை. முட்டாள்தனமாகப் போனவனைப் போய்க் கேள். மறுபடியும் கை வைத்தே, கை துண்டு துண்டாக விழுந்து விடும்!" என்றார் செண்பகத்தின் தந்தை.

"அப்பா,அத்தையை ஒன்றும் சொல்லாதீர்கள். கோழையைப் பெற்றாளே அத்தை, அந்தக் கோழையை வீரனாக்கியதற்கு எனக்குப் பரிசு கிடைத்தது."

"வேட்டைக்காரனை மணந்தது என் கோலத்தைப் பார். பேசாதே...நீ அவனைக் கொன்றாச்சு..."

"அவர் வருவார். வந்தபின் தெரியும்" என்று பதிலுக்குக் கத்தினாள் செண்பகம்.

"பேசாதே, என்னிடம் பேசாதே. என் பிள்ளை வராமற் போகட்டும். அன்றைக்கு உன்னைப் பழி வாங்குவேன்!"

பார்வதி வெளியே வந்தாள். செண்பகம் சற்றுமுன் அடிபட்டிருந்ததாலும்,வேகம்அதிகமாக இருந்ததாலும்கண்ணும், கன்னமும் சிவந்து வீங்க ஆரம்பித்தன. நெல்லும் மஞ்சளும் அறைத்துப்போட அவள் தாய் முனைந்தாள். வெளியே வந்ததும் ராமையாவைக் காணாது போகவே, ஜமீந்தார் பங்களாவிற்கு ஓடி வந்தாள். வாசற் காவற்காரன், "அம்மாவா? டிரைவர் தம்பி கட்டாரியும் வீச்சரிவாளும் வேல் கம்பும் எடுத்துக் கொண்டு போச்சுது," என்றான்.

"நிசமாகவா?"

அந்தச் சமயம், செங்கோட்டைக்குப் போன பாண்டித் துரையின் கார் பங்களாவிற்குள் வந்தது. பத்திரகாளி போல் பார்வதி நிற்பதைக் கண்டு "என்னம்மா?" என்று கேட்டார்.

"உங்கள் அப்பா என் கணவர் உயிரைப் புலிக்குப் பலியிட்டார். நீங்கள் என் பிள்ளை உயிரைக் குடியுங்கள். குடியுங்கள்" என்று கத்திவிட்டாள். கோவெனக் கதறியபடி காஸ்மீஸ்வரம் தெரு வழியே அழுது கொண்டு ஓடினாள். பிலாக்கண ஒப்பாரி எழுந்தது.

"மான்குட்டி கொடுத்த நீ
மண்ணுக மடியணுமோ ?
ஏன் இகொடுத்த முத்தையா?
எங்கே போனே முத்தையா?

கண்ணுக்கு மை எழுதி, நீ
காட்டுக்குள் போனவனே!
பெண்பித்துப் பிடிச்ச நீ
பெரிய புலி அடிக்கவோடா?''

ஒன்றும் புரியாமல், பாண்டித்துரை திகைத்தார். காவற்காரனைக் கூப்பிட்டு விவரங்கள் அறிந்துவர அனுப்பியபோது அதற்குள் ஊர் முழுவதும், 'செண்பகத்தை பார்வதி அடித்தாள்; செண்பகம் முத்தையனைப் புலிவேட்டைக்குப் போகச் சொன்னாள்; என்ற விபரங்கள் கிணற்றடி, வீட்டுக் கொல்லை, அங்கு இங்கு எனத் தாண்டி வளர்ந்து பரவிக் கொண்டே வந்தது.

ரெயில் மதுரை பிளாட்பாரத்தில் நிற்கவே, கோபால வாரியார் ''பாவம்,அந்த முத்தையன் உயிர் பெரிதல்ல; மானம் பெரிது; வீரம் பெரிதென ஓடி விட்டானே'' என்று வியப்பாகச் சொன்னார்.

''மானமும் வீரமும் உங்களுக்கு உள்ளத்தைக் குளிர் விக்கலாம். பெற்றவள் வயிறு எப்படித் துடிக்கும்?''

'' காதலில் அகப்பட்டவன் ஆற்றில் சிக்கிய துரும்பு...'' என்று இறங்க ஆரம்பித்தார்.

''தாயன்பு பற்றிச் செத்து விடுமா?''

''மலையாளத்தில் ஒரு பழமொழி உண்டு. தங்கம் கடன் பெற்றுத் திருப்பிக் கொடுக்கலாம். ஆனால் தயவைத் திருப்பிக் கொடுக்க முடியாது.''

''பெண் தயவுதானே பெரிய தயவு...''என்றபோது வாரியாருடைய முகத்தைப் பார்த்தபடியே இரண்டொரு இளைஞர்கள் வந்துவிட்டனர். வந்தவர்களில் ஒருவன் அவர் பையன் போலும். என்னிடம் விடைபெற்றுப் போய்விட்டார். அவசர அவசரமாக இறங்கினார். பிளாட்பாரத்தில் அசதியும் அலுப்பும்,அரைத்தூக்கமும்நிரம்பிய பிரயாணிகளை இறக்கிவிட்டு, சுருசுருப்பும் விருவிருப்பும் நிறைந்த சிரித்த முகமுடைய பிரயாணிகளை விழுங்கிக் கொண்டிருந்ததுரெயில்தொடர். என் மனித மூளையில் இதுவரை ஒதுங்கிக் கிடந்த முத்தையன் உருவம் தலை தூக்க ஆரம்பித்தது.

பிளாட்பாரத்தின் சந்தடிகள் மங்கி மறைந்து ரெயில் மெதுவாக நகர்ந்தபோது கோபால வாரியார், கையில் ஒரு கடிதத்துடன் என்னை நோக்கி ஓடி வருவது புலப்பட்டது. முன்பின் அறிமுகமில்லாத அவர் என்னத்திற்காக ஓடிவந்தார்? எதற்காகக் கத்துகிறார்?

ரெயிலோ வேகத்தில் மிதக்க ஆரம்பித்துவிட்டது. திகைத்தபடியே வண்டிக்குள் இருந்தேன்.

சமயநல்லூர் ஸ்டேஷனில் கார்டின் குரல் கேட்டது. 'ஏனய்யா ? கோபால வாரியாருக்கு வேண்டியவர் யார்? யார்

சார் வேண்டியவர்?..ஒரு கடிதம் இருக்கிறது" என்று சன்ன லுக்குச் சன்னல் கேட்டார். புதையலைக் கண்டவனைப் போல நான் அக்கடிதத்தை வாங்கினேன். ஆமாம்;கோபால வாரியார் மதுரை பிளாட்பாரத் தில் ஓடிவந்து கொடுக்க முயன்ற நீலக் கவரை, ஓடும் ரெயிலில் கார்டு வாங்கி, இப் போது என்னிடம் கொடுத்தார்.

அது என்ன கடிதம்? இக் கேள்வியோடு பிரிக்க ஆரம்பித் தேன் பரிபூர்ணமாக மலையா ளத்தில் எழுதப்பட்டது. என் தலை சுற்ற ஆரம்பித்தது. மலை யாளம் எனக்குப் பூஜ்யம்!

அத்தியாயம் 9

செண்பகம் சீறினள்

மீண்டும் குற்ருலம் !

முத்தையன் இல்லாக் குற் ருலத்துக்கு நான் வருவேன் என்று கனவு காண முடியாது. பாண்டித்துரை என்னைக் கண்ட தும் திடுக்கிட்டுத் தூக்கி வாரிப் போட்டப் போகிருர் ; இதற்குப் பதிலாக வியப்புக்குள் ஆழ்ந்த வன் நான். பங்களாவிற்கு போன சமயம், பாண்டித்துரை தேர்ப்புக் குத்தகை சம்பந்த மாகப் போயிருந்தார். பங்க ளாவின் வராந்தாவில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்து வான வெளியையும் தொலைவில் விழும் வெள்ளிய அருவியையும் பார்த்துக் கொண்டிருந்தேன். கவலையின் பழுவை, அருவிக் காட்சி கரைத்து விட்டது.

முத்தையனைப் பற்றியோ,புலி யைப் பற்றியோ ஊருக்குள் பேச்சு மூச்சில்லை. நீலக்கவரின் படி என்னுடைய யூகங்கள் பொருத்தமாக அமையும்; அதனை முடிக்க பாண்டித்துரை யின் உதவி வேண்டும்—இவ் வாறு எண்ணிய சமயம், பார் வதியம்மாள் வந்து கொண்டிருந் தாள். எனக்குத் 'திக்' கென்றது.

"ஐயா, நீங்கள் செய்த புண் ணியம். என் பிள்ளை பிழைத் தான். 'மகா ராசா'வுக்கு கடு தாசி எழுதியிருந்தீங்க."

நான் என்ன கடிதம் எழுதி னேன்? எப்போது எழுதி னேன்? மலையாள வைத்தியர் திணித்த நீலக் கவர் பெற்றது முதல் ஒரு வாரம் திருச்சியில் தயங்கித் தயங்கி இருந்துவிட்டு இன்று வருகிறேன். "முத் தையன் அகப்பட்டு விட்டானு?" என்று கேட்கத் துணிந்தேன். கேட்டிருந்தால் தாயின் இதயம் வெடித்துச் சுக்காகியிருக்கும். வாயை மூடிக் கொண்டிருப்பத ஞல் சிறந்த சேவை செய்தது என் வாழ்க்கையில் இந்த விநாடி ஒன்றே.

"நீங்கள் ஒன்றும் அறியாத வர் போல் பாசாங்கு செய்தா லும், முத்தையனிடம் உங்கள் அன்பு தனி. கப்பல் போய் விட்டதா ?"

கப்பல் ? எந்தக் கப்பல் ? ஆண்டவனே! மனோதத்துவம், பிறர் மனசிற்குள் புகுந்து பார்க் கும் இச்சணி வித்தையை இந்த

ஒரு விநாடி தரக் கூடாதா? நான் எதைச் சொல்வது? என்ன சொல்வது? ராஜதந்திரிகள் கையாளுகின்ற பொய்ச் சிரிப்பும் புன்முறுவலும் தவிர எதையும்வாய்விட்டுச்சொல்லக் கூடாது. நரி வைத்து நரி பிடிக்க வேண்டும். இது என் திட்டம்.

"அம்மா, நீங்கள் என்ன நினைத்துக் கொண்டாலும் சரி, நான் ஒரு வார காலத்திற்கு எதுவும் சொல்ல முடியாது."

"கப்பலில் போன முத்தையன் கடலில் கவிழ்ந்து விட்டானு? அந்தக் கப்பலுக்கு என்ன ஆபத்து?"

ஆபத்து முத்தையனுக்கோ கப்பலுக்கோ இல்லை. ஆண்டவனே! என்னை எதற்காகச் சோதிக்கிருய்? என் சட்டைப் பையிலே இருக்கிற நீலக் கவரினை எடுத்து அதிலுள்ள விவரங்கள் சொல்லி அனுப்பலாமா? இதுவரை நம்பிக்கைக் கயிற்றிலே ஊசலாடிக் கொண்டு, என்றே கானகத்திலே தலைவிரி கோலமாகப் பார்த்த தாய் இல்லை; நம்பிக்கையின் ரேகை கண்களிலே ஒளி விடுகிறது. முத்தையன் உயிரோடு இருக்கிருன் என்ற திட எண்ணத்தில் பிழைத்திருக்கும் தாயுள்ளத்தை என் தகவல் தத்தளிக்கச் செய்யும். பாண்டித்துரை தவிர, யாரிடமும் சொல்லக் கூடாது என்ற சங்கற்பம் வீணுகிப் போகுமே?

"ஏன் இப்படி விழிக்கிறீர்கள்! நீங்கள் எழுதிய விவரம் உங்களுக்கே மறந்து போயிற்ரு?"

ஐயய்யோ! நான் என்ன விபரம் எழுதினேன். யாருக்கு எழுதினேன். இதில் ஏதோ தவிர்க்க முடியாத சூது இருக்க வேண்டும்!

"அம்மா நான் இன்னும் முடிவு செய்துதான் சொல்ல வேண்டும்"

"நீங்களாக என் பிள்ளையைக் காணவில்லையா? மலேயாவிற்குப் போயிருக்கிருன் என்பது பொய்யா?"

நான் திகைத்தேன். முத்தையன் மலேயாவிற்கு எதற்காகப் போக வேண்டும்? நான் ஏன் கப்பலில் ஏற்றி விட்டேன்? பாண்டித்துரை, நீ எந்த இடத்தில் இருந்தாலும் இந்தச் சமயம் என்னிடம் வந்து சிக்கலைத் தீர்க்கா விட்டால் நிலைமை குழப்பமடையும். நீ எங்கே தான் போய் விட்டாய்? இவ்வாறு நைந்து மனம் புண்ணுகிப் போய்விட்டேன்.

"மலேயாவில் சௌகரியமாக இருப்பானு? என்னை அங்கே அடுத்த கப்பலில் அனுப்புங்கள். அல்லது அவனைத் தந்தியடித்து வரவழையுங்கள்."

"என் மூளையும் தெளிவு பெற்றது. முத்தையன் எப்படியோ தப்பிக் கொண்டு, புலி வேட்டைக்கு போய் விட்டோ, போகாமலோ சென்னைக்குப் போய்விட்டான். அங்கே யிருந்து மலேயாவிற்கு கப்பலேறியிருக்க வேண்டும். ஏன் ஓடினுன்? காதலி முகத்தில் எவ்வாறு விழிப்பான் கடு கடுப்பாக முகத்தை வைத்துக் கொள்வாள். அவமானம் வேறு. புலிக்கு அஞ்சியல்ல; பெண் புலியான செண்பகத்தின் கண்ணுக்கு அஞ்சிப் போய் விட்

தலைப்புப் பிறந்த கதை!

'தராசு' என்ற நூலுக்குத் தலைப்புக் கொடுத்தது பற்றி **தேசிய கவி பாரதி** எழுதுகிறார்... "இவ்வுலகமே ஈசனுடைய விளையாட்டு. உலகத்தை அறிய வேண்டுமானால் விளையாட்டுப் பழக்கமும் வேண்டும்............எழுதும் விஷயங்களுக்கு என்ன மகுடம் ஏற்படுத்தலாமென்ற யோசனை உண்டாயிற்று. பலவிதமான செய்திகளையும் கலந்து பேச நேரிடுமாதலால் **பலசரக்குக் கடை** என்று மகுடமெழுத உத்தேசித்தேன். அது விளையாட்டாக முடியுமாதலால் விட்டுவிட்டேன். எனக்கும் ஒரு செட்டியாருக்கும் சிநேகம். அவரைப் போல் நாம் ஒரு பலசரக்குக் கடை வைத்தால், அவருக்குக் கோபம் ஏற்படுமென்று கருதி அந்த மகுடத்தை விலக்கினேன்... **தராசு** என்று பொதுப் படையாகப் பெயர் வைத்திருக்கிறேன். எல்லா வஸ்துக்களையும் நிறுத்துப் பார்க்கும். எல்லாச் செட்டியாருக்கும் இதனால் உதவியுண்டு. எந்தச் செட்டியாரும் மனஸ்தாபங் கொள்ள இடமிராது!"

* * *

டான்! கண் காணு சீமை, கரை காணு கடல் கடந்து ஓடி விட்டான்—இத்தனை முடிவுகளும் இமைக்கும் நேரத்திற்குள் என் இதயத்துள் மின்னி மறைந்தன.

"அம்மா, நீங்கள் பெற்ற முத்தையன். அவன் எனக்கு ஆருயிர் நண்பன். பாண்டித் துரைக்குத் தம்பி போல. அவனைக் கொண்டு வரும் பொறுப்பை எங்களிடம் ஒப்படைத்து விடுங்கள். நீங்கள் கவலையே கொள்ளவேண்டாம்"

"மேற் கொண்டு தகவல்கள் எழுதுவதாகச் சொல்லியிருந்தீர்களே! தகவலுக்குப் பதில் நீங்களே வந்துவிட்டீர்கள். இதனால் என் பிள்ளையின் உயிருக்கு ஏதோ ஆபத்து வந்திருக்க வேண்டும்."

"சந்தேகம் எதற்கு......?" என்று உணர்ச்சி வசப்பட்டு நீலக்கவரில் இருந்த விபரத்தைச் சொல்ல இருந்தேன். பாண்டித் துரையின் கார் உள்ளே வந்தது. காரின் வரவைப் பயன் படுத்தி, அறைக்குள் நுழைந்து விட்டேன். வியர்த்துக் கொட்டிற்று. தலை சுற்றியது. பொய் சொல்லி முன்பின் பழகியிருந்தால்தானே சமாளிக்கலாம்.

பாண்டித்துரை, "வாருங்கள் அம்மா. ஏது வந்தீர்கள்? தபால் வருகிற நேரந்தான்" என்று சொன்னார்.

"தபால் எதற்கு? திருச்சி ஐயாவே வந்துவிட்டார்! கேளுங்கள்."

பாண்டித்துரை முகத்திலே தோன்றிய பீதியை இதற்கு முன் எவர் முகத்திலும் நான்

பார்த்ததில்லை; பார்க்கப் போவதும் கிடையாது. கையமர்த்தி உட்காரச் சொல்லி விட்டு உள்ளே வந்த பாண்டித்துரை, இரை பிடிக்க வரும் பாம்பு, பச்சைத் தவளையைப் பார்ப்பது போலப் பார்த்தார். நான் அங்கு தோன்றியது தவறென விருந்தோம்பலில் சிறந்த அவரா சொல்வது? நட்பின் கனியாக எண்ணுகிற என்னையா நச்சுக் காற்றாக முகர்வது? மறு கணம் அவர் பேசிய பேச்சு, நான் கேட்காத குரல், என்னிடம் குழைந்து கனிந்து வரும் குரல் மீறிட்டுக் கொண்டு அதிகாரமாக வந்தது.

"கதை யெழுதி வாசகர்களை ஏமாற்றுவதிலும் திடுக்கிட வைத்துப் பிழைப்பு நடத்தியதும் சரி ஐயா. இது உயிருக்கு உயிரான தாயன்பின் போராட்டம். நீங்கள் வேடிக்கை செய்யும் ஒவ்வொரு விநாடியும் முத்தையனுக்கு அல்ல ஆபத்து; அவனைப் பெற்றெடுத்த தாய்க்கு ஆபத்து. வயசான அந்த ஜீவன் துடித்துச் செத்தால் அதனால் வருகின்ற பாபச் சுமை உங்கள் மீது சார்ந்து நிற்கப் போகிறது. மேற்கொண்டும் தகவல்களை எழுதி விட்டு வேடிக்கை பார்க்க வந்தீர்களோ? எழுதிய விபரத்தை இன்னதெனச் சொல்லுங்கள்."

பாண்டித்துரை வந்தால் என் நிலைமை சரியாகும்; நான் விடுபடுவேன் என்பதற்குப் பதில் வசதியாக மாட்டிக் கொண்டேன். எலிக் கூண்டுக்குள் ஓடியாடுவதற்குப் பதில் பல்பல்லாக உள்ள பொறிக்குள் மாட்டியது போல உடலும் உள்ளமும் அவஸ்தை பட்டது. வந்த

'நவீன சினிமா டைரி!'

முழுத் தொகையையும் 'பிளாக்கில்' கேட்கும், ரசிதே தராத ஒருவர்!

கதாநாயகன் : நாணிக் கோணிப் பெண்போலத் தோற்றமளிக்கும் கையாலாதவர்; ஆனால் எப்பொழுதும் கடைசியில் கதாநாயகியை மணக்கும் பாக்கியம் பெற்றவர்!

கதாநாயகி : செயற்கையாக ஊட்டப்பட்ட அழகு, இனக்கவர்ச்சி கொண்டு, அவள் விருப்பதிற்கெதிராகவே எல்லோரையும் காதலிக்கக் கட்டாயப் படுத்தப்படுபவர்!

வில்லன் : வீரம், கவர்ச்சி, சுறுசுறுப்பு எல்லாம் இருந்தும் எல்லாப் படத்திலும் செத்துப் பிழைப்பவர். திரையுலக சிரஞ்சீவி!

வில்லி : தயாரிப்பாளர், டைரக்டர் உள்பட எல்லோரையும் மயக்க வலைவீசுபவள்!

நகைச்சுவை நடிகர் : முட்டாள் தனமான உளறல்கள் இவரது சொத்து; தரை மகா ஜனங்கள் பெயரால் இவர் வாழ்கின்றார்!

நாட்டியக்காரி: கதைக்கும், கட்டத்திற்கும் பொருத்தமில்லாமல் எல்லாப் படத்திலும் வரும் தேவையில்லாத ஒருத்தி!

மூலம் - பிளாஷ்.

(ஆங்கில சினிமா இதழ்)

கோபமோ அளவிட முடியாது. நான் என் பொருட் செலவு, நேரச் செலவு இரண்டையும் பொருட்படுத்தாது வந்திருக்கும் போது எத்தனை பெரிய கிடுக்கித் தாக்குதல்! குரலில் கோபம் கொப்புளிக்கும் பாண்டித் துரையை ஏறிட்டுப் பார்த்தேன். அந்தக் கண்கள் என்னிடம் மன்னிப்புக் கோரின. ஏதோ பேசின. ரகசியம் சிமிட்டின. "ஆமாம் போடுங்கள்" என்று அலைமோதின. புரிந்து கொண்டேன். எக்கச்சக்கமாக, நானல்ல, பாண்டித்துரை மாட்டிக் கொண்டார்!

"நண்பரே! உங்கள் வீர வாசகம் முடிந்ததா?"

"முடிந்தது"

"நான் இங்கே வந்தது தப்பு,"

"நீங்கள் வராவிட்டாலும் உங்கள் கடிதம் வரத்தானே செய்யும்."

பார்வதியம்மாள் நாங்கள் நின்ற அறைக்குள் வந்து விட்டாள். எனக்கும் பழைய பீதியும் பயமும் உடம்புக்குள் ஓடத் தொடங்சின. முகங் கொடுத்து அந்த அன்னையைப் பார்க்க அச்சம்!

"அம்மா! இந்தக் கதாசிரியர்கள் என்றைக்குமே குழந்தைகள் போல. பிறர் மனசோடு விளையாடுகிறோம் என்று எண்ணுகிறவர்கள். பிறர் மனம் படும் தவிப்பை அறியாதவர்கள். கட்டாயம் நல்ல சேதியைக் கொண்டு வந்திருப்பார். அவ்வளவு நல்ல சேதியாக இல்லாவிட்டால் நேரில் சொல்ல வருவாரா? நீங்கள் கேளுங்கள். ஒரு வேளை தங்களை அழவைக்க ஏதாவது பொய் சொல்லி முடிவிலே நல்ல சேதி தருவார்!"

'ஏய், படுபாவி பாண்டித்துரை. உனக்கு இது அடுக்குமா? நான் எவ்வளவு ஆசையோடு வந்தேன். என்னை வதைக்கிறயே' என்று சொல்ல முடியாமல் பரிதாபமாகப் பார்த்தேன்!

"ஆசிரியர் அவர்களே! குளித்து உணவு உட்கொண்ட பின்னர் நீங்கள் நேரில் கண்ட சென்னைச் சம்பவங்களை விபரமாகச் சொல்லுங்கள்."

குரல் என்னிடம் கெஞ்சிற்றே தவிர கண் எதையோ ஒப்புக் கொள் என்றது. இடைக்கால நேரத்துக்குள், தனிமையில் முத்தையனைப்பற்றிய விபரம் அறியலாம். கப்பலில் முத்தையன் புறப்பட்டான்—மலேயா போகிறன்-இதுதான் தகவல். இதை நான் எழுதியதுதான் ஆச்சரியம்; மர்மம்!

"அந்த அம்மாள் மனம் புண்பட்டால் நொந்து போவார்கள். நீங்கள் சென்னைத் துறைமுகத்தில் முத்தையனைக் கண்டீர்கள். அவனே மலேயாவிற்குப் பிடிவாதமாகப் போகிறேன் என்றன். நீங்கள் மறுநாள் என்ன செய்தீர்கள்?"

நான் எதைச் சொல்வது? யோசிக்கவும், கற்பனையை அலசி மேலே கோபுரம் கட்டவும் நேரம் வேண்டும். விடை சொல்வதற்குப் பதிலாக, கேள்வியைக் கேட்பது எளிது தானே?

"முத்தையன் என்ன ஆகியிருப்பான். நீங்களே சொல்லுங்கள்."

"பார்த்தீர்களா அம்மா! நீங்

களும் நானும் படுகிற அவஸ்தை இந்தக் கதை எழுதுகிறவர் களுக்குத் தெரியாது. தான் நேரில் பார்த்துக் கடிதம் எழுதி விட்டு, உங்களுக்கும் கடிதம் எழுதுகிறேன் என்றவர் என்னைக் கேள்வி கேட்கிறார். இன்னும் கொஞ்சம் போனால் யார் இந்த முத்தையன் என்று கேட்கப் போகிறார்?''

நான் எந்த முத்தையன் கப்பலுக்குப் போனான்? எந்த முத்தையன் கோபால வாரியார் வைத்திய உதவிக்கு ஆளாகி இருக்கிறான் என்று கேட்க எண்ணினேன். இம் மாதிரி நிலைமையில் சமாளிக்க வேண்டிய திறமை மௌனம் ஒன்றே.

"நண்பரே! என்னை ஒரு வாரம் சும்மா இருக்க விடுங்கள். முத்தையன் சுகமே வருவான்.''

"அதுதான் வேண்டும். அவனைக் கொண்டு வர வேண்டிய பொறுப்பு உங்களைச் சேர்ந்தது. மகாராஜா செலவைக் கொடுப்பாங்க''

"நாங்கள் கவனித்துக் கொள்ளுகிறோம். நீங்கள் கடிதம் வந்தால் கொண்டு வாருங்கள்.'' என்றார் பாண்டித்துரை.

"ஆகட்டும், நான் போகவா?''

"போய் வாருங்கள். கடிதத்தில் எல்லா விபரமும் இருப்பதால் நேரில் சொல்லவில்லை, இவர்கள்'' என்று முத்தாய்ப்பு வைத்தார். எனக்கு மயக்கத்திற்கு மேலே மயக்கம்.

"ஐயா வாயாலே உன் பிள்ளைக்கு ஆபத்து இல்லை. கப்பலில் வருவான் என்று சொல்லச் சொல்லுங்கள்'' என்றாள் பெற்ற தாய்.

நானும் அதைச்சொன்னேன். எதற்காகச் சொன்னேன், என பது என் முன்னே நின்ற பாண்டித்துரைக்கே தெரியும். பார்வதியம்மாள் மிகுந்த நம்பிக்கையுடன் நகர்ந்தாள். வெளிக் கேட்டுப் போனதும் பாண்டித் துரையின் வலிய தோள்கள் இரண்டையும் பிடித்துக் கொண்டு உலுக்கி விட்டேன்.

"இதெல்லாம் என்ன கூத்து! சொல்லுங்கள். சொல்லுங்கள்''

"சொல்லுகிறேன். நான் எழுதிய கடிதம் கிடைக்கு முன்னர் இங்கே எப்படி வந்தீர்கள்?''

"திருச்சிக்கு என்ன கடிதம் எழுதினீர்கள்?''

"உடனடியாகக் குற்றாலம் புறப்பட்டு வாருங்கள் என்று எழுதியிருந்தேன். அக் கடிதம் இன்று திருச்சியில் இருக்கும். நான் கடிதம் எழுத ஆரம்பித்த சமயம் நீங்கள் குற்றாலம் புறப்பட்டு விட்டீர்கள்''

"மனவுலகம் அத்தனை விசித்திரமானது. நான் வந்த காரியம் முத்தையனைப் பற்றியது''

"முத்தையனை எங்கே பார்த்தீர்கள்?''

நீலக் கவரை எடுத்துக் கொடுத்தேன்! அதைப் படித்து எதையும் புரிந்து கொள்ள முடியாமல் தவித்தார்.

"இது யாரோ வைத்தியருக்கு, அவர் மனைவி எழுதிய கடிதம். உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?''

கிடைத்த விபரம் சொன்னேன். அக்கடிதத்திற்குள் முத்தையன் ஒளிந்து கிடக்கிறான் என்ற யூகத்தை ஆரம்பித்த சமயம் புயல் ஒன்று அறைக்குள் வருவதைக் கண்டேன். கோபா

வேசமாகத் தலைவிரி கோலமாக வந்த புயலுக்கு உருவம் தர முடியுமானால் அது செண்பகத்தின் உருவமாக இருக்க முடியும். நாங்கள் ஆண்கள் என்ற எண்ணமே மறந்தது.

"ஏனய்யா, நிஜமா அவரைச் சென்னையில் பார்த்தீர்களா? அவருடைய அம்மா சொல்லுகிறாளே. என்னைப் பார்த்துச் சிரித்தாளே. நீங்கள் வந்திருப்பதை அறிந்து வந்தேன். அத்தனை பெரிய கோழையா, அவர்? இல்லை! நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள். புலிக்குப் பயந்து, காட்டை விட்டு மலேயாவிற்கு கப்பலில் போனவர் மலேயாவிலேயே ஒழிந்து சாகட்டும். நான் உயிரோடு இருக்கிறவரை இங்கே அவர் வர முடியாது. இந்தச் சூரிக் கத்தி அவரைக் குத்திக் கொன்ற பின்பு என்னையும் குத்திச் சாக அடிக்கும். இத்தனை பெரிய கோழையை பிள்ளையாகப் பெற்றவள் என்னை அடித்தாள்; திட்டினாள். வெட்கம் மானம் வேண்டாம்? உண்மையைச் சொல்லுங்கள்! அவரைத் துறைமுகத்தில் கண்ட போதே காறி உமிழ்ந்திருக்கக் கூடாது? நிச்சயமாகச் சொல்லுவேன். நீங்கள் எழுதிய கடிதம் பொய். அவர் புலியைக் கொல்ல பொதிகை மலை மலையாளக் காட்டில்தான் இருக்கிறார். எது உண்மை? எது உண்மை?"

பெண் புலியின் உறுமலைப் போல செண்பகம் சுற்றிக் கொண்டாள். அவள் கையிலே யுள்ள சூரிக் கத்தி, கண்ணை விடக் கூர்மையாக, அகலமாக மின்னிற்று. 'ஆம்' என்றாலும் கஷ்டம். இல்லை யென்று பதில் சொன்னாலும் கஷ்டம்!

பாண்டித்துரை என்னைப் பரிதாபமாகப் பார்த்தார்; நான் அவரைப் பார்த்தேன். நான் எதிர்பாராத காட்சியும் அவஸ்தையும் தொடர்ந்து நடக்கின்றன. அதே போலே பாண்டித்துரை எதிர்பாராத சம்பவமாய் செண்பகம் வந்து நின்று விட்டாள்.

சோர்வினாலும், ஏமாற்றத்தினாலும் கூனிக் குறுகிய என் மனசை எதிர்பாராத சம்பவங்களே நிமிர்த்தி விடுவதெனத் திட்டம் போட்டனவோ? கத்தியும் கையுமாக நிற்பவளை எப்படிச் சமாளிப்பதென்ற புதிய தெம்பு என் மனதுள்ளே எழுந்தது. மிகத் திறமைசாலி, தான் விரித்த வலையிலே அகப்படுவதைப் போல, பாண்டித்துரை அகப்பட்டிருந்தார்.

மறுகணம், மின்னும் கத்தியை லாகவமாகத் தட்டிவிட்ட போது அது 'கண கண, ஜண ஜண' வென செமிட்டித் தரையில் ஒலித்தது. ஏன் அதைத் தட்டி விட்டார்! எனக்குப் புலனாகவில்லை. பாண்டித்துரை ஓடிப் போய் கத்தியை அவளுக்கு முன் எடுத்துக் கொண்டு, கதவு இரண்டையும் சார்த்தியபடியே நின்றார். எதிர்பாராத இந்தச் சம்பவத்தைக் கண்டு அவள் நாணித் தலை குனிந்தாள். வீரம் இருந்தாலும் பெண், பெண் தானே?

மேலே என்ன நடக்கப் போகிறது? ஆவலோடு கவனித்தேன்! வேறொரு பக்கமாக பாண்டித்துரையின் மனைவி உள்ளே நுழைந்தாள். பிறர் முன்னிலையில் சகஜமாக வராதவள் வந்த போது நானே திடுக்கிட்டேன்!

(தொடரும்)

போன்: 1259 தந்தி : "FASHION" தபால் பெட்டி நெ. 16

கலை நிரம்பிக் காண்பதற்கு இனிதாகி
மலர்க்கொடியாள் மனதினை மகிழ வைத்து,
தளிர்மேனி செவ்விதழாள்
மலர்க்கண்ணைத் தன்னகத்தே ஈர்த்து
அழகொளியை அள்ளி வீசும்,

எமது கோயமுத்தூர்

சௌடாம்பிகை

சேலைகளை

வாங்கி கைத்தறியை ஆதரியுங்கள்.

தயாரிப்பாளர்கள்

ஸ்ரீ சௌடாம்பிகை தேவாங்க நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொசைட்டி லிட்.,
நெ. K. 1517 ; கோயமுத்தூர்.

தலைமை ஆபீஸ் : & சாயச்சாலை :– 22/307 ரங்கே கவுடர் வீதி, கோவை.

விற்பனைக் கிளைகள் : 11/47, சுக்ரவார்ப்பேட்டை, கோவை. 56, பெரியதெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்டாக்கிஸ்டு: நியூ ராதா ஹால், பஜார் தெரு, சேலம்.

தலைவர் : **A. K. பழனிசாமி.**

தயாரிப்பாளர் :

அரசினர் தீப்பெட்டி தொழிற்சாலை

பெரம்பூர், சென்னை.

வியாபாரவிஷயமாக விசாரிக்குமிடம் :

தொழில் & வர்த்தக டைரக்டர், சென்னை–5.

போன் : 203 தந்தி : "TRANSPORT"

சண்முகம் டிரான்ஸ்போர்ட்

பஸ் & லாரி சர்வீஸ்

அருப்புக்கோட்டை

பிராஞ்சு: மதுரை



எங்களுடைய லாரிகள் கீழ்க்கண்ட ஊர்களுக்குத் தினசரி போய் வந்து கொண்டிருக்கின்றன.

1. அருப்புக்கோட்டை To ராஜபாளையம்
2. அருப்புக்கோட்டை To தூத்துக்குடி
3. விருதுநகர் To பெருநாழி
4. விருதுநகர் To கடலாடி (Via) முதுகுளத்தூர்
6. மதுரை To சாயல்குடி
5. மதுரை To அருப்புக்கோட்டை

பொது ஜனங்களும் வியாபாரிகளும் எங்களை ஆதரிக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

போன் : 512 தந்தி : 'TRANSPORT'

கடவுளின் கவலை

ராஜு

புதுப்பித்தன்

அணுவுக்குள் அணுவாக அப்பாலுக்கு அப்பாலாக எங்கும் நிறைந்த பரம்பொருளாக ஆதியும், அந்தமுமின்றி தூணிலும் துரும்பிலும் இயங்கி வரும் இயற்கையென்ற எம்பிரான் கடவுள் சிரித்தார். அந்தச் சிரிப்பின் அதிர்ச்சி 'கட ,கடா' என்ற பேரொலியாக பிரளய கால அறிகுறியாக மனிதர்கள் மனத்தின் அச்சமாக, வியப்பாக கருமையான வானத்தின் இடியாக வியாபித்து நகைப்பின் ஒளியோ நூறுயிரம் கோடி வாட்ஸ் மின்சார ஒளியாக, மின்னல் புன்னகையாக செளிந்தது. கடவுளின் இந்தச் சிரிப்பிற்கு என்ன காரணம்? அதுதான் இந்தக் கதை.

நாகரத்தினம், எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில் திருநெல்வேலி எக்ஸ்பிரஸில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தான். சிங்காரச் சென்னையின் செழுமையான நிலையை காண வரவில்லை நாகரத்தினம். ஆண்டுகள் பல பள்ளியிலே வீணுக்கி கல்லூரி நிலையையும் கடந்து பட்டம் என்று சொல்லக்கூடிய ஓட்டைப் படகைக் கொண்டு, வாழ்க்கைக் கடலைக் கடந்து விடலாம் என்ற நம்பிக்கையோடு வந்து கொண்டிருந்தான். அந்தப் படகின் தன்மையை அவன் அப்பொழுது எப்படி அறியமுடியும்?

அதைக் கண்டுதான், அவன் அறியாமையைக் கண்டுதான் கடவுள் சிரித்தார். ஆனுல், அது பரிதாப சிரிப்பு; பச்சாத்தாபம் ஒலிக்கும் சிரிப்பு. கடவுள் பக்தனுக்கு இரங்கி உதவித்தானே ஆகவேண்டும்?' இல்லா விட்டால் அவரது கட்சியின் பலம் உலக சட்ட சபையிலே குறைந்து விடுமே ?

ஆம் ; நாகரத்தினம் ஒரு பக்தன். கல்லூரியிலே 'கட்டுப்பெட்டி' என்பது அவன் பட்டப் பெயர். தேவாரம், திருவாசகம் பேச்சுப் போட்டிகளில் அவனுக்கு முதல் பரிசு. அர்ச்சகர் வேலைக்கு 'டிப்ளமா' வைத்தால் அதில் நாகரத்தினம் முதன்மையாக வருவான் என்று கிண்டல் செய்வது அவன் நண்பர்கள் வழக்கம். நெற்றியிலே நீறு துலங்க, மத்தியிலே பொட்டு பளபளக்க, அவன் கல்லூரிக்கு வருவதே 1900.ம் ஆண்டு மாணவர்களை நினைப்பூட்டுகிறது என்பார்கள்.

போலிகள் தானே பொலிவுடன் விளங்குகின்றனர்! கடவுளின் வழிகளும், மனிதனின் வேடங்களும் யாருக்குப் புரிகின்றன! புதுப் பித்தனின் பேனு முனே, இருட்டிலே நடப்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறதே!

அத்தகைய பக்த சிகாமணி கடவுளை, அதாவது தன்னை நம்பிக் கொண்டு சென்னைக்கு வந்து விட்டானே என்பதை எண்ணித்தான் கடவுள் சிரித்தார். மாணவ உலகத்திலே தன் செல்வாக்குக் குறைந்து வரும் நாளிலே, இந்த அபூர்வ பக்தன் முயற்சியிலே தோல்வியுற்று தன் மீது நம்பிக்கை இழந்து விடக் கூடாதே என அஞ்சினர். ஆனல் ?

அவர் 'வேலைக்குச் சிபார்சு' செய்யக் கூடிய இடம் எங்கே இருக்கிறது? முன் காலம் மாதிரி இப்போதெல்லாம் கனவிலே தோன்றி கட்டளை பிறப்பிக்கக் கூடிய காரியம் லேசாக இருக்கிறதா? இல்லை; தருமிக்குப் பொற்கிழி வாங்கித்தர மாறுவேடத்தில் சென்றது போல் போகலாம் என்ருல், இந்தக் கால நாகரீக உடைகளைப் போடவே தெரியவில்லையே? அதோடு ஆட்டோ ரிக்ஷாவும், விஸிட்டிங் கார்டும் வேறு வேண்டுமே? நாகரத்தினம் கூட்டத்திற்குள் மறைந்து விட்டான். நாகரத்தினத்திற்காகக் கடவுள் கவலையோடு சிந்திக்க ஆரம்பித்தார். அதன் எதிரொலியாக வானத்தில் கருமை அதிகமாகப் படரலாயிற்று.

X X X

இரண்டு மாதங்கள்.

கடவுளின் கணக்கிலே அணுவை விடச் சிறிய மதிப்புக் கொண்டதாக அவர், ஒரு கோடீஸ்வரப் பிரபு 'நயா-பைசாவின்' மதிப்பைக் கணக்கிடுவது போல் நினைத்தார். ஆனல் நாகரத்தினம் மனிதன்.

சென்னை வாழ்வு அட்டை போல அவன் பணத்தை உறிஞ்சிக் கொண்டு இருந்தது. முதலில் 'ஆட்டோவில்' பறந்து கொண்டிருந்தவன், இப்பொழுது கால் நடை வழியைக் கையாண்டான். இரண்டு ரூபாய் நாளொன்றிற்கு என்றிருந்த வாடகையை மாதம் பத்து ரூபாயாக குறைத்துக் கொண்டான். பத்து அணு சாப்பாடு, அளவு சாப்பாடாக மாறி விட்டது. வெளுத்த துணியை மூன்று நாள் கட்டிக் கொண்டான். இப்படி எத்தனையோ? என்ன ஆனல் என்ன? வேலையும் கிடைக்கவில்லை.

சென்ற இடமெல்லாம், கை விரிப்பு. காலியில்லை என்ற கண் துடைப்பு. சில இடங்களில் சிரித்து, மழுப்பல்; சில இடங்களில் சீறிப்பாய்தல்; வேலை தேடித் தரும் தர்மப் பிரபுக்களையும் அவன் மறக்கவில்லை. நாய்க்கு லைசன்ஸ் தருவது போல கார்டு ஒன்றைத் தாராளமாக அவர்கள் வழங்கியதுடன் திருப்தி அடைந்து விட்டார்கள். ஆனல் அந்தப் புனித சீட்டைப் பெறவும், ஏழு மணி நேரம் தவம் கிடந்து வாட வேண்டியதாயிற்று. நாய் லைசன்சாவது பணத்தை வீசினல் உடனே கிடைக்கிறதே? ஏருத படியில்லை; ஏமாருத இடமுமில்லை; சென்னையைச் சல்லடைக் கண்களாகத் துளைத்து விட்டான். உடல் நிறையில் ஏழு பவுண்டுகள் குறைந்தது தான் கண்ட பலன். ஆனல் நாகரத்தினத்தின் பக்தி மாறவில்லை. வேலை தேடச் சென்ற இடங்களில் வழியில் இருந்த கோயில்களில் எல்லாம் முறையிட்டான்.

'விதியின் பயனை மாற்று' என்று வடபழனி வேற்படை விமலனை வேண்டினன்; கந்தசாமிக்

கடவுளிடம் கண்ணீர் வார கசிந்துருகிக் கை தொழுதான்; பார்த்தசாரதியின் பாதாரவிந்தங்களைப் பணிந்தான். கபாலீச்வரனின் கருணையை வேண்டிக் கதறினுன். தேங்காயை உடைத்தான்; கற்பூரத்தை ஏற்றினுன்; 'அரோகரா' என்ருன். கடவுளின் இந்த எல்லா 'ரெப்ரஸன்டேடிவ்' களும், அவரிடம் அவனது முறையீடுகளை தினம் 'ரிப்போர்ட்' செய்தார்கள். நாகரத்தினத்தோடு சேர்ந்து. கடவுளும் கவலைப்பட ஆரம்பித்தார்.

அறிவைப் படைத்து,அதன் அடிப்படையிலே ஏற்றத் தாழ்வுகளைப் படைத்து, ஓரறிவிலிருந்து ஆறறிவு படைத்த மனிதன் வரை படைத்த வாலறிவனின் அறிவிலேயே குழப்பம்!

உலகைப் படைத்து, உயிரினத்தை உண்டாக்கி, காலத்தை நிருவிக் கணக்கிட்டு தகுதிகேற்பத் தகைமையை அளித்து வரும் தந்தையின் அறிவிலேயே தடுமாற்றம்!

வேலை தேடித் தரும் வேலை என்ருல், அதைவிட வேறு ஒரு உலகைப் படைப்பதோ, இல்லை, வேறு சில அவதாரங்கள் எடுப்பதோ எளிது போல இருக்கிறதே என்று கூட அவர் எண்ண ஆரம்பித்து விட்டார்.

"கற்பக கோடிக் காலமாக நான் படைத்து வந்திருக்கும் ,வகைகளின் பட்டியலையும் கூட இந்த வேலையில்லாதவர் தொகை மிஞ்சிவிடுமோ?'' என்றும் வியந்தார்.

நாகரத்தினத்திற்காக முதலில் ஒரு பத்திரிகை ஆசிரியர் கனவிலே தோன்றினுர். அந்த நபரோ கனவிலிருந்து எழுந்ததும், கனவைக் கற்பனையாகக் கருதி சூடான கதையொன்றை எழுதிக் கடவுளின் பெயரையே சந்திக்கு இழுத்து விட்டார்!

கடவுளின் அடுத்த முயற்சி ஒரு தொழிலதிபரிடம்; அவரோ "கடவுள் ஆனுலும் கவலையில்லை. என் ஆபீஸில் வேலை யில்லை'' என்று ஏதோ 'நாடகக்' கடவுளிடம் பேசுவது போல விரட்டி விட்டார். பாவம், அவர் என்ன செய்வார்? கனவிலும் அவரது ஆபீஸ் கெடுபிடி எதிரொலித்தது. பலன் என்ன? கடவுளுக்கு நல்ல அர்ச்சனை. மற்ருெருவர் என் ஆபீஸில் பெண்கள் தான் தேவை' என்ருர். வளர்த்துவானேன்? தோல்வி தான் கண்ட பலன். இந்த நிலையிலாவது, நாகரத்தினம் கடவுளைத் திட்ட ஆரம்பித்து விட்டாலாவது கை கழுவி விடலாம் என்று எதிர்பார்த்தார்கடவுள். ஆனுல் அவனே, அவரை விட அவர் மீது அதிகமாக பக்தி கொண்

டிருந்தான். தினம் ஆபீஸ் டயரியில் அவனைப் பற்றிய ரிகார்டு ஏதாவது இருந்தது. கடவுளால் அவனுக்கு உதவவும் முடியவில்லை. அவனை உதறவும் முடியவில்லை.

x x x

திருவல்லிக்கேணி கடற்கரையில் நாகரத்தினம் அன்று மாலை காற்று வாங்கிக் கொண்டு இருந்தான். கட்டண மில்லாது களிப்பூட்டும் கடற்கரை அல்லவா? காரில் பறக்கும் கனவான்களும், காரிகைகளைக் காண வரும் காலேஜ் மாணவரும், கவலையை மறக்க வரும் காரியாலய சிப்பந்திகளும், கடலையை விற்றுக் காலங் கழிப்பவரும் ஆங்காங்கே அமர்ந்திருந்தனர். திடீரென்று ஏதோ ஒரு இசைத்தட்டின் ஓசை காற்றிலே மிதந்து வந்தது. நாலைந்து நாற்காலிகள், மேஜை, போட்டு ஒரு மேடை போடப்பட்டிருப்பதை நாகரத்தினத்தின் கவனத்திற்கு அந்த இசை அறிவித்தது. ஏதோ பொதுக் கூட்டம் போலிருக்கிறதே என்று எண்ணினான் அவன். 'வாயாடி வணங்காமுடி' மேனாடு, சுற்றத் தோழர்கள் அளித்த நிதியுடன் செல்லும் முன்பாக இன்று பேசுகிறார், என்று விசாரித்ததில் தெரிந்தது.

நாகரத்தினம் வேதனைப் பட்டான். கடவுளைத் திட்டியே காலங் கழிக்கும் வணங்காமுடிக்கு கார், பங்களா, நிதி, புகழ், மேல் நாட்டுப் பிரயாணம்; தனக்கோ இந்த நிலைமை! ஏன்? என்ற வினா பிறந்தது.

கடவுளும் நாகரத்தினத்தை அப்பொழுது கவனிக்க ஆரம்பித்தார். சற்று நேரத்தில் அவர் மனதிலே ஒரு தெளிவு பிறந்தது. அவர் அவனை மாற்றத் தீர்மானித்து விட்டார்! அதற்காக அவன் அறிவை மயக்கவும் தொடங்கினார். தோழர் வணங்காமுடியின் பேச்சைக் கவனமாகக் கேட்கத் தொடங்கி விட்டான் நாகரத்தினம். சொல்லழகிலே, 'கில்ட்' பளபளப்பிலே, பூச்சு வேலையிலே, தேன் உண்ட வண்டாக மயங்கினான். ஆண்டவனாவது ஆலயமாவது...எல்லாம் கல், என்று கூட அவன் சிந்தனை வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது. நானும் இந்த மேடையில் பேசினால் என்ன? என்று எண்ணும்படி அவன் மனதைத் தூண்டினார் இறைவன். விளைவு? அவர் விரும்பியபடியே நடந்தது.

அநுமதிபெற்று மேடையிலே ஏறினான், நாகரத்தினம். எரிமலையாகக் குமுறினான்; சொற்கள் அடைமழையாகக் கொட்டின; காட்டாற்று வெள்ளமாகப் பாய்ந்தன. மின்னல் வெட்டி, இடி இடித்தது போல முழங்கினான்.

ஆண்டவனை ஏற்றிய நாவே தூற்றியது. புகழ்ந்த வாய் பொல்லாப்புப் பேசியது. வாழ்த்திய வாய் வசைமாரி பொழிந்தது. கைதட்டல்கள், பூமாலைகள், பாராட்டுகள். நடந்து வந்த நாகரத்தினம் தோழரின் காரிலே அறையை அடைந்தான். கடவுள் சிரித்துக் கொண்டார்.

x x x

இரவு நாகரத்தினத்தால் உறங்க முடியவில்லை. அமைதியின்மை உள்ளத்தை அறுத்தது. புதுமையின் வேகம்மறைந்து, பழமையின் குரல் நெஞ்சைக் குடைந்தது. கடவுளை வாழ்த்திய நானா வைதேன்? நானா இன்றுஇப்படிப் பேசினேன்? என்று நெஞ்சம் குமுறிற்று. வேதனையின் விளைவிலே தூக்கம் கொஞ்சிற்று. அதற்குத் தானே கடவுள் காத்திருந்தார்? கனவிலே ஒலியாக வந்தார்.

"அன்பனே! உனக்கு வேலை தேடி தர என்னால் முடியாது. ஆனால் நீயாகத் தேடிக் கொள்ளலாம். என்னை வாழ்த்தி வாழ்வதைவிட வைது வாழ்வது மேல்" என்றார். திடுக்கிட்டு எழுந்தான் நாகரத்தினம்.

"என்ன புதுமை! இதுவும் ஆண்டவன் சோதனையா?" என்று திகைத்தான். சிறிது நேரத்தில்

தெளிந்தான். ' ஏழைக்காக இரங்கி வாடுவது போல நடித்து, நடனமாடி பாட்டுப்பாடி ஊரை ஏய்த்து உல்லாசமாக வாழ்ந்து, உண்மையில் காலணா தருமம் கூடச் செய்யாமல் கபட நாடகம் ஆடும் கஞ்சப் பிரபுக்கள் வாழும் பொழுது, நானும் ஏன் கடவுளைத் திட்டி அதன் மூலம் வாழக்கூடாது?............ஆம்....... நான் மாறப் போவதில்லை. ஆனால் உயரப் போகிறேன். அது தான் வழி!' என்ற முடிவுக்கும் வந்து விட்டான்.

x x x

ஆறு மாதங்கள் கழிந்து விட்டன. இன்று நாகரத்தினம் நாடறிந்த பேச்சாளர். சொந்தக்கார், பங்களா வேலையாட்கள், ஊதாரி நண்பர்கள் எல்லாம் படைத்த பெரிய மனிதன். கையிலே கோல்ட் பிளேக்..... ரோலக்ஸ் வாட்ச், வைர மோதிரம், சுருக்கமாக நாகரத்தினம் அடியோடு மாறி விட்டான்.

வாழும் வகையை அவன் புரிந்து கொண்டுவிட்டான். அவன் பேசும் கூட்டங்களில் ஆயிரம், பல்லாயிரக் கணக்கில் கூட்டம். பேசும் கூட்டங்களில் எல்லாம் கடவுள், மத எதிர்ப்புப் பிரசாரம்!

ஆனால் எல்லாம் ஊருக்கு உபதேசம்...அவன் நெஞ்சிலே கடவுளின் பெயரை ஆழப் பதித்து வைத்து விட்டான். தினம் பொதுக் கூட்டம் முடிந்து இரவில் எத்தனை மணியானாலும் பிரார்த்தனை செய்யாமல் உறங்குவது அவனால் முடிவதில்லை.

ஆனால் கடவுள் தான் நாகரத்தினத்தின் வெளிவேடத்தில் மயங்கி, மற்றவர்களும் அவனைப்போல் ஆகிவிடக்கூடாதென்று மிகவும் கவலை கொண்டவராகக் காணப்படுகிறார்!

"Standard Fire Works"

for

QUALITY AND

SUPERB PERFORMANCE

The Standard Fire Works Industries

SIVAKASI (S. INDIA)

மதுரையில் போட்டோ எடுக்கச் சிறந்த இடம்

விக்டோரியா ஸ்டுடியோ

(ஸ்தாபிதம் 1925)

3, அப்பாவு பிள்ளை சந்து,
மீனாட்சி கோயில் தெரு,
மதுரை.

32 இனிய மணம் கமழும்
302 ஜவ்வாது
3002 பத்திகள்

——: *தயாரிப்பாளர்கள்* :——

S. V. செல்லக்கனி & கோ

மீனாக்ஷி கோயில் தெரு, மதுரை.

மக்கள் விரும்பும்

ராமகிருஷ்ண

பீடிகள்

P.R. ஆறுமுகநாடார் & சன்ஸ்

முக்கூடல், திருநெல்வேலி ஜில்லா.

திலகமணியின் கதை

(த. சண்முகசுந்திரபாண்டியன்)

எங்களுடைய வீட்டிற்கு அடுத்த வீட்டில் திலகமணி என்று ஒரு தங்கை இருந்தாள். மிகவும் நல்லவள். புத்திக் கூர்மையுள்ளவள். விவேகம், விநயம், சாதுர்யம், சாமர்த்தியம் என்றெல்லாம் சொல்லுவார்களே, அவையெல்லாம் அவளிடத்திலே உண்டு. நன்ருகப் படிப்பாள்; எழுதுவாள்; பேசுவாள்; பாடுவாள். ஆனால் அவளுடைய உடலில் 'பலம்' மட்டும் இல்லை. நெஞ்சில் தைரியமும் ஊக்கமும் இல்லை. சரியாக நடக்க முடியாது. ஓடி ஆடி விளையாடவும் முடியாது. எல்லோரும் அவளைச் "சப்பாணி" என்றும் "சப்பாணி திலகமணி" என்றும் அழைப்பார்கள்.

திலகமணியின் தாய் பெயர் கண்ணம்மாள். கண்ணம்மாளுக்கு திலகமணி ஒரே பெண். வேறு பிள்ளைகளே கிடையாது. அதனால் திலகமணி செல்லமாக வளர்க்கப்பட்டாள். திலகமணியைப் பள்ளிக்கூடம் துவங்கு முன் கொண்டு வருவதும், சாயங்காலம் வீட்டுக்கு அழைத்து வருவதும் கண்ணம்மாளுக்கு வழக்கமாகி விட்டது. இரவில் பாடமும் சொல்லிக் கொடுப்பாள். மனக் கணக்கு, வாய்ப்பாடு எல்லாம் உண்டு.

ஒரு நாள் இரவு வீட்டிற்குள் சின்ன விளக்கின் வெளிச்சத்தில் திலகமணி படித்துக்கொண்டிருந்தாள். கண்ணம்மாளும் அவளருகில் அமர்ந்து தெரியாதவற்றைச்சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தாள். அப்போது வீட்டு முற்றத்தில் பிச்சைக்காரி ஒருத்தி வந்து நின்று பிச்சை கேட்டாள்.

"அம்மா, சோறு போடுங்க தாயீ!" என்ருள். உடனே திலகமணிக்கு பாடத்தில் மனம் செல்லவில்லை. வெளியே எட்டிப் பார்த்தாள். இருட்டு 'கும்' என்றிருந்தது. அங்கு நின்ற அந்தப் பிச்சைக்காரியின் உருவம் கொஞ்சம் தெரிந்தது. கந்தல் துணிகளைப் போர்த்திக் கொண்டிருந்தாள். தலையில் முக்காடு அணிந்திருந்தாள். பார்ப்பதற்குப் பயங்கரமாகக் காட்சி யளித்தாள்.

"அம்மா, அது யார்?" என்ருள் திலகமணி.

"பிச்சைக்காரி" என்ருள் கண்ணம்மாள்.

"ஏய், இந்தா! சோறு இப்போ தான் வடிக்கிறேன். அடுத்த வீட்டுக்கு போய் விட்டு வா!" என்று சொல்லி விட்டு பாடம் சொல்லிக் கொடுக்க முயன்ருள் கண்ணம்மாள். ஆனால் திலகமணியின் மனம் பிச்சைக்காரியின் மீது தான் இருந்தது. பிச்சைக்காரியும் நகர்ந்து செல்லவில்லை. அங்கேயேதான் நின்று கொண்டிருந்

தாள். இலேசாகச் சிரித்துக் கொண்டு மீண்டும், "அம்மா, சோறு போடுங்க தாயீ!" என்ருள்.

கண்ணம்மாளுக்குக் கோபம் வந்து விட்டது. "இந்தா, சொன்னுல் சொன்னவுடனே போக மாட்டாய்?" என்று கடுமையாகச் சொன்னுள்.

பிச்சைக்காரி மீண்டும் மீண்டும், "சோறு போடுங்க தாயீ!" என்று கேட்டுக் கொண்டே தான் இருந்தாள். அதோடு ஒவ்வொரு படியாக ஏறி உள்ளே வந்து கொண்டிருந்தாள். கண்ணம்மாளுக்கு இது ஒரு பக்கம் ஆச்சரியத்தையும் மறு பக்கம் பயத்தையும் உண்டு பண்ணி விட்டது. திலகமணிக்கும் ஒரே பயம். இருவரும் அந்த பிச்சைக் காரியையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"வருது அம்மா! வருது அம்மா!" என்று கூவி கண்ணம்மாளின் மடியில் படுத்துக் கொண்டாள் திலகமணி. கண்ணம்மாளின் பயமும் அதிகரித்து விட்டது. பிச்சைக்காரி வீட்டிற்குள் வந்து விடுவாள் போலிருக்கிறதே? இவள் பிச்சைக்காரியாக இருக்கமாட்டாள். பிச்சைக்காரிக்கு வீட்டிற்குள் நுழையும் துணிவு வரவே வராது...... என்று கண்ணம்மாளின் பயந்த மனம் எதை எதையோ எண்ணிக் கொண்டு துடித்தது. ஓடிப் போய் கதவை அடைத்து விட வேண்டுமென்று எண்ணினுள்-மடியில் படுத்திருந்த திலகமணியைத்தூக்கி, கீழே உட்கார வைத்து விட்டு எழுந்தாள்.

திலகமணி 'ஓ'வென்று அலறினுள். கண்ணம்மாளின் சேலையைப் பிடித்துக் கொண்டாள். அதை யெல்லாம் பொருட்படுத்தாமல் உதறிக் கொண்டு ஓடிப் போய் கதவை 'டப்'பென்று அடைத்து விட்டாள் கண்ணம்மாள். வீட்டிற்குள் திலகமணி அலறித் துடித்தாள். வெளியே அந்தக் கிழவி 'ஓ'வென்று அலறி விட்டு, "என்னம்மா, கண்ணம்மா, நான்தானம்மா! நான் தான்" என்ருள்.

அக்கம் பக்கத்திலிருந்தவர்கள் எல்லோரும் ஓடி வந்து விட்டார்கள். கண்ணம்மாளும் கதவைத் திறந்தாள். பிச்சைக்காரியல்ல, அந்தக் கிழவி. அவர்கள் வீட்டில் வேலை செய்யும் நல்லம்மாள் பாட்டிதான் அவள் என்பது தெரிந்தது. விளையாட்டிற்காகப் பிச்சைக்காரி போல் வந்து பிச்சை கேட்டிருக்கிருள். இப்

படித் திலகமணிக்கு விளையாட்டுக் காட்டுவது அவளுக்கு வழக்கம்; ஆனால் அன்று விபரீதம் விளைந்து விட்டது.

நல்லம்மாள் பாட்டிக்கு மண்டையில் நல்ல அடி. இரத்தம் வழிந்தது. விரல்களும் நைந்து விட்டன. நகங்களின் இடுக்குகளிலிருந்து இரத்தம் வழிந்தது. கண்ணம்மாளையும் பாட்டியையும் எல்லோரும் திட்டிக் கொண்டிருந்தார்கள்.

உள்ளே திலகமணி பேச்சுமூச்சு இல்லாமல் கிடந்

தாள். அவளுடைய இதயம் வெகுவேகமாக அடித்து ஓய்ந்து கொண்டிருந்தது. பின்னர் எல்லோரும் அவளைக் கவனித்தார்கள். தொட்டால் உடனே அலறினாள்; "வருது அம்மா! வருது அம்மா!" என்றே அலறினாள். காய்ச்சல் பலமாக அடித்தது. கண்களை விழிக்கவே இல்லை.

டாக்டர்கள் வந்தார்கள். நாட்டு வைத்தியர்கள் வந்தார்கள். சாமியார்களும் பூசாரிகளும் வந்தார்கள். ஒன்றும் பலன் கிடைக்க வில்லை. "வருது அம்மா! வருது அம்மா!" என்ற புலப்பமும் அலறலும் நிற்கவே இல்லை. அதோடு காய்ச்சலும் தணியவில்லை. முடிவில் திலகமணி இறந்து விட்டாள்! "திலகமணி! திலகமணி!" என்றே கூவிப் புலம்பி அலறி அழுதார்கள், கண்ணம்மாளும் நல்லம்மாள் பாட்டியும்.

தம்பிகளே! தங்கைகளே! பயம் இரண்டு வகைப்படும். தப்பு செய்தால் அம்மா அடிப்பாள் என்ற பயம் வேண்டும். தீயைத் தொட்டால் சுட்டு விடும் என்ற பயம் வேண்டும். ஆனால் கயிற்றைப் பார்த்து பாம்பு என்று நினைக்கின்ற பயம் வேண்டாம். இருட்டில் அது இருக்கும், இது இருக்கும் என்று நினைக்கின்ற பயம் வேண்டாம். பேய் பிசாசு என்ற பயமும் வேண்டவே வேண்டாம்.

phone : 713 Tel. ANANDJOTHI

சிற்றுண்டிகளுக்குச்சிறந்த இடம்.

ஜோதீ

ஆனந்த பவான்

காபி ஓட்டல் & போர்டிங் ஹவுஸ்

கீழமாசி வீதி, மதுரை.

N.B.—ஜோதி ஆனந்தா காபி ஒர்க்ஸ் காபி பவுடரையே உபயோகியுங்கள்.

TRADE MARK

Regd. No. 161859

மதுரை நாடார் கடை

M. N. P.

லிங்க மார்க்

சுருட்டுகள்

M. N. P. லிங்க மார்க் பட்டணம் பொடி, துண்டு, நைஸ், சிவபுரிபாளை தயாரிப்புகளை உபயோகித்து இன்புறுங்கள்.

M.N.P.N. & M.N.P.T.

மதுரை.

தபால் பெட்டி நிர்: 17 போன்: 65

தீ ஓரியண்ட் லித்தோ பிரஸ்
சிவகாசி

வித விதமான உயர்ந்த கலர்
அச்சிடுவதற்கு சிறந்த, புகழ் வாய்ந்த
லித்தோ பிரஸ்

வளர்க கைத்தறி! வாழ்க கூட்டுறவு!

ஜவஹர்புரம் தேவாங்க நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி & விற்பனை சொஸைட்டி லிட்.,
நெ. K. 1516.

100 நெ. கெட்டிச்சாய கைத்தறி சேலைகள் தயாரிப்பவர்கள்.
வேலாண்டிபாளையம் P.O., கோயமுத்தூர்.

புதுமையான டிசைன்கள்! உடைக்கு உகந்தது!
கண்ணைக் கவரும் கலர்கள்!! விலையில் குறைந்தது!!
உத்திரவாதமான கெட்டிச் சாயம்!!! நாணயமான சரக்கு!!!

இவை யனைத்திற்கும் பெயர் பெற்றது
எமது **ஜவஹர் சேலைகள்.**

இந்தியா, பர்மா, சிலோன் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்கிறோம்.

கோவை கைத்தறித் துணிப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.
தங்கள் தேவைக்கு எழுதவும்.

எமது சேலைகள் கிடைக்குமிடம்:—
R. S. புரம், காந்திபுரம் சேல்ஸ் எம்போரியங்களிலும்
மற்றும் எல்லா இடங்களிலுமுள்ள சேல்ஸ் எம்போரியங்களிலும் கிடைக்கும்.

குறிப்பு: ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்புகிறோம்.
S. மாரி செட்டியார், தலைவர்.

ஸ்ரீ பாலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.,

செங்கோட்டை.

தற்சமயம் உள்ள கதிர்கள்: 14,384

மேற்கொண்டு நிர்மாணிக்கும் கதிர்கள்: 3,472

கைத்தறித் தொழிலின் மகோன்னத வளர்ச்சி உயர்ந்த ரக நூலையும், மிக நேர்த்தியான துணியையும் பொறுத்திருக்கிறது.

எங்கள் ஆலை மிக நேர்த்தியான உயர்ரக நூல்களை விநியோகிக்கிறது.

மானேஜிங் ஏஜண்டுகள்:

மெஸர்ஸ் கரையாளர் & ரங்கசாமிநாயுடு ஸன்ஸ் கம்பெனி

இயற்கை வைத்தியம்

நூற்றுக்கு மேற்பட்ட நோயாளி களைப் பலரகப்பட்ட நோய்களி லிருந்து மீட்டு, அதன் பயனாக கிடைத்த என் சொந்த அனுப வத்தை வைத்து இந்தக் கட் டுரைகளை எழுதி யிருக்கிறேன். நான் சிகிச்சை பண்ணி குணப் படுத்திய நோய்கள் பின்வரு மாறு :

(1) வயிற்றுப் புண் *(*Grastric ulcer), (2) குடல் புண் *(*duodernal ulcer), *(3)* வயிற்று வலி (Colic), *(4)* மலச்சிக்கல் (Constipation), *(5)* உள்நாக்கு வீக்கம் (tonsilitis), *(6)* இளைப்பு (Asthma), (7) க்ஷயம் (tuberculosis),(8) சுரனை (tumour), *(9)* சுண்டு வாதம் (St. Vitas's dance), (*10*) பக்க வாதம் (Paralysis).

மனித சரீரம்,கோடிக் கணக்கான அணுக்களைக் கொண்டு அமையப் பெற்றது. ஒவ்வொரு அணுவும் ஜீவசக்தியுடன் இயங்குகிறது. நம் சரீரம் இறந்த பின்னும், சில அணுக் கள் சொல்ப நிமிஷம் உயிருடன் இருந்து, பிறகுதான் மரணம் என்ற ஆழ்ந்த நித்திரையில் அடங்குகிறது. உதாரணமாக, ஒரு பல்லியின் வாலைக் கத்தரித்து விட்டால், அந்த வால் சில நிமிஷங்கள் துடித்துக் கொண்டிருந்த பின் தான் மரிக் கிறது.

ஜீவ சக்தியுடைய ஒவ்வொரு ஜந்துவிற்கும் அது உயிர் தரித்திருக் கவும், வளரவும் உணவு அவசியம். உணவில் ஐந்து வகையான அம்சங் கள் தேவை.

(*1*) புரதம் (protein), (2) மாவு (carbohydrate), *(3)* கொழுப்பு (fat), (4) தாவர உப்புக்கள் (numeral salts), (5) விட்டமின்கள் (vitamins)

முதலில் குறிப்பிட்ட மூன்று அம்சங்களும், ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தில் இருக்க வேண்டும்.

[இயற்கை வைத்திய முறையைப் பின் பற்றி வியாதி களைக் குணப்படுத்திக்கொள்ள விரும்புபவர்களின் கேள்வி களுக்கு, இனி வரும் 'புதுமை' இதழ்களில், இந்தப் பகுதி யில், இயற்கை வைத்திய நிபுணர் திரு. என். எஸ். சுப்பையர் நிவாரண முறைகளைப் பதில்களாக தருவார்கள். கேள்விகள் சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதப்பட்டு நமது காரியா லயத்திற்கு அனுப்பப்படவேண்டும். 'இயற்கை வைத்தியம் பற்றிய கேள்வி' என்ற குறிப்பும், கடிதத்தின் மீது எழுத வேண்டுகிறோம்.

—ஆசிரியர்.

(புரதம் 15%;மாவு 50%; கொழுப்பு 35 %)

இம் மூன்றில் எவையேனும் விகிதாசாரத்திற்கு அதிகமாக இருந்தால், இப்படி எஞ்சிய அம்சங்களை, அணுக்கள் தீண்டுவதில்லை. இந்த எஞ்சிய அம்சங்கள் ரத்தத்தில் மிதந்து சென்று தேக உறுப்புகளில் வியாதிகளை உண்டாக்குகின்றன.

அணுக்களுக்குத் தேவையான தாவர உப்புக்களும், விட்டமின்களும் சுத்திகரிக்கும் சாதனங்கள் (cleansing agents) என்று சொல்லப்படுகின்றன. அதாவது இந்த இரண்டு அம்சங்களும், அணுக்கள் உணவு அருந்தியதின் விளைவாக உண்டாகும் கழிவுப் பொருட்களை (toxic impurities) சுத்தப்படுத்தவும் (disinfect),வெளியே தள்ளவும் உபயோகப்படுகின்றன.

மேலே சொன்ன விகிதாசாரப்படி நம் உணவு அமைந்திருந்தால் மாத்திரம், ஆரோக்கியம் கிட்டி விடாது. கழிவுப் பொருட்களும் தேகத்திலிருந்து அகற்றப்பட வேண்டும். நம் தேகம்,நான்கு வாயில்கள் மூலம் கழிவு பொருட்களை வெளியேற்றுகின்றது. இவைகள் தான் (1) சுவாசப் பைகள் (2) மூத்திரக் கிரந்திகள் (3) குடல் (4) தோல்

மேற்படி உறுப்புகள் முறையே கரியமில வாயு, மூத்திரம், மலம், வியர்வை மூலமாகக் கழிவு பொருள்களை தேகத்திலிருந்து வெளியேற்றுகின்றன. ஆகாரம் விகிதாசாரப்படி அமைந்து வெளித்தள்ளும் உருப்புகள் தங்கள் வேலைகளைச் செவ்வனே செய்தால் மனிதன் ஆரோக்கியத்துடன் இருப்பான். இரண்டில் ஒன்று விதிக்கு மாறாக இருந்தால், வியாதிகளுக்கு அஸ்திவாரம் போட்ட மாதிரிதான்.

மேல் சொல்லியபடி நம் உணவு அமைந்திருந்தால், நம் ரத்தம் 20% அமிலம் (acid),80% கரிசல் தன்மைகள் வாய்ந்ததாய் இருக்கும். ஆனால் தற்காலிக நாகரிக உணவு சீர்கேடானது. காபி, தேயிலை, சீனி முதலிய அமிலத்வம் வாய்ந்த அம்சங்கள் நம் உணவில் முக்கியத்வம் வகிக்கின்றன. பழங்கள், காய் கறிகள் நாம் அதிகம் சாப்பிடுவதில்லை. சாப்பிடினும், அவைகளை மித மிஞ்சி வேக வைப்பதில் அவைகளிலுள்ள போஷாக்குச் சத்துக்கள் நசித்துப் போகின்றன. இந்தக் காரணத்தால் நம் ரத்தம் 20%க்கு மேல் அமிலத்வமாகிறது. நம் உணவுதான் ரத்தம் ஆகி, ரத்தம் எல்லா பாகங்களிலும் சுற்றி அணுக்களுக்குத் தேவைப்பட்ட அம்சங்களைக் கொடுக்கிறது.

அதிகஅமிலத்வம் வாய்ந்த ரத்தம், ரத்தக் குழாய்களின் உட் சுவர்களையும், அணுக்களையும் அரித்துப் புண்ணுக்கி (corrodes or inflames) நோய்களுக்கு ஏதுவாகின்றது.

மேலே சொன்னதிலிருந்து இயற்கை முறையின் முதல்படி—நம் உணவைக் கட்டுப் படுத்தி, ஒரு நியதியை அனுசரிப்பதுதான் என்பது நன்கு விளங்கும். இதில் திகிலடைய வேண்டிய விஷயம் ஒன்றுமில்லை. இந்த நியதியில் வகுத்த உணவு, சாதாரண உணவை விட ருசியில் தாழ்ந்ததல்ல. நம் உணவில், ஏராளமாய் காய் கறிகளும், பழங்களும் உபயோகிப்பது நலம். உணவைப் பக்குவம் பண்ணவேண்டிய விதத்தைப் பற்றிப் பின் கவனிப்போம்.

சந்தா விகிதம்

தனிப்பிரதி 25 ந. பை.

6 மாதச் சந்தா ரூ. 1-50

வருடச் சந்தா ரூ. 3-00

நீடித்து உழைக்கும்

பாத்திரங்கள்

எங்களிடத்தில் அலுமினியம், கண்ணுடி சாமான்கள், பீங்கான், எனமல் தினுசுகள், விளக்குகள், ஊறுகாய் ஜாடி, புட்டி, கார்க்கு, எவர்சில்வர் பாத்திரங்கள் மற்றும் பலவித மான சாமான்களும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும்.

சு. சந்தோஷ நாடார் & சன்

1/4, ஈவினிங் பஜார், பி.டி. மதராஸ்.



S. SANTHOSA NADAR & SON

1/4, EVENING BAZAR . . . . PT. MADRAS.

BAROO/

கிளை ஆபீஸ்: 23, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3
37, ஹைரோடு, திருநெல்வேலி ஜங்ஷன்.

தந்தி : 'குமரன்' டெலிபோன் : { மில் 98 / ஆபீஸ் 533 }

குமரன் மில்ஸ் லிமிடெட்,

பூளைமேடு P. O; கோயமுத்தூர்.

நிறுவப்பட்டுள்ள கதிர்கள் ... 19,044
மேற்கொள்ளப்பட்டுள்ள விஸ்தரிப்பு ... 5,900

நாங்கள் உயர்தரமான 20s 36s 40s 60s 80s நிர். பருத்தி நூலும், 20s நிர். ஸ்டேபிள் பைபர் நூலும் தயார் செய்கிறோம்.

எங்கள் நூலை
சென்னை, ஆந்திர மாகாணங்களில்
மிகுதியாக உபயோகப்படுத்துகிறார்கள்.

Sri G. RAMASWAMY NAIDU &
Sri G. V. MUTHUSWAMY NAIDU
Committee of Directors.

AT YOUR SERVICE

Grams: CORONATION

Phone: 54

THE CORONATION LITHO WORKS

DHARMAVILLA BUILDINGS

POST BOX NO: 2. SIVAKASI. (S. I.)

PIONEERS IN FINE ART LITHO & OFFSET PRINTING. CONTACT FOR PRINTING LABELS CALANDERS, ADVERTISEMENT POSTERS etc. FOR ALL TRADES.

Distributors for: HOOGHLY INK Co, Private, Ltd.

காதலிக்கத் தெரியாதவன்!

மேஜையின் மீது புத்தகங்கள் தாறுமாருக விரித்தபடி கிடந்தன. எதையோ தீவிரமாகத்தேடிக் கண்டு பிடிப்பதில் முனைந்திருந்தான் சேகர். அரிஸ்டாடிலும் பிளேட்டோவும் அவனுக்கு முன்பாக வந்து நின்று சதுராடி விட்டுச் சென்றுர்கள்.

'இன்று இரவுக்குள் 'பாலிடிக்ஸை' முடித்துவிட முடியாது போலிருக்கே!... இனி, பொருளாதாரம், இந்திய சரித்திரம்... பரீட்சைக்கு ஒரு வாரம்... எண்ணி வைத்தாற் போல ஏழே நாட்கள்தாம் இருக்கின்றன!... எப்படி எல்லாவற்றையும் படித்...'

சட்! யாரது? மனுஷனைச் சற்று நேரம் நிம்மதியாகப் படிக்க விட மாட்டார்கள்! சதாவும் ஒருவர் மாற்றி ஒருவர் கதவை 'லொட் லொட்' டென்று தட்டிப் பிராணனை வாங்குவதே வேலையாகப் போய் விட்டது. பேசாமல் ஹாஸ்டலிலேயே தங்கியிருந்தால் இந்தத்தொல்லைகளெல்லாம் கிடையாது...

"இதோ வந்து விட்டேன்!... ஒரு தடவை தட்டினுல் போதாதா?.. சேசே!... 'டிஸ்டர்பன்ஸ்' ..." சேகர் அலுத்துக்கொண்டே எழுந்து சென்று கதவைத் திறந்தான், வேலைக்காரி விளக்கு மாற்ருேடு தரிசனம் தந்தாள். சிரிப்பு வேறே! கர்மம்; கர்மம்!

"ஐயாவுக்கு இன்னிக்கு ரொம்பக் கோபம் போலிருக்கே!" சேகருக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"இன்றைக்கு நேரமில்லை!... அறையெல்லாம் சுத்தமாகத்தான் இருக்கிறது!..." கோபத்தோடு வார்த்தைகளைக் கொட்டினுன்.

"சாயங்காலமா வந்து பெருக்கட்டுமா?..."

"வந்து பெருக்கவும் வேண்டாம்! வகுக்கவும் வேண்டாம்! அம்மா, தாயே! ஒரு கும்பிடு! இன்னும் ஒரு வாரத்துக்குப் பரீட்சை முடியுமட்டும் தொந்தரவு பண்ணுதே!—— அறை எப்படியும் நாசமாகட்டும்..." 'பட்' டென்று கதவைச் சாத்தினுன். கழுத்தை நொடித்து விட்டு நகர்ந்தாள் வேலைக்காரி. அவள் போகிற விறைப்பைப் பார்த்தால் ஒரு வாரமென்ன, வருஷம் பூரா விலுமே தலை வைத்துப் படுக்க மாட்டாள் போலிருக்கிறதே!

பழையபடியும் நாற்காலியில் தஞ்

பி. ராஜகோபாலன்
(கிருத்தவக் கல்லூரி மாணவர்)
தாம்பரம்.

அவள் பேச்சில் தேன் இருந்தது; மணம் இருந்தது; போதை இருந்தது; காதலும் இருந்தது; ஆனுல் அவற்றை எல்லாம், 'ரசிக்கும் உள்ளம்' அவனிடம் இல்லையே! காதலிக்கத் தெரியாதவன், கடைசியில் தன் காரியத்திலாவது வெற்றி பெற்ருனு?

சம் புகுந்தான். புத்தகத்தை வெறு மனே வாசித்தால் அவனுக்கு ஏருது. நத்தை மாதிரி வரிகளுக்குக் கீழே பென்ஸிலால் கோடு போட்டுக் கொண்டே படித்தால்தான் குறிப்புகள் எல்லாம் நினைவிருக்கும். பரீட்சை! பரீட்சை யென்ருல் சாமானிய்மா ?... பரீட்சைக்கு இன்னும் ஒரே வாரம்... நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டு 'தலையணை'களில் கவனத்தைச் செலுத்தினன்.

'ரூஸோவுக்கு எப்பேர்தும் குட்டையைக் குழப்புவதே வேலை !... மார்க்ஸ் இந்தக் குறிப்புக்கு என்ன சொல்கிருரென்று பார்க்கலாம் !' புத்தகங்கள் சேகரின் தயவால் ஒன்றுக்கொன்று குலவின.

லொட்... லொட... அட, ஈஸ்வரா !... வேறெங்காவது நிம்மதியாகப் போய்விட வேண்டும்... சதாவும் எழுந்து கதவைத் திறப்பதே வேலை !

" யாரது ?"

" நான்தான் !..." மெல்லிய குரல் ! பெண் குரல் ! பெண்ணுக இருந்தால் என்ன? யாராக இருந்தால் என்ன?... படிப்புக்கு இடைஞ்சல் விளைப்பவர்கள் பேய்கள்; பிசாசுகள் ; பூதங்கள் ! கூடாது ! திறக்கக் கூடாது! கை வலிக்கு மட்டும் தட்டி விட்டுப் போகட்டும் !

"கதவைத் திறவுங்கோ, மாமா!.." மாமாவாவது மச்சானுவது !... ஓகோ !... பங்கஜம் போலும் !... பால் கொண்டு வந்திருப்பாள் ! கதவைத் திறக்க வேண்டியதுதான். கதவைத் திறந்தான்.

" மாமா !... நளினு அக்கா ஏதாவது கதைப் புஸ்தகம் வாங்கிவரச் சொன்னு!..." 'எலிவால்' பங்கஜம் பால் கொண்டு வரவில்லையா ? ஏமாற்றத்தோடு ஆத்திரமும் சேர்ந்து கொண்டது.

" யாரது நளினு ?"

"நேற்று ஊரிலிருந்து வந்தாளே... நளினு அக்கா !..." யாரோ நேற்று

பாவாடையும், தாவணியும் இரட்டைச் சடையுமாக ஜட்காவிலிருந்து இறங்கினார்கள் !... அதையெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தால் படிப்பு என்னுவது ?

"அவளுக்கென்ன இப்போது?......"

"அதான் கேட்டேனே, கதைப் புஸ்தகம்......"

"கதைப் புஸ்தகமாவது, மண்ணுவது !...அதையெல்லாம் யார் கண்டார்கள் ?... பேசாமல் போ! படிக்கவேண்டும்...தொந்தரவு பண்ணுதே!..."

"எப்போதும் படிக்கவேணும்... படிக்கவேணும் என்று சொல்றீங்களே, மாமா ! அதைத் தவிர வேறே ஒண்ணும்......"

"போகிறாயா, இல்லையா ?..." ஓடியே போய்விட்டாள் பங்கஜம்.

ஹாஸ்டலில் நண்பர்களின் அரட்டைக்கு மத்தியில் படிக்க முடியாதென்று இங்கே அறையெடுத்தாலும் எடுத்தோம் ...அரை நிமிஷமாவது நிம்மதியாகப் படிக்க முடியவில்லை...கதவைப் பூட்டினால் தட்டித் துளைத்து விடுகிறார்கள். திறந்தே வைத்திருக்கலாம். எதையாவது, யாரும் கொள்ளையடித்துக் போகட்டும் ! அக்கறையில்லை...புத்தகத்தைச் சரணடைந்தான்.

பதினேழு வரி தான் ஓடியிருக்கும்...அதற்குள்...யாரது? தொண்டையைப் பரீட்சை பார்ப்பது ? நளினுவோ, கொய்னுவோ....அவளாகத்தான் இருக்கும் !....அபஸ்வரம் அபஸ்வரம் ! எங்காவது காட்டுக்கு மத்தியில் போய் உட்கார்ந்து கொண்டு கத்தித் தொலைத்தால் என்ன ? ....இனிமேல் படித்துக் குப்பையைக் கூட்டினாற் போலத் தான்!

"பங்கஜம் ?... பங்கஜம் !...." மாடிப்படியருகில் நின்று கொண்டு இரைந்தான்.

"என்ன மாமா ?...." பங்கஜம் காமிரா அறைக்குள்ளிருந்து ஓடி வந்தாள்.

"கொஞ்சம் பாடுவதை நிறுத்திக் கொள்ளச் சொல் ! கழுதைகளுக்கு இப்போது அவசியமில்லை....தேவையானபோது பாடிக் கூப்பிட்டுக் கொள்ளலாம் ! நான் படிக்கவேண்டும் !..." நளினுவுக்குக் கேட்கும் வகையில் சப்தம் போட்டுச் சொன்னான் சேகர்.

'படார் படார்', என்று காமிரா அறைக்குள் பூகம்பங்கள் கிளம்பின. அவளுக்குக் கோபம் வந்தால் யாருக்கென்னவாம் ? பாட்டு நின்றால் போதும் ; தொல்லை விட்டால் சரி !

அறைக்குள் போய் அமர்ந்து புத்தகத்தைப் புரட்டினானே, இல்லையோ....பத்திரிகையும் கையுமாக அப்பாவு வந்து சேர்ந்தான். அட்டை மாதிரி ஒட்டிக்கொண்டு ஆளை விட மாட்டான். உலகப் பிரச்சினைகள் அத்தனையும் அலசிவிட்டுத் தான் மறு காரியம் !

"டேய் ! நீ பலே ஆளடா !...." வந்து விட்டான் முப்பது பல்லையும் காட்டிக் கொண்டு! விவேகம் வேண்டாமா ? ...படித்தாற் போல் தான் !"

"யாரடா, அந்த மின்னல் கொடி !... ஊம் !... நீ கொடுத்து வைத்தவன் ! உம் .. நடத்து! எங்களையும் நினைவில் வைத்துக்கொள் அப்பனே ! தேவி கடாட்சத்தின் போதையில் நண்பர்களை..." பேசிக் கொண்டே போனவனை இடைமறித்துக் கேட்டான் சேகர்.

"அது சரி... என்ன விசேஷம் ?..."

"தேவியைக் குறித்து அடுத்தவர்கள் பேசிவிடக் கூடாதோ ?... சரி ! காதல் வாழ்க !.........டேய் ! பிரமாதமான சர்க்கஸ் !... வித்தைகளென்ன !... விளையாட்டுக்களென்ன !... பயங்கரமான சிங்கம் புலி...கரடி !..."

"நீதான் அவைகளைக் கட்டிக் கொண்டு அழு !... எனக்கு

அதெல்லாம் பழக்கமில்லை !...” (யாரடா, இவன் ! நண்பனென்றும் பாராமல் விரட்டினால்தான் படிக்க முடியும்)... “போய் வருகிறாடா ! படிக்கவேண்டியது நிறைய இருக்கின்றன !...”

“நீ எப்படி இங்கே இருக்க விடுவாய் ? காதலுக்குச் சுவர் கட்டி மறைக்கவும் நான் தயாராக இல்லை !...டேய், சேகர் ! ஒரு விஷயம்......இன்று பேப்பரைப் பார்த்தியோ...... புல்கானின்...என்ன பேசி.. ...”

“புல்கானினாவது... மரம்கானினாவது !...போய், வா ! ...இனியும் உன்னோடு பேசிக்கொண்டிருக்க நான் தயாராயில்லை !...” அப்பாவுவின் முகம் என்னவோ போலாகி விட்டது.

“சரிதாண்டா நிறுத்து !...பெரிய படிப்பு படிக்கிறான் ! இன்று முதல் இந்தப் பக்கம் வந்தால் என்னவென்று கேள் !... உன்னுடைய ‘பிரண்ட்ஷிப்’புக்கு ஒரு பெரிய ‘குட்பை’ !...” அவனுடைய ஆத்திரத்தையெல்லாம் கதவின் மேல் காட்டி விட்டுச் சென்றான்.

தயார் ! இதுபோல் எத்தனை நண்பர்களை வேண்டுமானாலும் இழக்கத் தயார்...நமக்கு வேண்டியது படிப்பு.. படிப்புத்தான் ! கீழே போகும் போதும், மேலே வரும்போதும், மின்வெட்டுப் பார்வைகளை அள்ளி வீசும் நளினா அவனுடைய கண்களுக்கு ஒரு பொருட்டாகத் தோனறவில்லை. இரவு பகல் புத்தகங்கள் ... புத்தகமும், தாளுமாக ஐந்து நாட்கள் பறந்தோடிவிட்டன இன்னும் இரண்டே நாட்கள்!...

கலைந்த கிராப்பு ; கருவளையத்துக்குள் அடங்கியிருந்த விழிகள்; எண்ணெய் வழியும் முகம் ...... பொருட்படுத்தவில்லை. படிப்புத்தான் உயிர், உடல் எல்லாம்... படிப்பே ஜீவன் !

முக்கியமான குறிப்பொன்றைப் புத்தகத்திலிருந்து தாளில் பெயர்த்துக்கொண்டிருந்தான் சேகர். வளையொலி சங்கீதம் இசைக்க, மெதுவாக அருகில் வந்து நின்றாள், நளினா. அவன் குனிந்த தலை நிமிரவே இல்லை. கையிலிருந்த பால் தம்ளரை ‘டக்’ கென்று மேஜை மீது வைத்தாள். அப்போதும்... ‘சே, என்ன மனிதர் இவர் ! இலேசாகத் தலையைத் தூககிப் பார்த்தால் என்ன குறைந்து விடுமாம்! .. எவ்வளவு நேரம் சிரமப்பட்டு அலங்காரம் செய்ய வேண்டியிருந்தது !’

‘ஷிபான்’ புடவைத் தலைப்பு மெதுவாக நழுவி அவனுடைய கைகளைக் கொஞ்சியது. அப்பாடா !... நல்லவேளை. கருணை பிறந்ததே! நெருப்பாகக் காட்சி தந்த கண்கள் நளினாவை நோக்கின.

“பங்கஜம் வீட்டில் இல்லை... நீங்கள் சிரமப் படுவீர்களென்று... நானே......” என்று குழைவோடு கூறிய நளினா அவனை ஒய்யாரமாகப் பார்த்தாள். அவளுடைய எடுப்பான தோற்றம், அவன் முகத்தில் கொஞ்சமாவது உணர்ச்சி அலைகளைப் பிரதிபலிக்கட்டுமே !. .

இல்லை !………''

' அடேயப்பா ! எவ்வளவு கோபம்



என்ன, படிப்போ?

''ஓகோ!''… பால் கொஞ்சம் கொஞ்சமாக வயிற்றுக்குள் சென்றது. புத்தகத்தைப் பார்த்துக் கொண்டே பாலைக் குடித்தான்.

'' இப்போதாவது புத்தகத்துற்கு ஓய்வு கொடுத்தால் என்னவாம் ?'' என்று கொஞ்சலாக மொழிந்த நளினு சேகர் கையிலிருந்த புத்தகத்தை மெதுவாக எடுத்தாள்.

' சரே ' லென்று எழுந்தான் சேகர். ''இதோ, பாருங்கள்! இந்த மாதிரி விளையாட்டெல்லாம் எனக்குப் பிடிக்காது ; நேரமும்

வருகிறது! ....படிப்பைக் கெடுத்து விட்டேனே !....'' அவள் பேச்சில் தேன் இருந்தது ; மணம் இருந்தது;....போதை இருந்தது ; காதலும் இருந்தது !....அசடு! சேகர் சந்தர்ப்பத்தை நழுவ விடுவானே? .

"பேசுவதற்கு நான் தயாரில்லை... படிக்கவேண்டும் ! இங்கிருந்து போய்விட்டால் மிகவும் சந்தோஷப் படுவேன் !...இனிமேல் பங்கஜமிருந்தால் பால் கொண்டு வரட்டும் ! இல்லாவிட்டால் ஒன்றும் வேண்டாம் !..." சேகர் உட்கார்ந்து விட்டான்.

'போயும் போயும் இந்த ஜடத்திடம் பேச்சுக் கொடுக்க வந்தேனே !... இதற்கும் உலகத்துக்கும் ரொம்ப தூரம்...' கோபத்தால் முகம் சிவக்க,அறையை விட்டு வெளியேறினாள் நளினா.

"தம்ளரை எடுத்துக் கொண்டு போய்விடுங்கள் ! அதற்கென்று இன்னொரு தரம் வந்து போகக் கூடாது !..."

"பங்கஜம் எடுத்துக் கொண்டு போவாள் !..." வார்த்தைகளில் சூடு பரவியிருந்தது.

சேகருடைய அறையில் இரண்டு நாட்களிலும் இரவு பூராவும் விளக்கு எரிந்து கொண்டுதான் இருந்தது. புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டும் ஓசையைத் தவிர வேறொன்றையும் அவனுடைய அறைச் சுவர்கள் கேட்க வில்லை.

முதல் மணி அடித்தாகிவிட்டது. பரீட்சை மண்டபத்தில் சேகர் தனக்குரிய இடத்தில் உட்கார்ந்தான். ஒரே தலைக் கனம் ! அதிகமாகப் படித்ததால் பாரமேறி யிருக்கிறது போலும் ! கண்களில் எரிச்சல் வேறு. கண்ணாடியைக் கழற்றி கைக்குட்டையினால் கண்ணைத் துடைத்து விட்டுக் கொண்டான். தலை 'விண் விண்'ணென்று தெறித்தது.

விடைகள் எழுதுவதற்குரிய வெற்றுத்தாள் மேஜையின்மேல் வைக்கப் பட்டது. அதில் எண்ணையும், எழுதப் போகும் பொருளின் தலைப்பையும் எழுதுவதற்குள் கை எப்படியெல்லாமோ நடுங்கித் தீர்த்துவிட்டது. ஏன் ?..மனசைத் திடப்படுத்திக் கொண்டு யோசிக்கவே முடியவில்லை, அவனால். இதயத் துடிப்பு சவாரிக் குதிரைபோல் குதி போட்டுக் கொண்டு ஓடுவது போலிருந்தது.

இரண்டாவது மணி அடித்ததும் சேகரனின் கையில் வினாத் தாளொன்றைத் திணித்தார் பேராசிரியர். அதைப் பார்த்தான், அவன். எழுத்துக்கள் விசுவரூபம் எடுத்தன. ஒன்றேனும் உருவாகத் தெரியவில்லை. தலையில் யாரோ சம்மட்டி கொண்டு ஓங்கி ஓங்கி அடித்தார்கள்.

பயங்கரமான அரக்கன் ஒருவன் கோரமாகச் சிரித்த வண்ணம் அவன் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தான்; தொண்டைக்குள்ளே பெரிய பெரிய கல்லுருண்டைகளைத் திணிப்பதற்கு முயற்சி செய்தான்....சுவரில் இருந்த கடிகாரம், மேஜை, நாற்காலி, இதர மாணவர்கள் ..... அந்தப் பரீட்சை மண்டபம்... எல்லாமே சுழன்றன ! ... நளினா, பங்கஜம்...அப்பாவு... யார் யாரோ முன்னால் தட்டாமாலை சுற்றினார்கள்....

சேகரைத் தவிர மற்ற மாணவர்கள் எல்லாருமே, கடைசி வரைக்கும் பரீட்சையை ஒழுங்காக உட்கார்ந்து எழுதிவிட்டு வந்தார்கள். அவனை மட்டிலும் பாதிவேளையில் பரீட்சை மண்டபத்திலிருந்து 'ஸ்டெரச்சரில்' தூக்கிக்கொண்டு வர வேண்டியதாகி விட்டது !

★

னமையில் உறுதியாக,
றைந்த செலவில்
கள் வீட்டை கட்ட
தோர் நவீன முறை!



கரமானது
க்க சுலபம்
வக்கு
தி
க்கும்

சிக்கனமானது
ஜலம் உட்புகாது
தீயை தடுக்கக்
கூடியது

"EVEREST"
ASBESTOS CEMENT
TRAFFORD SHEETS



A.C. ட்ராபோர்டு & ப்ளெயின் ஷீட்டுகள்

A.C. மழை ஜல பைப்புகள்

. KUPPUSAWMY NAICKER

ம். குப்புசாமி நாயக்கர்

ஸ்டாக்கிஸ்டுகள்: ஆஸ்பெஸ்டாஸ் ஸிமெண்ட் லிமிடெட்

5, செம்புதாஸ் தெரு, சென்னை-1

தென்னுட்டின் தலைசிறந்த அச்சகம்

நேஷனல் லித்தோ பிரஸ்

ரயில்வே பீடர் ரோடு, :-: சிவகாசி

தபால் பெட்டி நெ. 30

போன் : 58 & 75 தந்தி : "லித்தோகிராப்"

அழகான முறையில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு எங்களது அச்சகத்தில் தீப்பெட்டி, பீடி, மில், சோப், பயர் ஓர்க்ஸ்,ஜவுளி,காபி, டீ, மிட்டாய், சோடா முதலியவைகளுக்குரிய லேபிள்கள், வால் போஸ்டர்கள் மற்றும் கார்டூன்களும், லித்தோவிலும், ஆப்செட்டிலும் பிரிண்டு செய்து கொடுக்கக்கூடும். காலண்டர்கள், பலவர்ணப் படங்கள், போட்டோ ஆப்செட்டில் தயார் செய்து கொடுக்கிறோம். கவர்ச்சிகரமான பல வர்ணங்கள் கொண்ட பூ பார்டர்கள் உள்ள கலியாண பத்திரிகைகள் ரெடிமேடாக ஸ்டாக் வைத்திருக்கிறோம்.

கிரிஸென் பிரிண்டிங் இங்க் பேக்டரீ

'கிரிஸென்' லித்தோ & ஆப்ஸெட் இங்க் தயாரிப்பாளர்கள்,

"இங்கோகிராப்" :: சிவகாசி

கோயமுத்தூர்

தனலட்சுமி சேலைகள்

DHANALAKSHMI 100s SAREES

Mfrs: Dhanalakshmi Handloom Weavers' Co-op. P.&S. Society Ltd., No.K.1554. Coimbatore.

உத்தரவாத முள்ளவை

Sole Agents for Greater Bombay:
M/S M. KHANDWALA & CO.,
KALBADEVI ROAD, BOMBAY-2.

உழைப்பிலும், தரத்திலும் சிறந்தவை.

தலைவர்
G. மருதாசலம்

தோழிக்கு

திருச்சி வாசுதேவன்

முதற் கடிதம்

சிதம்பரம்,
1—1—58.

அன்புள்ள தோழி,

சென்ற ஒரு மாதமாக உன் கடிதத்தை எதிர்பார்த்து இருந்து விட்டு, இதை எழுதுகிறேன். தாய் வீட்டுக்கு வந்ததும், நீ எழுதிய கடிதத்தில், 'அவருக்கு இப்பொழுது அலுவலகத்தில் நிறைய வேலை இருப்பதால் நான் மட்டுமே வந்திருக்கிறேன். இன்னும் ஒரு வாரத்தில் அவர் வருவார்' என்று குறிப்பிட்டிருந்தாய். நான் எழுதிய கடிதம் உனக்குக் கிடைத்ததா ?

திருமணமான இந்த ஓராண்டுக்குள் எவ்வளவோ மாறிவிட்டாயடி, நீ! மணமாகி நீ உன் கணவருடன் ஊருக்கு ரயிலேறிய பொழுது, என் கைகளைப் பற்றிக் கொண்டு, "வளர்மதி, நிச்சயமாய் வாரம் தவறாமல் கடிதம் எழுதுவேன்" என்று எனக்களித்த வாக்குறுதியை மறந்திருக்க மாட்டாய். 'பெரிய இடத்துப் பெண் அல்லவா ? வாழ்க்கை ஏரியிலே கணவனுடன் இன்பமாய்ப்பொழுது போக்கிக் கொண்டிருக்கையில், இந்த ஏழைத் தோழியை மறந்திருந்தாலும் அதில் ஆச்சரியம் ஏதுமில்லை!' என்று சில வேளைகளில் நான் எண்ணிக் கொள்வதுண்டு. 'பெரிய இடத்துப் பெண்... என்று நம்மைத் தாக்குகிறாளே' என்று என் மீது உனக்குச் சற்றுக் கோபம் கூட ஏற்படலாம். ஆனால் நீ எப்படிப்பட்டவள் என்று எனக்குத்

தெரியாதா? ஆகையால் தான் உண்மையை ஒளிக்காமல் எழுதுகிறேன்.

ஓர் அறைக்குச் சன்னல்கள் இருந்து திறந்திருந்தால், தானே இயற்கையான ஒளியும் காற்றும் உள்ளே புக முடிகிறது. அது போலவே மனித உள்ளமாகிய அறைக்கும் அன்புப் பலகணிகள் அவசியம் திறந்திருக்க வேண்டும். அப்பொழுதுதான் வாழ்வில்அமைதியொளி பரவும்; இன்பக் காற்று வீசும். ஆனால் ஒன்றை மறவாதே. எந்தச் சன்னல் வழியே இள ஞாயிற்றின், இனிய நிலவின் கதிர்க் கற்றைகளும், இன்பத் தென்றலும் உட்புகுந்து நம்மை மகிழ்விக்கின்றனவோ, அந்தச் சன்னல் வழியேதான் வெப்பக் காற்றும் வாடைக் காற்றும் உட்புகுந்து துன்புறுத்துகின்றன. 'இதென்ன வளர்மதி ஏதேதோ எழுதுகிறாளே' என்று நீ வியக்கலாம். காரணத்தோடுதான் எழுதுகிறேன். சிறு வயதிலிருந்து நாமிருவரும் பள்ளித்

"கலியாணம் ஆன பிறகு ஐந்து வருடம் சந்தோஷமாக இருந்தேன் சார்..."

"அதற்குப் பிறகு..."

"இருவரும் சந்தித்தோம்"!

தோழிகளாகப் பழகி வந்திருக்கிறோம். நான் சாதாரண ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள் என்றாலும் வேற்றுமையில்லாமல் என் மேல் அன்பு காட்டி வந்தாய். அதனால் என்னுடைய கவலைகளை யெல்லாம் மறந்திருக்கிறேன்! ஆனால் இப்பொழுதோ, உன் கடிதம் காணமல் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

வாரம் தவறாமல் கடிதம் எழுதுவதாய்க் கூறிவிட்டு, ஊருக்குச் சென்றதும் ஒரு மாதம் கழித்துத்தான் எழுதினாய். போகட்டும். பிறகாவது வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டாமா? ஆறு மாதத்துக்கு முன்பு பல சமாதானங்களைக் காட்டி, "அடிக்கடி எழுதாமல் இருந்ததற்கு மன்னிக்கவும்" என்று எழுதி—சமூகத்தில் 'பெரிய மனிதர்கள்' சிலர் மனமாரப் பெரும் பிழைகள் புரிந்துவிட்டுப் பிராயச் சித்தம் என்னும் பெயரால் ஏதேதோ தந்திரங்கள் செய்து தப்பித்துக் கொள்வது போல்—நீயும் என்னை ஏமாற்றி விட்டாய். ஒவ்வொரு நாளும் தபால்காரர் வரும் நேரத்தில் வாசலுக்கு வந்து, உன் கடிதத்தை எதிர்பார்த்து, ஏமாந்து ஏக்கப் பெருமூச்சுடன் இதயம் வருந்துவதை எப்படியடி உனக்குத் தெரிவிப்பேன்? என் கணவர், "நீதான் தோழி, தோழி என்று நினைத்து நெஞ்சை வருத்திக் கொள்கிறாய்... அவளுக்கோ உன் நினைவு இருப்பதாகவே தெரியவில்லை. எழுதும் பொழுது எழுதட்டும்; வீணாய்க் கவலைப்படாதே!" என்று எத்தனையோ முறை தேற்றியிருக்கிறார். ஆனாலும்...

மணி நாலுக்கு மேலாகி விட்டது. இன்னும் ஒரு மணி நேரத்தில் 'அவர்' வந்து விடுவார். அதற்குள் நான் சிற்றுண்டி தயாரிக்க வேண்டும். கடிதம் எழுதுவதில் பற்பல முன்னேற்ற முறைகளைக் கையாள்பவர்களில் கூடப் பலர், கடைசியில்

'உடனே பதில் எழுதவும்' என்று எழுதுகிற ஒரு சம்பிரதாயத்தை மட்டும் இன்னும் கைவிடாமல் இருக்கிறார்கள் அல்லவா? அந்தப் 'பலரில்' நானும் ஒருத்தியாக இருந்தேன். ஆனால் ஏனோ இப்பொழுது அப்படி எழுதுவதில்லை!

இப்படிக்கு,
நீ மறந்தாலும் உன்னை மறவாத,
வளர்மதி.

இரண்டாம் கடிதம்

சிதம்பரம்,
6—1—58.

அன்பிற்குரிய தோழி
மங்களத்துக்கு,

இன்று சற்று நேரத்துக்கு முன்பு தபால்காரரிடமிருந்து உன் கடிதத்தைப் பெற்றதும், உடனே நான்கு நாட்களில் பதில் எழுதி விட்டாளே என்று எண்ணிக் களித்த என் மனம், துயரக் கண்ணீரில் தோய்த்து எழுதப்பட்ட அதைப் படித்ததும் கவலையால் கலங்கியது.

'மன்னிக்கப்பட முடியாத பெருங் குற்றம், செய்ய வேண்டிய கடமையைச் செய்யாமல் இருப்பதுதான்' என்னும் கருத்துக் கொண்டவர் என் கணவர். ஆகையால் திருமணத்துக்குப் பிறகு இந்த இரண்டாண்டுகளில் நான் எப்படி மாறியிருப்பேன் என்பது உனக்கு ஓரளவு விளங்கியிருக்கும். பெற்று வளர்த்துப் படிக்க வைத்து, பதினெட்டு ஆண்டுகள் பாதுகாத்த பெற்றோர்களால்கூடத் திருத்தப்பட முடியாத என் 'சிறு பிள்ளைத் தனங்களை' எல்லாம் எப்படியோ திருத்தி விட்டதடி, அவருடைய அன்பு. ஆம். அவர் திருத்தவில்லை; அவருடைய அன்புதான் திருத்திற்று!

படித்திருந்தாலும், படிக்காதிருந்தாலும் ஏனோ பல பெண்கள், பணக்காரக் குடும்பங்களில் வாழ்க்கைப்படவே விரும்புகின்றனர். அவ்விதம் வாழ்க்கைப்பட்ட பின்னர் மிகவும் சஞ்சலம் அடைகின்றனர்.

"இந்த ஓட்டலிலே எதையும் சுத்தமாக வைத்துக்கொள்கிறார்கள்"

"ஆமாம், ஆமாம். அதனால்தான் நேற்று ரசத்தில் கூட சோப்புக் கட்டியைப் போட்டு வைத்திருந்தார்கள்!"

எல்லாக் குடும்பங்களையும் பற்றிக் கூறவில்லை. பெரும்பாலான பணக்காரக் குடும்பங்களில் உள்ள குறைபாடுகள் முதலில் வெளியே தெரிவதில்லை என்றுதான் கூறுகிறேன். காரணம், அவர்கள் உடுத்தும் பகட்டான பட்டாடைகளும், பூவும், வகை வகையான பொன்னணிகளின் மின்னொளியும், அந்தக் குறைகளை மிக மிக அழகாகத் திரையிட்டு விடுகின்றன.

'இவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன?' ஏதோ நம் வருத்தத்தைத் தெரிவித்தால், ஆறுதலாகக் கூறாமல் பெரிய பாட்டி மாதிரி கதைகள் சொல்லுகிறாளே!' என்றுகூட என் மேல் நீ வருத்தங் கொள்வாய். அடி, மங்களம்! வெறும் ஆறுதல் வார்த்தைகளால் மட்டுமே மற்றவர்களின் மன வருத்தத்தை முற்றிலும் மாற்றிவிட முடியும் என்று நான் நம்பவில்லை. துன்புறுகிறவர்களுக்குக் கூறும் ஆறுதல் மொழிகள் எல்லாம்,

ரூபாய்க்கு ஒரு (புதுக்) காசு அளவில்தான் பலனளிக்கும். ஆயிரம் வார்த்தைகளை ஆறுதலாகக் கூறுவதை விடச் செயலளவில் ஒரு துரும்பை அசைத்து உதவினாலும் எவ்வளவோ மேல் அல்லவா? அங்ஙனம் இயலாத நிலையில் கண்ட, கேட்ட, அநுபவித்தவற்றைச் சொல்லி, வாழ்வில் நம்பிக்கையற்ற உள்ளத்தை நன்முறையில் திருப்பி, வாழ்வில் பற்றுக் கொள்ளச் செய்வதே சிறந்தது.

'எனது துக்கச் சுமை கழுத்து முறியும் அளவுக்குப் பொறுக்க முடியாததாகி விட்டது. இனி நான் தற்கொலை என்னும் சுமைதாங்கியைத்தான் தஞ்சமடைய வேண்டும்!' என்று உனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறாய். பள்ளியில் தான் வாழ்க்கைக்கு உதவாத பாடங்களைப் படித்துப் பொழுது போக்க நேர்ந்தது. ஆனால் மணமான பின்பாவது இந்த உலகப் புத்தகத்தின் அநுபவ ஏடுகளில் உள்ள உண்மைகளை உணர்ந்து கொள்வாய் என நினைத்தேன். நீயோ ஒரு பக்கத்தைக் கூடப் புரட்டிப் பார்க்காமல் இருந்து விட்டாய். 'திருமணத்துக்குப் பிறகு ஒருமுறை கூட நம் வீட்டுக்கு வராதவள் இப்படி எழுதுகிறாளே' என்று நீ திகைக்கலாம். நீ எழுதிய கடிதந்தான் உன் உள்ளத்தைக் காட்டும் கண்ணாடியாய் இருக்கிறதே, அது போதாதா?

'தங்கள் செல்வச் சிறப்பிற்கு ஏற்ப, ஒரு பெரிய பணக்காரக் குடும்பத்துக்குப் பெற்றோர்கள் என்னைப் பலியிட்டு விட்டார்கள்!' என்று படபடப்போடு எழுதியிருக்கிறாய். ஏனடி, கள்ளி! திருமணம் நிச்சயமானதும், வரப்போகும் உன் கணவருடைய செல்வக் குடும்பத்தைப் பற்றி எவ்வளவோ சிறப்பாய் என்னிடம் கூறித் திருப்தி யடைந்தாய் அல்லவா? ஆனால் இப்பொழுதோ 'என்னைப் பலியிட்டு விட்டார்கள்' என்று உன் பெற்றோர்கள் மீது பழி சுமத்துகிறாய்.

மங்களம், உண்மையாகச் சொல்கிறேன். வீட்டில் என்னதான் புயல் வீசிக் கொண்டிருந்தாலும், அதற்காகக் கணவனை வெறுத்து விட்டுத் தனியே தாய் வீட்டுக்கு வந்து விட்டாயே, இது அழகன்று. உன்னுடைய இந்த அறியாமைக்கு நான் ஒரு பொழுதும் அநுதாபப்படமாட்டேன். 'என் கணவரின் சகோதரர்கள், குடி கெடுக்க வந்தவள் என்று என்னைக் கூறியதால் மனங் குமுறி வந்து விட்டேன்' என்கிறாய். உன் கணவரோ, பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளையாகப் பிறக்கவில்லை. அவருடன் பிறந்தவர்கள் இருவர் இருக்கின்றனர். அப்படி யிருக்கையில் மூவருக்கும் பொதுவான சொத்தைத் திடீரென்று உன் கணவர் பிரித்துக் கொண்டுவிட முடியுமா? நீ உன் கணவருடன் தனிக் குடித்தனம் நடத்த விரும்புவது நியாயந்தான். ஆனால் நியாயத்தைச் சொல்வதிலும் பரிபாலிப்பதிலும் கூட எவ்வளவோ நிதானிக்க வேண்டியிருக்கிறதே! அதை நீ மறந்து விட்டு உன் ஓரகத்தியருடன் வாதிட்டது சிறிதும் சரியில்லை என்றே கூறுவேன். நாளடைவில் சிறிது சிறிதாக உன் கணவரிடமே விவரங்களைக் கூறிச் சொத்துக்களைச் சுமுகமாகப் பிரித்துக் கொள்ளச் செய்திருக்கலாம். ஆனால் நீயோ பிறந்த வீட்டில் செய்த அதிகாரத்தையும், பிடித்த பிடிவாதத்தையும் அங்குக் காட்டியிருக்கிறாய். முடிவு? இப்பொழுதும் ஒன்றும் கெட்டு விடவில்லை. முயன்றால் பயனுண்டு. நீ பெண் என்பதை உணர்ந்து கொள். பெண்மையோடு நட. ஆனால் அடிமையைப் போல் இருக்கச் சொல்லவில்லை!

அடி, மங்களம்! என்னை நீ வெறுத்தாலும் சரி. எனக்குத் தோன்றியதை உனக்கு எழுதக் கடமைப் பட்டவள்; ஆகையால்

எழுதுகிறேன். தந்தை பெரிய பணக்காரர் என்ற உன் கர்வமும், மனம் பண்படாத-வெறும் பொய்யான-ஆடம்பரக் கூத்தை நாகரீக மென்று நம்பிய பேதைமையுந்தான், வாழ்க்கையை உனக்கு நரகமாகக் காட்டியிருக்கின்றன. ஆம், மீண்டும் வலியுறுத்துகிறேன். 'நரகத்தில் உழல்கிறேன்' என்று எழுதியிருக்கிறுயே, என்ன பைத்தியகாரத்தனம்! நரகம் என்பது என்ன தெரியுமா? வாழத்தெரியாதவர்கள் நெஞ்சில் குழம்பிக் கிடக்கும் மடமையான நினைவுச் சேறுதான் நரகம். அதில் தான் நீ அழுந்தியிருக்கிருய் இனி எனக்குச் சாந்தி கிடைக்குமா? என்று ஏங்குகிருய். நிச்சயம் கிடைக்கும். சாந்தியையும் சலனத்தையும் நாமே உண்டாக்கிக் கொள்ளுகிறோம் என்பதை நீ அறிந்தால் ஆச்சரியப்படுவாய்.

சுற்றி வளைத்துச் சொல்வதை விடச் சுருக்கமாகத் தெரிவிக்கிறேன். ஒரு பெண்ணுக்குத் தன் கணவனின் அன்பைத் தவிர வேறெதுவுமே தேவையில்லை என்பேன். நீ அந்த அன்புக்காக உடனே அவரைத் தேடிச் சென்றுதான் ஆகவேண்டும். 'என்ன, கோபமாய் வந்து விட்டுத் திரும்பவும் அவர் முகத்தில் எப்படி விழிப்பது?' என்று தானே அஞ்சுகிருய். அஞ்சாதே, உடனே புறப்படு! மானம், குடும்பத்தின் மதிப்பு இவற்றைக் கருதாமல் வலிய எப்படிச் செல்வது என்று சிந்திக்கிருயா? இன்னும் சற்றுச் சிந்தித்துப் பார்! எந்த மனத் தைரியத்தோடு தாய் வீட்டுக்குப் புறப்பட்டு வந்தாயோ, அந்தத் தைரியத்தோடேயே கணவர் வீட்டுக்குப் புறப்படு; எல்லாம் சரியாகிவிடும். அவருடைய அன்பைத் தவிர வேறு எதனுலும், உன் வாழ்வு சாந்தி பெருது. மங்களம், வருந்தாதே. உன் மீதுள்ள அன்பில் சற்று உரிமையோடு எழுதியிருக்கிறேன். அவ்வளவுதான்.

உன் நல்வாழ்வை விரும்பும்,

வளர்மதி.

மூன்ரும் கடிதம்

சிதம்பரம்,

26—1—58.

தோழி மங்களத்துக்கு,

உன் கடிதத்தைப் படித்ததும் முதலில் நம்பவே முடியவில்லை. 'என்னுடைய எல்லாத் தவறுகளையும் ஒப்புக் கொண்டு என்னை மன்னிக்கும்படி அவருக்கு எழுதினேன். அவரே நேற்று வந்து விட்டார், என்னை அழைத்துச் செல்ல!' என்று எழுதியிருக்கிருய். பார்த்தாயா? இத்தகைய அன்புத் துணைவரை விட்டுப் பிரிந்துவர எப்படி உன் மனம் துணிந்தது? பயந்து விடாதே. அதிகம் எழுத எனக்கு இப்பொழுது உடல் நிலை இடந்தரவில்லை; அடிக்கடி வாந்தியும், மயக்கமும் வாட்டுகின்றன; நீ உன் கணவருடன் ஊருக்குப் புறப்படும் மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்ததற்குப் பரிசாக, நானும் உனக்கு அடுத்த மாதம் ஒரு செய்தி அனுப்பப் போகிறேன். என்ன, ஆச்சரியத்துடன் விழிக்கிருயா? 'போடி, நான் பெண்தானே! வெட்கப்படுவதில் என்ன பிழை? பதினேராம் நாளில் நடைபெறப்போகும் பெயர் சூட்டு விழாவுக்குக் கடிதம் எழுதுவேன். அவசியம் நீ உன் கணவருடன் இங்கு வரவேண்டும். இப்பொழுது புரிகிறதா?

உன் உயிர்த் தோழி,

வளர்மதி.

ஸ்ரீ வெங்கடேசா மில்ஸ் லிமிடெட்

வெங்கடேசா மில்ஸ் போஸ்ட்

உடுமலைப்பேட்டை.

தந்தி : "VENKATESA" போன் : 66

❋

எல்லா வகையிலும் முன்னணியில் நிற்கும்
ஒரு தென்னிந்திய பஞ்சாலை.

❋

நூல் :— 20, 40, 60, 80 பருத்தி நூல்
2/40 செயற்கையிழை நூல்.

துணி:— '801' & '1001' மல்.
'SV 35' & 'SV 555' லாங்க்ளாத்

❋

நிர்வாகப் பொறுப்பினர் :—

G. V. கோவிந்தசாமி நாயுடு & கம்பெனி

ஆலை நிர்வாகி:—

R. முத்துசாமி, B.A., B.Sc.(Tech) A.T.I.

நாட்டியம்

ரஞ்சன்
பி. ஏ., எம்.லிட்.

வட இந்தியாவும் நாட்டியமும்:

வடஇந்தியக் கலையில் காலத்தின் செல்வாக்கு நன்கு அறியப்படுகிறது. ராமாயண காலத்திலும், ஏன் அதற்கு முன்பு கூடச் சிறந்த நிலையில் இருந்த இது சாதாரண ஜனங்களிடையே வழக்கத்திலிருக்கவில்லை. அப்பொழுது அதில் காணப்பட்டது தேவதைகளின் துதியேயாகும். பக்தியை அடிப்படையாகக் கொண்டு பூசிப்பது, வணங்குவது போன்ற வேறு பாடுகள் காணப்பட்டாலும், கலையின் போக்கு ஒரு சுவைப்பட்டதாகவே அமைந்திருந்தது. பின்பு மஹாபாரத காலத்தில் இக்கலை புரட்சிகரமான மாறுபாடு கொண்டிருந்தது. பழையமுறை, முற்றிலும் மறைந்த நிலைக்கு வந்துவிட்டது. இடம் பிடித்துக் கொண்ட புதுக் கலை மிக்க ஒளியுடையதாக இருந்தது. இது தனி யுகத்தையே உண்டாக்கிய, கண்ணபிரானுடைய காலம். 'நட நாகரன்' என்பது அவனுடைய சிறப்பான பெயர். குழந்தைப் பருவ முதலே கண்ணன் நிருத்தியத்தில் ஆர்வம் காட்டிய தோடல்லாமல் தானே ஒரு நிருத்திய முறையையும் வகுத்தானென்றும், அவனுடைய காலத்திலே அது மகோன்னதமான நிலைக்கு வந்து விட்டதென்றும் கூறப்படுகிறது. 'கிருஷ்ணமதம்' என்ற பெயராலே ஒருவகை நிருத்தியம் நிரந்தரமாகி, நவரஸங்களும் ததும்ப நிலை பெற்றது. 'சிவமதம்' 'அநுமான் மதம்' என்றெல்லாம் இருந்து வந்தவைகள் ஒளி மங்கி இருந்த இடந்தெரியாமல் போய் விட்டனவாம். கண்ணனுடைய சீடர்களான சுபத்திரையும், அர்ச்சுனனும் இதைத் தேவருலகத்திற்கும் விருந்தாக வழங்கினர் என்றும், சுருக்கமாக இக் காலத்தை 'நிருத்தியக் காலம்' என்று வழங்குவது, மிகையாகாதெனவும் கருதப்படுகிறது. இசை, சிற்பம், சித்திரம் கட்டிடக்கலை ஆகிய இவைகள் எல்லாம் இக்காலத்தில் தான் நிருத்தியக் கலையுடன் கலந்து போயினவென்று கருதி, இதற்கு எடுத்துக் காட்டாகப் பழைய கோயில்களிலுள்ள சிலைகள் காட்டப் படுகின்றன.

சீர்குலைவும் புனருத்தாரணமும்:

இதன் பின்பு காலம் பலமாகப் புரண்டு கொடுத்தது. அரசியல் சூழ்நிலை மிகவும் கொந்தளிப்பாகிவிட்டது. குட்டி ராஜ்யங்களின் எண்ணிக்கை வளர்ந்து குவியலாயிற்று. ஹூணர்களும், சகர்களும் நாட்டின் மீது படையெடுத்து வந்தனர். எங்கு பார்த்தாலும் ஒரே கொந்தளிப்பு. முடிவாக நிருத்தியக்கலை பயங்கரமான படுதாவினுள்ளே மறைந்து கொண்டது. தேவதைகளை மகிழ்விக்கத் தேவதாசிகள் மட்டும் ஆடினார்கள். வெற்றி வீரனை மகிழ்விக்க அடிமைகள் ஆடினார்கள். பொது ஜனங்களோ மெள்ள மெள்ள நிருத்தியக் கலையை மறக்கலானார்கள். அவர்களுக்கு முன்பாக ஒளியுள்ள பட்டாக் கத்திகளும் செங்குருதியின் வெள்ளோட்டமுமே தாண்டவமாடின. இம்மாதிரியாக, நிருத்தியம் தேவதைகளுக்கு மகிழ்வூட்டும் கருவியாகவேமறுபடியும் மாறிவிட்டது. பின்பு வந்தது மொஹலாயர்களுடைய படையெடுப்பு. திசைகள் அபயக்குரலில் எதிரொலித்தன. இன்பம், களிப்பு இவைகளுக்குப் பதிலாகத் துன்பக் கதறலும், எளியவருடைய அலறலும், மனித உள்

னத்தையே மாற்றி விட்டன.

நிருத்தியம் என்று ஒரு சொல் லும் நினைவிற்கு வர மறுத்து விட் டது. ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கப் பட்டவர்கள், அரண்மனை அலங் காரப் பொருள்களாக மாறினர். மறுகணம் ஆலயத்திலிருந்த தேவ தாசிகளும் அந்தப்புரத்திலிருந்த குடும்பப் பெண்களும் இழுத்து வந்து நிறுத்தப்பட்டனர். கத்தி முனையைக் கண்டு அடிமைத்தனம் ஆட முற்பட்டது. கதியற்ற நிலையில் கூத்தும் குதித்தது.

செம்மையுடன் பொலிந்த நிருத் தியக்கலை, மிருகத்தனத்தின் முன்பு 'கிரீச்' சென்று கதறி ஓலமிட்டது. என்ன பயன்? மனித மிருகங்களுக்கு ஆனந்தமேற்படவில்லை. கலாசார மில்லாத வெளிநாட்டுப் போர்க் குணம் கலையில் ஆனந்த மடைய முடியவில்லை. புதிய கட்டளை பிறந் தது; 'ஆடவேண்டாம்; உடம்பை நெளித்துக் கொண்டு கோப்பையில் சாராயம் ஊற்றுங்கள்!' என்று கட்டளை பிறந்தது. பாரத நாட்டின் வாழையடி வாழையாக வளர்ந்த கலைப் பொக்கிஷம், கோப்பை யளவு சாராயத்தில் முழுகிப் போயிற்று! மொஹலாய ஸாம்ராஜ்யம் நிலை நிறுத்தப்பட் டது. பாரத தேசத்தில் பாரஸீக ஆட்டம் இடம் பிடித்துக் கொண் டது. பெயரென்னவோ நிருத்தி யந்தான்; இந்தியப் பண்பு மட்டும் எடுக்கப்பட்டு விட்டது.

காமத்தைக் கிளரும் ஆபாசக் கருத்துக்கள் நிருத்தியத்துள் புகுந்து பொதுமக்களுடைய உள்ளங்களில் நிலையான இடம் பெறலாயின. நிருத்திய ஆசிரியர்களும், பொது மக்களுடைய விருப்பத்தை நன் ருய் அறிந்தார்கள். வெறியைத் தூண்டும் ஆட்டமும், பாட்டுந்தான் அவர்களுக்கு வேண்டுமென்று ணர்ந்து, அதற்கேற்றபடி தங்களை மாற்றிக் கொண்டு விட்டனர். என்ன செய்வது? காமச் சுவை யுள்ள கீதமும், மதங் கொண்ட மங்கையரின் காற் சதங்கை யொலி யுமே கலை விருந்தாகி விட்ட பிறகு வேறு வழி? தாளத்திற்கு முக்கி யத்துவமும் இப்பொழுது தான் உண்டாகியது; கலாசிரியர்கள் 'கதக்' வேஷத்தில் வெளி வரலா ஞர்கள். தப்லா பேசும் தாளவரிசை களைக் கால் வழியாக வெளியிட்டு, விசித்திர முறையில் 'கதக்' புறப் பட்டது. சமயோசிதமாக அமைத் துக் கொள்ளப்பட்ட இது இப் பொழுது பாரத நாட்டியத்தின் அம் சங்களையும் சிறிது சேர்த்துக் கொண்டு ஒருவகை நடனமாக இருந்து வருகிறது. நிருத்திய நடர் கள், மேடைக்கு வராமல் மறைந்து கொண்டார்கள். நடிகள் மட்டும் 'ஸாகி' என்பதாக வியாபார முறையில் வெளி வரலானர்கள்,

கலையிலிருந்த கலை போய்விட் டது. மைனர்களுடைய பொழுது போக்கிற்குச் செல்வம் பலியாகி விட்டது. நல்லொழுக்கம் நசித்துப் போயிற்று. இந்த உலகத்தையே, கந்தர்வ நகரமாக்கி வந்த கற்பனை கள் குறைவுபட்டு, போன இடந் தெரியவில்லை. பொதுமக்கள் போக்கை மாற்றிக் கொண்டு விட் டனர். குடும்பத் தலைவர்கள் நிருத் தியத்தை வெறுக்கவே தலைப்பட்ட னர். கலையாசிரியர்களுடன், கலை களும் வாட ஆரம்பித்தன. ஆடம் பரமெல்லாம் அடங்கியது. ஆயி னும் என்ன? அடிமைத் தனம் என்ற புதிய விலங்கு வந்து விட் டதே!

'புதுமை' சந்தாதாரர்களுக்கு

தாங்கள் 'புதுமை' காரியாலயத் திற்கு எழுதும் எல்லாக் கடிதங்களி லும், தங்கள் சந்தா எண்ணைக் குறிக்க வேண்டுகிறோம். சந்தா எண் குறிப்பிடப்படுவதால், உடனுக் குடன் பதிலெழுத சாத்தியமாகும் என்பதையும் தெரிவித்துக் கொள் கின்றோம். —'நிர்வாகி'.

197670.

‘சீனத்துப்பட்டாசு’—அது அந்தக் காலம்!

‘சிவகாசிப் பட்டாசு’—இது இந்தக் காலம்!

பட்டாசு உற்பத்தியில் பாரதத்தை முன்னணியில்

நிற்க வைக்கும் பெருமை எங்களுடையது!

ஸ்ரீ காளீஸ்வரி பயர் ஒர்க்ஸ்,

சிவகாசி. (தென் இந்தியா)

For everything in ***PRINTING***



Please Contact

THE KARCO LITHO WORKS

PHOTO OFF-SET & LITHOGRAPHIC PRINTERS

EQUIPPED WITH LATEST MACHINERIES & EXPERT PRINTERS

POST BOX No. 56, SIVAKASI

பீடி சக்கரவர்த்தி
தா.பி.சொக்கலால்
ராம்சேட் பீடி
TRADE MARK
REGISTERED
RAMSAIT
BEEDI
தா.பி.சொக்கலால்
முக்கூடல்
ராம்சேட்
பீடி
INDIA No.5901
CEYLON No.5929
BY
RAJAN & Co. SVKS.

சீமான்களும்
சீமாட்டிகளும்
என்றும் விரும்புவது
சீமாட்டி
ஸ்டோர்ஸ்
துணிகளையே!
சீமாட்டி ஸ்டோர்ஸ்
சாலைபசார், திருவனந்தபுரம்.

வெற்றிகரமாக
ஓடுகிறது

:O:

தேவர் பிலிம்ஸ்

நீலமலைத் திருடன்

டைரக்ஷன்—திருமுகம் ஸ்டூடியோ —வாஹினி

Edited and Published by K. T. Kosalram and Printed by G. Rengiah, Manager, Mohan Ram Press, at 283-A, T. H. Road, Madras-5.